படைப்பு
ஊற்று: 2 | நதி: 2 | ஜூன் 2019 | திங்களிதழ்
www.padaippu.com

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்




## “சாதாரண மனிதனைவிட எழுத்தாளன் எந்த வகையிலும் உயர்ந்தவன் கிடையாது”

■ எழுத்தாளர் நாஞ்சில் நாடனுடனான நேர்காணல்



நான் தரிசித்த மகாகவி...!
– ஆரூர் தமிழ்நாடன்



நடைச்சித்திரங்களில் நடக்கும் திருவிழா...
– தஞ்சாவூர்க் கவிராயர்



நெஞ்சில் உறைந்தவை
– லீலாசுகன்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 2 | நதி: 2 | ஜூன் 2019

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

தலைமை நிருபர்:
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள்
அவரவர் கருத்துக்களே. கதை மற்றும்
கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே,
படைப்பு தகவு மின்னிதழின்
கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** - பக். 04
- **“சாதாரண மனிதனைவிட எழுத்தாளன் எந்த வகையிலும் உயர்ந்தவன் கிடையாது”**
  - எழுத்தாளர் நாஞ்சில் நாடனுடனான நேர்காணல் - பக். 05
- **நான் தரிசித்த மகாகவி...!**
  - ஆரூர் தமிழ்நாடன் - பக். 16
- **நெஞ்சில் உறைந்தவை**
  - லீலாசுகன் - பக். 19
- **கவி கா.மு.ஷெரீஃப்**
  - முகம்மது பாட்சா - பக். 24
- **அன்றில்**
  - சக.முத்துக்கண்ணன் - பக். 27
- **சி.மோகனின் கவிதைப்பெண்கள்**
  - கவிஞர் விக்ரமாதித்யன் - பக். 30
- **நடைச்சித்திரங்களில் நடக்கும் திருவிழா...**
  - தஞ்சாவூர்க் கவிராயர் - பக். 39
- **மறைநீர்**
  - கோ.லீலா - பக். 40
- **“வாழ்க்கை சலிச்சிருச்சு.. ஓவியம் சலிக்கல”**
  - ஓவியர் ஜீவா நந்தன் - பக். 43
- **அறியப்படாத தமிழ்மொழி**
  - த.க. தமிழ்பாரதன் - பக். 47
- **முழு உருமாற்றம்**
  - சன்மது - பக். 52
- **தமிழ் கொடுத்த கொடை**
  - பூ.இரவிக்குமார் - பக். 59

- **தாமஸ் கோஸ்டா ட்ரான்ஸ்ட்ரோமெர்**
  – தா. ஜோ. ஜூலியஸ் – பக். 61



## சிறுகதைகள்


- **பிரளய காலத்தவன்**
  – அண்டனூர் சுரா – பக். 33
- **கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்**
  – புதுமைப்பித்தன் – பக். 55


## கவிதைகள்


- **மனுஷ்யபுத்திரன்** – பக். 15
- **தண்ணீருலகம்** – பக். 22
- **அனாமிகா** – பக். 29
- **படைப்புலகம்** – பக். 37
- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 9**
  – ஜின்னா அஸ்மி – பக். 42
- **பெண் பலி**
  – அனார் – பக். 51
- **கண்டராதித்தன்** – பக். 60



அட்டைப்பட ஓவியம்:
- **ஜீவா நந்தன்**

# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' பதினான்காம் மின்னிதழ் உங்கள் கண்முன் விரிந்துபரந்திருக்கிறது.

படைப்புகள் சமகாலப் பிரச்சனைகள் குறித்துத் தீவிரமாக விவாதிக்க வேண்டியது அவற்றின் அடிப்படையான கடமை. சமகாலத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை சமூகத்தின் தவிர்க்கஇயலாத ஒரு பிரச்சனையாக உருவெடுத்திருப்பது அனைவரும் ஆழ்ந்துசிந்திக்க வேண்டிய ஒன்று. இதற்கான அரசியல், புவியியல், சுற்றுச்சூழல் காரணங்கள் பல கூறப்பட்டாலும் மனித இனத்தின் மாபெரும் தோல்வியாகத்தான் இதை அணுகவேண்டியுள்ளது.

தண்ணீர் குறித்து அழகியலுடன் பேசிய படைப்புகள் தமிழில் குறிப்பிடத்தக்க அளவில் உண்டு. தண்ணீர்ப் பஞ்சத்தைப் பேசிய படைப்புகளில் பரவலாகக் கவனம் பெற்றவை அசோகமித்திரன் எழுதிய தண்ணீர் நாவலும் கோமல் சுவாமிநாதனின் தண்ணீர் தண்ணீர் நாடகமும். தண்ணீர் தண்ணீர் ஒரு சமூக நாடகம் என்ற விவரிப்புடன் பாட நூலாகவும்கூட ஏற்கப்பட்டது.

அசோகமித்திரனின் தண்ணீர் நாவல் தமிழ்ப் படைப்புலகில் குறிப்பிடத்தக்க ஒன்று. மனித உணர்வுகளைத் தண்ணீருடன் இணைத்து வடிக்கப்பட்ட நாவல். எளிய மொழிநடை.. எளிய மனிதர்களின் வாழ்க்கைச் சூழல் என விரிந்தாலும் அதன் ஆழம் மிக வலிமையானது. சென்னை வாழ்நிலை தண்ணீருக்கான போராட்டச் சூழல் தளத்திலேயே எழுப்ப நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதைக் கனமாய் விளக்கும் நாவல் அது. நீரற்ற சமூகமும் அதனால் நீர்மையற்ற சமூகமும் அதில் அப்படியே சித்தரிக்கப்பட்டிருக்கும். பெண்மைத் தவிப்பும் தண்ணீர்த் தவிப்பும் இழைந்து பின்னப்பட்டிருக்கும்.1971இல் உருவாக்கப்பட்ட அந்தப் படைப்பு அதற்கான அதிர்வுகளை இப்போதும் நமக்குள் எழுப்பியபடி இருக்கிறது.

இவ்இதழில் புவியை மையங்கொண்டுள்ள ஆதாரப் பிரச்சனையான தண்ணீர்ப் பிரச்சனை குறித்த கவிதைகளும் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. படைப்பு, சமூகம் நோக்கிய தன் கடமையைப் படைப்பாகத்தான் வெளிப்படுத்தும். படைப்பின் நீட்சியாகச் செயல்பாடுகளைச் சமூகம்தான் முன்னெடுக்கவேண்டும்.

படைப்புக் குழுமத்தால் நடத்தப்பெற்ற 'வேர்த்திரள்' என்னும் பொருண்மையிலான கவிதைப் போட்டியும்கூட சுற்றுச்சூழல் குறித்த ஒரு ஆழ்ந்த சிந்தனையைக் கவிஞர்களிடத்து எழுப்பியதை உணரமுடிந்தது. காடழிவு என்பது மனித குலத்தை மெல்லக் கொல்வதற்கான நச்சுச் செயல். காடும் நாடும் வேறல்ல.. இரண்டின் வேர்களும் பின்னிப் பிணைந்தவை. தரைமேலே தனித்தனியாய்த் தென்பட்டாலும் ஆழத்தில் இரண்டும் ஒன்றுதான். காட்டை அழிக்கும் கோடரிகள் மனித குலம் தன்னையே அழிக்க ஏந்தும் கோடரிகளாகத்தான் தென்படுகின்றன. அந்தக் கோடரிகளைச் சுட்டிக் காட்டி எச்சரிக்கும் படைப்புகள்தான் 'வேர்த்திரளாய்' உருவாக்கம் பெற்றன. அக்கவிதைகள் தொடர்ச்சியாய்த் 'தகவு' இதழிலும் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

தமிழின் அழகியல் எழுத்தாளர் 'நாஞ்சில் நாடன்'. 'எழுத்து என்பது வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் முயற்சி; என் சுயத்தைத் தேடும் முயற்சி!' என்ற தீர்க்கத்துடன் எழுதிவரும் நாஞ்சில் நாடனது நேர்காணல் இவ்இதழில் வெளியாகியுள்ளது. இன்னும் சிறுகதைகள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– **ஆசிரியர்** ■

• கவிஜி



# "சாதாரண மனிதனைவிட எழுத்தாளன் எந்த வகையிலும் உயர்ந்தவன் கிடையாது"

## - எழுத்தாளர் நாஞ்சில் நாடனுடனான நேர்காணல்

கிட்டத்தட்ட நாற்பது வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து எழுதிக்கொண்டும் தேவையானபோதெல்லாம் தன் கருத்துக்களை ஆழமாகப் பதிவு செய்துகொண்டும் சமூகத் தளத்தில் எந்தச் சமரசமும் இன்றி இயங்கிக்கொண்டும் இருப்பவர். அரசியல்..சினிமா..இலக்கியம்.. நவீனம்..நீர்..சாதி..சாமி என்று அவரிடம் பேச அத்தனை இருந்தது. எல்லாத் தளத்திலும் தனக்கான பார்வையை வெகு நியாயமாக வைக்கும் ஆகச் சிறந்த படைப்பாளி.. படிப்பாளி.. நாஞ்சில் நாடன். சாகித்ய அகாதமி விருது வாங்கியவர். தனது ஊரையே பெயராக மாற்றிக்கொண்டவர். ஒரு ஞாயிறு காலையில்.. கோவைப்புதூரில் இருக்கும் அவரின் இல்லத்தில் சந்தித்துப் பேசியதிலிருந்து...

**ஓர் எழுத்தாளன் தொடர்ந்து எழுதிக் கொண்டேதான் இருக்கவேண்டுமா...?**

என்னுடைய முதல் நாவல் தலைகீழ் விகிதங்கள். 1975ல எழுதினேன். நாப்பத்திமூனுவருஷம் ஆச்சு. தலைகீழ் விகிதங்கள் மொழி அல்ல..இப்போது இருக்கும் என்னுடைய மொழி. என்னுடைய பயணத்தின்போது என் மொழி செழுமை அடையுது. நான் ஒன்னுமே அதுக்கப்புறம் எழுதலன்னு வைங்க.. என் மொழி அங்கயேதான் இருக்கும். என்னுடைய பயிற்சியின் மூலம் திரும்பத்திரும்பச் செய்வதன் மூலம் என் மொழிக்குள்ள சில சாத்தியப்பாடுகளை நான் கண்டடைகிறேன். இதுக்குத் தொடர்ந்து நீங்க எழுதணும். இலக்கண ரீதியா மொழிக்குள்ள ஒரு ஒத்திசைவு இருக்கு. இது கவிதைக்கு ரொம்ப முக்கியமான விஷயம். ஹோமோஜெனிட்டிதான் கவிதைக்கு ஒரு இசைத்தன்மையைக் கொண்டு வருது. இசைத்தன்மை என்பது சரிகமபதநி இல்ல. இரண்டு சொற்கள் புணருகிறபோதே அங்க ஒரு இசைத்தன்மை வந்துரும். வல்லினத்தையும் மெல்லினத்தையும் சேர்க்கையில் அந்த ஓசை வராது. இதுக்கு ஒரு பயிற்சி தேவையா இருக்கு. இலக்கணம் எல்லாம் என்னுடைய சவுகரியத்துக்குத்தான். ஆயுதப் பயிற்சி உடையவனுக்குப் பயிற்சியின் காரணமாக ஆயுதத்தை எப்படிப் பயன்படுத்தினாலும் அவன் இலக்கை நோக்கிப் போயிடுவான். அந்த மாதிரி எழுத எழுதத்தான் ஒரு தெளிவு பிறக்கும். அதுக்காகத்

தெளிவின் காரணமாக் கிழக்க உதிக்கற சூரியன் மேற்க உதிச்சிடாது. முப்பது வருஷம் முன்னாடி நீ இப்படி எழுதினியே... இப்போ இப்படி எழுதறியேன்னா... அது என்னுடைய மெச்சூரிட்டி. அன்னைக்கு அத நம்பினேன். இன்னைக்கு இத நம்பறேன். இன்னைக்கு நான் நம்பறதத்தான் நீங்க கணக்குல எடுத்துக்கணும். நானும் வளர்கிறேன். அனுபவம் பெறுகிறேன். வாசிக்கிறேன். சூழலைக் கவனிக்கறேன். தொடர்ந்து எழுதுகிறபோதுதான் வளமான எழுத்து சாத்தியம். பயிற்சி ரொம்ப முக்கியம். நாம நம்மைப் புதுப்பிச்சுக்கிட்டே இருக்கணும். சிலர் எழுதறத நிறுத்தற மாதிரி வாசிக்கறத நிறுத்திட்டாங்க. ஜி.காரல்மார்க்ஸ் என்ன எழுதிட்டு இருக்கார்னு எனக்குத் தெரியணும். சம காலத்தப் படிக்காம நீங்க எப்படி எழுத்தாளரா இருப்பீங்க...!

**நாஞ்சில் நாடனுக்கும் சுப்ரமணிக்கும் இடையே இருக்கும் மிக நுட்பமான ஓர் ஒற்றுமை சொல்லுங்கள்...!**

சுப்ரமணி கண்டதையெல்லாம்தான் நாஞ்சில் நாடன் எழுதிக்கொண்டிருக்கிறான்.

**நாகர்கோயிலுக்கே சென்றுவிட வேண்டும் என்று எப்போதாவது யோசித்திருக் கிறீர்களா...?**

ஒரு காலத்துல நினைச்சேங்க. ஒரு பத்துப் பதினைஞ்சு வருசத்துக்கு முன்னாடி செத்துப் போறதுக்குப் பழையாத்தங்கரைக்குப் போயிறணும்னு நினைச்சேன். கண்ணியாகுமரி மாவட்டத்துல பழையாறு முக்கியமான ஆறு. ஆத்தங்கரைலதான் அந்த ஊரு. செழிப்பான ஊரு. பழையாத்துத் தண்ணி குடிச்சு வளந்தவன். அதனால அங்க போயிரணும்னு நினைச்சேன். இப்போ அந்த நினைப்பு இல்ல. கோவை குனியமுத்தூர் மின் மயானமே போதும்னு தோணுது. இங்கதான் நண்பர்கள் அதிகமா இருக்காங்க. நாஞ்சில் நாடன்னு பேர் வெச்சிருக்கோம். இருபத்தஞ்சு வயசு வரை ஊர்லதான் வாழ்ந்திருக்கோம். ஆனா இப்போ எனக்கு அங்க போகணும்னு தோணல.

**கோவைப்புதூரில் இருந்து சும்மா டவுன்ஹால் வரை வந்து போகும் உங்கள் பயணம் குறித்துப் பகிர்ந்து கொள்ளுங்களேன்...!**

பயணத்தின்போது சக மனிதர்களோடு இருக்கறோம். பேருந்தில் வரக்கூடிய பெண்கள் பெரும்பாலும் வீட்டு வேலை செய்யக் கூடியவர்கள்தான்.

எல்லாரையும் கவனிச்சிட்டு வருவோம். கதை எழுதறதுக்காகக் கவனிக்கறது இல்ல. காலைல கிளம்பிப் போய் ஒரு வீட்ல துணி துவைப்பாங்க... பாத்திரம் தேய்ப்பாங்க. இந்த மாதிரி பெண்கள் போகும் பேருந்தில்தான் நான் போறேன். ஒருநாள் பத்துமணி இருக்கும். ஒரு மாணவனிடம் "இன்னைக்கு ஸ்கூல் இருக்குல்ல..." என்றேன் அவன்.

"ஆமா... என்னை ஸ்கூல்ல இருந்து திரும்ப அனுப்பிட்டாங்க..." என்றான் அவன்.

"கேட்டா லேட்டாப் போனதுக்குத்தான் கேட் சாத்திட்டேனாங்க"ன்னு சொன்னான்.

இதுவே ஒரு வாத்தியார் லேட்டா வந்தா கேட் சாத்துவாங்களா.....? இதப் பத்தி எழுதணும்னு யோசிச்சேன். எனக்கு எழுதறதுக்கு இது மூலதனமாவும் இருக்கு. என்னால இதுல இருக்கற பிரச்சனைய புரிஞ்சுக்கவும் முடியுது. ஒருத்தர் வந்து சாயங்காலம் ஏழரை மணி பஸ்ல ஏறறாரு. அது பேரூர் வழியா போற பஸ்ஸு. ரெண்டுபேர் சீட்ல முக்கால் பாகம் ஒருத்தன் உக்கார்ந்துட்டு வர்றான். நான் கால் பாகத்துல உக்கார்ந்துட்டு வர்றேன். எனக்கு எரிச்சலா வருது. அவன் பை அவன் மடில இருக்கு. நான் இத்துனூண்டு இடத்துல கடுப்புல உக்கார்ந்துருக்கேன். எனக்கு எரிச்சலா வருது. அவன்கிட்ட சண்டைக்கும் போக முடியல. அவன் உக்கார்ந்துத் தூங்கிட்டு இருக்கான். இடையில ஒருமுறை முழிச்சு, "பேரூர் வந்தாச் சொல்லுங்க"ன்னு சொல்லித் திரும்பவும் தூங்கறான்.

எங்க பக்கத்துல கட்டப்பையோட ஒரு அம்மாநின்னுட்டு இருக்கு. எனக்குத் தெரிஞ்சுப் போச்சு..... இவன் பேரூர்ல முழிக்க மாட்டான். என் உள் மனசு என்ன சொல்லுதுன்னா... பேரூர்ல இவன எழுப்பிவிடக் கூடாது... இவ்ளோ இடத்துல உக்காந்துருக்கான்ல... ஒரு ஸ்டாப் தள்ளிப் போய் இறங்கட்டும்ன்னு நான் நினைக்கறேன். பக்கத்துல ஒரு அம்மா நின்னுட்டு எல்லாத்தையும் பார்த்துட்டு வருது. அந்த அம்மா கட்டப்பைய நான் வாங்கி வெச்சிருக்கேன். அவ என் சாதி சனம் ஒட்டுறவு ஒன்னும் கிடையாது. பேரூர்ல வந்து பஸ்ஸு நிக்குது. அந்தம்மா என்கிட்டே சொல்றாங்க. அந்தப் பையன் பேரூர்ல இறங்கணும்னு சொல்லுச்சுல்லன்னு. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல. நானும் விருப்பு வெறுப்புகளைத் துறந்துட்டு நாணயமான மனுஷனா இருக்கவேண்டியதா இருக்குல்ல. நானும், இறங்கணும்னு சொன்னீங்கள்ல என்றபோது, அவன் அவசர அவசரமாக இறங்கிப் போய்ட்டான். இது


எனக்கொரு கல்விதான. எழுவது வயசான.. இவ்ளோ புத்தகங்கள படிச்சிருக்கற.. இவ்ளோ எழுதியிருக்கற... பண்பட்ட எனக்கே ஒரு சின்ன காழ்ப்பு..பகை இருக்கே. அந்த அம்மாவுக்கு இந்தப் பிரச்சனை ஒன்னும் கிடையாது. இதன் மூலம் நாம் கத்துக்கறோம். மனிதப்பண்பாடுகளைக் கத்துக்கறோம். இருபத்திநாலு மணி நேரமும்... நான் சாகித்ய அகாதமி வாங்கியிருக்கேன்..... கலைமாமணி வாங்கியிருக்கேன்னு நினைச்சிட்டு இருந்தீங்கன்னா... உலகத்தை நீங்க புரிஞ்சுக்கவே முடியாது.

**கும்பமுனி......!**

நாஞ்சில் நாட்டினுடைய விரிவுதான். பிற்காலத்தில வாழ்க்கை மீது எழுந்த சகலவிதமான விரக்தி கோபம்.. பிற மனிதர்கள் ஏளனமாகவும் இளக்காரமாகவும் பார்க்கக்கூடிய சகல விமர்சனத்துக்கும் உட்படக் கூடிய ஒரு மனோநிலைதான் அது. சில சமயங்கள்ல நகுலனைக்கூட இமிடேட் பண்ணிருப்பேன். கதைல ஒரு பிரச்சனை மூலமா நிஜத்துல இன்னொரு பிரச்சனையைப் பேசறதுக்குக் கும்பமுனி உதவுது. பெரியவனுக்குக் கிடைக்கறது சிறியவனுக்கும் கிடைக்கும்னு கும்பமுனி பேசுவான். அரசியல்வாதிங் களுக்குக் கிடைக்கறது பொதுமக்களுக்கும் கிடைக்கத்தான வேணும். எழுத்தாளன், ஓவியன், இசைக்கலைஞன் எல்லாருக்கும் கிடைக்கணும்தான. அதத்தான் கும்பமுனி பேசறான்.

**இன்றைய சமூகத்தில் சினிமாவின் தாக்கம் பற்றி...?**

சினிமாங்கறது ஒரு தொழில். கலைங்கறது எல்லாம் எப்பவோ செத்துப் போச்சு. வேற வேற இண்டஸ்ட்ரி மாதிரி அது பிலிம் இண்டஸ்ட்ரி. பத்துக்கோடி முதலீடு செய்யறான். நூறுகோடி திரும்பப் பெறுவதுக்கான முயற்சியை அவன் செய்யறான். நிறைய வருமானம் உள்ள துறை அது. பாலு மகேந்திரா இருக்கற ஒருகூட்டத்துல... “எழுத்தாளர்கள் பிலிம் இண்டஸ்ட்ரியைப் பொருட்படுத்தறது இல்ல....ரொம்பக் கேவலமாப் பேசறாங்க" அப்டினு பேசறாரு. அடுத்து நான் பேசறேன். "பால்பவுடர்ங்கிற பேர்ல நீங்க சுண்ணாம்பக் கரைச்சு எங்கப் பிள்ளைங்களுக்குக் குடுத்தீங்கனா நாங்க பேசத்தான் செய்வோம். கேக்கத்தான் செய்வோம்..." இப்டி பேசறேன். அவுரும் இருக்காரு. அவருடைய ஆதரவாளர்களும் இருக்காங்க. நீங்க எங்க எட்டு வயசுப் பொம்பளப் பிள்ளையைக் கெடுக்கறீங்க. தேவை இல்லாத பல விஷங்களை நீங்க கற்றுத் தர்றீங்க. இது எப்பிடிக் கலையாகும்....?



விஷத்தைக் கலைன்னு சொல்றீங்க. நீங்க எட்டுமணி நேரம் அலுவலகத்துல வேலை பாக்கறீங்கன்னா..... ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் பொழுதுபோக்கலாம். ஆனா முழுநாளும் பொழுது போக்கறதுக்காக இல்ல. காலைல ஆறு மணிக்கு சினிமா தியேட்டர்ல நிக்கிற கூட்டத்தை நீங்க எந்த நாட்டிலும் சந்திக்க முடியாது. 2000, 4000 குடுத்து டிக்கெட் வாங்குற சமூகத்தை வேற எங்கயும் பாக்க முடியாது. இது சமூகக் கேடு. சமூக இழிவு. அது எவனா இருந்தா என்ன.. சமூகத்துக்கான தீமை இது. இதை எடுத்துச் சொல்றவன் எழுத்தாளனாத்தான் இருக்க முடியும். அவன்தான் அதச் செய்வான். சமூகம் சினிமாவைக் கடவுளுக்கு நிகராப் பாக்குது. 10, 15 வருசத்துக்கு முன்னால ஒரு நடிகை கூல் ட்ரிங்க்ஸ் குடிச்சிட்டு மிச்சம் வைக்குது. அதை எடுத்து அண்டாவுல கலக்கித் தமிழன் வரிசைகட்டி நின்னு வாங்கிக் குடிக்கறான். நடிகை எச்சி இல்ல. வீட்ல இருக்கேன். இல்லனா பயங்கரமான கெட்ட வார்த்தையெல்லாம் வரும். இது கலை சார்ந்த வெளிப்பாடா.. இது கலையா..? இந்த இனத்தைக் கெடுத்து வெச்சதுல சினிமாவுக்குப் பெரும் பங்குண்டு.



இதுல அண்ணாதுரைக்கும் பொறுப்பிருக்கு. கருணாநிதிக்கும் பொறுப்பிருக்கு. எம் ஜி ஆர் க்கும் பொறுப்பிருக்கு. ஜெயலலிதாவுக்கும் பொறுப்பிருக்கு. சமூகம் சினிமாவுக்குத் தேவைக்கதிகமான முக்கியத்துவம் கொடுக்குது. ஒருநாளைக்கு எவ்ளோ மணி நேரம் இந்த சினிமாவுக்கு ஒதுக்கறீங்க. நாளிதழ்ல எத்தன பக்கம் சினிமாவுக்கானது.. பெரிய பெரிய தொழில் நிறுவனங்கள் பற்றி... நடிகர்கள்பற்றிய செய்திகள்னா அதுக்குத் தனியாப் பணம் பத்திரிக்கைக்குக் கொடுக்கணும். அப்டி தான் இங்க நடந்துட்டு இருக்கு. எல்லாமே விளம்பரம். பாரதிராஜா ஒருமுறை சொன்னதுதான் நினைவுக்கு வருது. எல்லாரும் சினிமாவுக்கு வாங்க. ஆனா முதலமைச்சர் கனவோடு வராதீங்க.

**எப்போதும் சண்டைக்குத் தயாராக இருக்கும் ஒரு தோற்றத்தில்தான் உங்களைக் கற்பனை செய்கிறேன். நீங்கள் அப்படித்தானா?**

ரொம்பச் சாதாரணமான மனுஷங்க நான். எங்க டீ குடிக்கக் கூப்பிட்டாலும் நான் வந்திருவேங்க. அன்னபூர்ணாவுக்குத்தான் வருவேன்னு சொல்ல மாட்டேன். யாரு என்ன புத்தகம் குடுத்தாலும் மரியாதையோடு வாங்கிக்கற ஆளு. நான் படிச்ச புத்தகங்களை எடைக்குப் போடறது இல்ல. என் சொந்தச் செலவுல வேற யாருக்காவது அனுப்பிவெச்சிடுவேன். அடிப்படையில ஒரு மனுஷனா இருக்கணும்ங்கிறதுலதான் எனக்கு நம்பிக்கை. யாரையும் நான் துச்சமாப் பார்க்கறது இல்ல. நான் எழுத வந்த காலத்துல... 'திஸ் இஸ் நோ பெட்டர் தென் டாய்லெட் பேப்பர்'ன்னு சொன்னவங்களஎல்லாம் சந்திச்சுத்தான் வந்திருக்கேன். அதுக்காக நான் அவங்ககிட்ட பகை பாராட்டற தெல்லாம் இல்ல. சுந்தர ராமசாமி ரொம்ப வன்மையான சொற்கள்லதான் ஆரம்பக் கட்டத்துல சொல்லியிருக்கார்.நாம அதைத் தாண்டி வந்திருக்கோம். பின்னால பார்க்கையிலே அவரே மாத்திக்கிட்டாரு. யாரையும் துச்சமா எப்பவும் நினைக்கறதில்ல. ஆனா, கருத்து சார்ந்து முரண் வரும்போது நான் ஈவு இரக்கம் பார்க்க மாட்டேன். அரசியல் சார்ந்த சினிமா சார்ந்த சமகாலக் குற்றங்கள் சார்ந்த கோபமும் வெறுப்பும் நமக்குள்ள கனன்றுகிட்டே இருக்கு. அது முகத்துல செட் ஆகிடுச்சு. நாம வேணும்னு உர்ருனு வெச்சிக்கறது இல்ல. என் முகமே அப்படி ஆகிடுச்சு.

**சில பெரிய படைப்பாளர்கள் குறிப்பிட்ட சில வளர்ந்த படைப்பாளர்களையே திரும்பத் திரும்பக் கொண்டாடுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்....?**

இது ரொம்பத் தப்பான விஷயம். உறவு சார்ந்த.. சாதி சார்ந்த.. மதம் சார்ந்த.. நட்பு சார்ந்ததாய் அவுங்களுக்குள்ள நிறைய கொடுக்கல்வாங்கல் இருக்கு... என்கிட்டே அது கிடையாது. நான் - நல்லாப் படைக்கற எல்லார் பேரையும் சொல்லுவேன். யார் வந்து என்கிட்டே முன்னுரை கேட்டாலும்.... பிடிச்சிருந்தா எழுதுவேன்.. பிடிக்கலைன்னா எழுத

மாட்டேன். வெளில போய் என்னை வெள்ளாளன்னு திட்டக்கூடாதுனு முன்னமே சொல்லிடுவேன்... (சிரித்துக்கொள்கிறார்).

சில குறிப்பிட்ட பிரதேச மக்களுக்கு.... குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்களுக்கு அதீதமான பந்தம் இருக்கு. அந்தப் பந்தத்தின் காரணமாக அவர்கள் கட்டிச் சமைத்த ஆளுமைகள் சொந்த ஆற்றலின் மீது நிக்க முடியாம விழுந்து கிடக்கறாங்க. பேர் சொன்னா நாகரீகமா இருக்காது. எனக்கு முந்தைய எழுத்தாளர்கள்தான்... கொண்டாடப்பட்ட எழுத்தாளர்கள்தான். இன்னைக்குப் படிச்சுப் பாருங்க. அழகா இருக்கா... அல்லது பொம்பளையா இருக்கா.. அல்லது உயர் சாதியைச் சேர்ந்து இருக்கா.. அப்படியெல்லாம்தான் கொண்டாடறான். இதையெல்லாம் தாண்டி வந்து நிக்கும்போதுதான் படிக்கிறோம். இப்போ கோபி கிருஷ்ணனைப் படிக்கறோம்னா.. சாதி பார்த்து மதம் பார்த்தா படிக்கறோம்....? ஏன் ஸ்ரீராம்... பேர் சொல்றேன். அவர் என்ன மாமனா மச்சானா.... ஏன் செந்தில்குமார் சொல்றேன். அவர் சமீபத்துல எழுதினது இன்னும் புத்தகமாக் கூட ஆகல. "கழுதைப் பாதை"ன்னு ஒரு நாவல். படிச்சிட்டுக் கூப்பிட்டுத் ‘தம்பி நல்லா எழுதிருக்கீங்க'னு பேசினேன். சாதி பார்த்து.. மதம் பார்த்துக் கொண்டாடுவது இந்தத் தலைமுறைக் காலத்துல கொஞ்சம் அதிகமா இருக்கு. ஒரு குறிப்பிட்ட சாதியில ஒரு எழுத்தாளர் பேட்டி கொடுக்கறார்னா அவர் சாதியில இருக்கற நாலுபேர் பேரு அந்த நேர்காணல்ல கண்டிப்பா இருக்கும். தப்பித் தவறிக் கூட அந்தப்பக்கம் இருக்கற பூமணிய சொல்ல மாட்டான். இந்தப்பக்கம் இருக்கற நாஞ்சில் நாடனைச் சொல்ல மாட்டான். கான்ஷியஸாத்தான் இருக்காங்க. ஆனா எழுத்து ஆற்றல் என்பது அதைத் தாண்டி இருக்குது. யாருடைய சப்போர்ட் இல்லாமலும் அது வந்து சேர்ந்துடும். ஒரு முன்னுரையோ அணிந்துரையோ அவனை ஓரளவுக்குத்தான் தூக்கிப் பிடிக்கும். அதுக்கு மேல முழு மரத்திலும் ஏறுவது அவனோட வேலை. பத்து பேர்ல ஆறு பேர் நல்லாத்தான் எழுதறாங்க. அதெல்லாம் தமிழுக்குச் சேரும் செல்வம்தான். மூத்த எழுத்தாளர்கள் சம காலத்து எழுத்தாளர்களைப் படிப்பதே இல்லை. நாங்க எழுதறபோது.. நாங்க எழுதறபோதுன்னு திரும்பத்திரும்ப அதையே சொல்லிட்டு இருக்காங்க. சலிப்பூட்டுகிற அளவுக்குச் சொல்றாங்க. ரொம்பக் குறிப்பாச் சாதி பாக்கறாங்க. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் இதைச் சொல்லிட்டுத்தான் இருக்கேன்.

**படிப்பவர்கள் குறைந்துவிட்டார்கள். எழுதுபவர்கள் நிறைந்துவிட்டார்கள் என்ற கூற்று நிஜமா...?**

நிஜம்தான்.

**வாழ்க்கை மீது எந்தப் புகாரும் இல்லை என ஒரு நேர்காணலில் கூறியதாக ஞாபகம்.... நிஜமாகவா..?**

ஆமாங்க.. அதாவது... சாப்பிடுகிற உணவைச் சுவைச்சுச் சாப்பிடணும். வாசிக்கிறத ருசிச்சு வாசிக்கணும். இதுல புகார் பண்ண என்ன இருக்கு? எதுகூடவும் எதையும் ஒப்பிட்டுப் பார்க்கறது இல்ல. அவன் சினிமாவுக்குப் போறான். அவன் காரு வெச்சிருக்கான் அப்படிங்கற எந்த யோசனையும் எனக்கில்ல. எனக்குக் கிடைக்கற வாய்ப்பு எனக்குக் கிடைக்கும். அறுபது வயசு வரைக்கும் வாடகை வீட்லதான் இருந்தேன். இப்பத்தான் சொந்த வீட்ல இருக்கேன். பிள்ளைங்கள பொறுப்பாப் படிக்க வெச்சிருக்கேன். புத்தகங்களக் காசு குடுத்து வாங்க முடியுது. யாருக்கும் பயப்படாம எந்தத் தயவு தாட்சணியத்துக்கும் ஆட்படாம நம்ம கருத்துக் களைச் சொல்லிட்டு இருக்கோம். யாரும் அப்டி நினைச்சுக்குவாங்க. இப்டி நினைச்சுக்குவாங்க அப்படியெல்லாம் யோசிக்கறது இல்ல. அச்சமில்லை. சாப்பாடு இருக்கு. குடியிருக்கக் கூரை இருக்கு. டவுனுக்குப் போகணும்னா S17 இருக்கு. S17ல தான் போறேன்...வர்றேன். எந்தக் கௌரவக் குறைச்சலும் இல்ல. நடந்துதான போனோம். நாகர்கோயில் தாண்டி நடந்துதான காலேஜ் போனோம். தினமும் மூனு மூனு ஆறு மைல் நடந்துதான படிச்சோம். இப்போ குறைஞ்சபட்சம் 300 அடி தூரத்துல பஸ் கிடைக்குதுல்ல. அப்புறம் புகாருக்கு என்ன இருக்கு?

**இன்றைய நவீன இலக்கியம் சற்று மிகையாக இருப்பதாகத் தோன்றுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்..?**

அனுபவம் அதிகமா இருக்கற ஒரு எழுத்தாளனுக்கு இந்த மாதிரி மிகையெல்லாம் இருக்காது. அவன் அனுபவங்களைக் கலையா மாத்திடுவான். அவனுக்கு மிகையைத் தேடிப் போக வேண்டிய தேவை இல்லை. மிகை எதுனால இருக்குன்னா.. அங்க எங்கயோ பற்றாக்குறை இருக்குன்னு அர்த்தம். அனுபவம் சார்ந்த பற்றாக்குறை இருக்கு அல்லது அனுமானங்கள் சார்ந்த பற்றாக்குறை இருக்கு. அது மிகையின் மூலமாக நிவர்த்தி செய்யப்படுகிறது. வலின்னு நீங்க நினைக்கறத

உணர வைக்க, அது ரொம்ப அதிகமா வலிக்குதுன்னு சொல்லணும். அப்போ நீங்க மிகைக்குப் போவீங்க. ஆனா அசலான வலியை உணர்த்த மிகை அவசியம் இல்ல. இப்போ என் வலியை உங்களுக்குச் சொல்றதுக்கு என் எழுத்தின் மூலமா அதைக் கடத்தறேன். எழுத்தின் மூலமாகக் கடத்துவது என்பது மொழியின் மூலமாகக் கடத்துவதுதான். நான் பெற்ற வலியை உங்களுக்கு எப்படி உணர்த்த முடியும்.. ஒன்னு நான் உரையாடலின் மூலமாப் பேசிக்காட்டணும் அல்லது எழுதிக்காட்டணும். என் வாசகன் ஒன்னும் முட்டாள் கிடையாது. எழுதிக் காட்டும்போது.. நான் தரக்கூடிய சொற்கள்... நான் தரக்கூடிய அனுபவம் மூலமா அவன் அந்த வலியைப் பெற்றுக்கறான். அப்போ என் அனுபவம் உண்மையா இருக்கும் பட்சத்துல.. சரியான சொல்லைப் பயன்படுத்திச் சரியான உவமையைப் பயன்படுத்தி நான் நினைக்கறத வாசகனுக்குக் கடத்திட முடியும். அப்போ மிகை தேவைப்படாது. ஒருவேளை நான் அனுபவித்ததைவிட அதிக அளவு வலியைக்கூட அவன் பெற முடியும். அவன் எழுதல. நான் எழுதறேன். இதுதான் வித்தியாசம். இப்போ என் அனுபவமே பொய். என் புனைவே பொய்ன்னு வெச்சுக்கோங்க. இப்டி இருக்கறத கடத்தறபோது தான் எனக்குப் பிரச்சனை. அப்போதான் பெரிய சொற்களை எல்லாம் தேடித்தேடிப் போட வேண்டி இருக்கு. சினிமாப் பாட்டுல சொல்ற மாதிரி "உப்புக்கடல் கூட சர்க்கரை ஆகிடலாம்... இமயமலை கூட உருண்டு வந்தரலாம்... காதல்ன்னு சொன்ன சொல்லு எப்படிப் பொய்யாப் போலாம்" - மிகைகள் வர்றதுக்குக் காரணம் இதுதான். அது அந்த எழுத்தாளனின் அனுபவத்தின் குறைவு. அப்புறம் அந்த அனுபவத்தைக் கலையா மாத்தறதுல இருக்கற கோளாறுகள்தான் காரணம். ஒரு சொல்லுக்கு... அதுக்கான டிக்ரீஸ் ஏத்திக்கிட்டே போலாம். அது நம்முடைய சாமர்த்தியம். ஆனா தேவை இல்லாத கனத்த சொற்கள் அனாவசியம்.

## காதல் தோல்வி தற்கொலைகள் பற்றி..?

எனக்குப் பல சமயங்கள்ல புரியறது இல்ல. காதல் தோத்துப் போனா ஒருத்தன் எதுக்குச் சாகணும்..லைலா மஜுனு இருக்கு... அம்பிகாபதி அமராவதி இருக்கு... இன்னும் நிறைய. எனக்குப் புரியல. எதுக்குச் சாகணுங்க.. எனக்கு ஒரு குரு இருக்கார். அவர் அடிக்கடி சொல்வார். "செத்துப் போறவனப் பத்தி நமக்குக் கவலை இல்ல. உயிரோட இருக்கறவனப் பத்தித்தான்" அப்டிம்பார். செத்துப்போறதுதான் போறீங்க. இந்தக் கெட்டவன்னு சொல்ற ஒரு பத்து பேர போட்டுத்தள்ளிட்டுப் போங்களேன்... (சிரித்துக் கொள்கிறார்).

## எழுத்தாளனின் இண்டெலெக்சுவல் குறித்து..?

எங்கம்மா இறந்துபோன செய்தி வரும்போது நான் சிங்கப்பூர் போயிட்டு இருக்கேன். விமானத்துல இருக்கும்போது மொபைலை ஆஃப் பண்ணி வைப்போம். அங்க ஏர்போர்ட்ல நண்பர்கள் எனக்காகச் செய்தியோட காத்துட்டு இருக்காங்க. சந்தோசமா சிங்கப்பூர்ல போய் இறங்கறேன். அம்மா போய்ட்டாங்கன்னு தகவல் சொல்றாங்க. அடுத்த விமானத்துல என்னை ஏத்தி அனுப்பறாங்க. ஊருக்குச் சொல்லிட்டாங்க.. இந்த மாதிரி வந்துட்டு இருக்கார்னு. கொச்சின்ல இறங்கி அங்கிருந்து கார் வெச்சு அடுத்த நாள் காலைல பத்து மணிக்கு வீட்டுக்குப் போய்ட்டேன். அப்புறம் சாயங்காலமா அடக்கம் பண்றோம். இது நடக்குது. அப்புறம் எங்கம்மாவை அடக்கம் பண்றபோது நான்தான் கொள்ளிச் சட்டி எடுக்கறேன். நான் விழுந்தரக் கூடாதுனு புடிக்கறதுக்குப் பக்கத்துல ஒருத்தன் வந்துக்கிட்டு இருக்கான். அவன் கேக்கறான். "தம்பி.. இன்னைக்குச் சனிக்கிழமைல்ல. சனிப்பொணம் தனியாப் போகாது. கோழி புடிச்சு அறுப்பாங்கள்ல." சனிப்பிணம் தனி போகாதுனு ஒரு நம்பிக்கை இருக்கு. கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களா இருந்தாலுமே.. சனிக்கிழமை யாராவது செத்துப்போனா சவப்பெட்டிக்குள்ள ஒரு கோழிக் குஞ்சு போட்டுருவாங்க. அவரு கத்தோலிக்கக் கிறிஸ்தவர்தான். ஆனா இந்த நம்பிக்கை. வெட்டிப் போட்டுருப்பாங்க. நானே பார்த்துருக்கேன்.

"இல்லண்ணே நாட்டுக் கோழியெல்லாம் ரொம்பக் காஸ்ட்லி. முட்டை வெச்சிருக்கோம்"ங்கிறான் ஒருத்தன்.

நான் கேக்கறேன். எங்கம்மாதான் செத்தது. கொள்ளிச் சட்டி நான்தான் தூக்கிட்டு இருக்கேன். வருத்தமெல்லாம் இருக்கு ஆனாலும் நான் கேக்கறேன். "நாட்டுக்கோழி முட்டையா.. லகான் முட்டையா"ன்னு. "அப்டி அறிவில்லாமையா இருப்போம்... நாட்டுக்கோழி முட்டைதான்"ங்றான் அவன். அம்மா செத்துக் கிடக்கையில் ஜோக் அடிக்கறோம்ங்கிறது எல்லாம் கிடையாது. வருத்தம் இல்லன்னு எல்லாம் கிடையாது. அவ்ளோ சோகத்துலேயும் நம்ம இண்டெலெக்சுவல் முழிச்சிட்டு இருக்கு. இவ்ளோவும் மனசுக்குள்ள

ஓடிட்டு இருக்கு. அவன்கிட்ட நாட்டுக்கோழியா லகான் கோழியானு கேக்கற அளவுக்கு விவரமாத்தான் இருக்கோம். இப்படி எல்லாச் சமயத்திலயும் உங்க இண்டெலெக்சுவல் முழிச்சிட்டே இருக்கும். அப்படி இருக்கறதுனாலதான் நீங்க எழுத்தாளரா இருக்கீங்க.

## குழு சார்ந்த சிந்தனை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எழுத்தாளனா இருக்கறதுல சமரசம் ஆகக்கூடாது. எதுலயும் காம்பரமைஸ் ஆகிட்டீங்கன்னா அவளோதான். அவன் நம்ம சாதிக்காரன். ரூம் போடறான். தண்ணி வாங்கித் தர்றான்..... அப்படினு முன்னுரை எழுதினா அவ்ளோதான். சமீபகாலமா இலக்கிய உலகத்துல இது ரொம்ப அதிகமா இருக்கு. குழு சார்ந்த சிந்தனை. காலச்சுவடுக் குழு. உயிர்மைக் குழு. இன்னும் என்னன்னவோ குழுன்னு. அவனவன் வெளியிடுற புத்தகத்துக்குத்தான் அவன் விமர்சனம் போடறான். காலச்சுவடு புத்தகத்துக்கு உயிர்மையில் விமர்சனம் வராது. உயிர்மை புத்தகத்துக்குக் காலச்சுவடுல விமர்சனம் வராது. எங்க காலத்துல இருந்த பொது நோக்கு... மேம்போக்குத் தன்மை... இப்போ கம்மியாகிப் போச்சு. அதுவும் நிறைய பேர்.. பேர்சொல்லப் பிரியப்படலை... தரைத்தளத்துல இருக்கறான். முற்போக்கு எழுத்தாளர்தான். லெனின் ஸ்டாலின்லாம் இழுத்துப் புரட்சியாத்தான் பேசறாரு. ஆனா எங்க ஆளுங்கன்னு இன்னொருத்தரப் பார்த்துச் சொல்லுதாரு. மார்க்ஸ்ங்கிறாரு ஏங்கெல்ஸ்ங்கிறாரு. ஆனா உங்க ஆளுங்க மாதிரி தெரியுதுங்கறாரு. என்ன பண்ண.. நீங்க எழுத்தாளரா இருக்கீங்களோ இல்லையோ... மகிழ்ச்சியா இருக்கறது நிம்மதியா இருக்கறதுதான் முக்கியம்.

## 'சொல்ல மறந்த கதை' திருப்தியா..?

நாஞ்சில் நாட்டு மொழிக்கும் அவரோட நடு நாட்டு மொழிக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. என் மொழி தெரியாம என் நாவலுக்குள்ள நுழையறதே கஷ்டம். அப்ப, அவரு மையக்கருவ எடுத்துக்கறாரு. அவர் மொழிக்கு மாத்தறாரு. இது ஒன்னு. இரண்டாவது அதில் இருக்கக்கூடியதுல பத்து பன்னிரண்டு காட்சிகளை மட்டுமே எடுத்துக்கறாரு. சினிமாவுக்கு அவ்ளோ போதும். சினிமாப்படுத்துதல்போதே மிகையும் ஆர்ட்பிஸிலிட்டியும் வந்து சேர்ந்திடுது. அது, அவருக்கு எவ்ளோ ஆற்றல் இருக்கோ... எவ்ளோ திறமை இருக்கோ...அதுக்குத் தகுந்த மாதிரி அவர் பண்றார். இது வேற மீடியம். சினிமா வேற மீடியம். இப்போ "லைஃப் ஆப் பை" எடுத்துக்கோங்க. நீங்க புத்தகமா வாசிக்கும்போது வேற. படமாப் பார்க்கும்போது வேற. சினிமாங்கறது காட்சி வடிவம். அது உருவாகப் பல விஷயம் இருக்கும். லைட்டிங்ஸ்.. இசை.. எடிட்டிங்.. லொகேஷன்னு பல விஷயம் இருக்கு. இதெல்லாம் எழுத்துல செய்ய முடியாது. எழுத்துல நான் ஒரு பத்தியா எழுதறத அவுங்க ஒரு காட்சில வெச்சிட்டுப் போய்டுவாங்க. வாசிக்கறவன் ஒன்டூஒன்தான் வாசிக்கிறான். அவன் அடைகிற பரவசநிலைக்கு எழுத்தாளன் கூட்டிட்டுப் போறான். ஒரு நல்ல இயக்குனர்.. நல்ல சினிமா செஞ்சுப் பார்வையாளனுக்குப் பரவச நிலையை ஏற்படுத்தறான். ஆக ஒப்பிட்டுப் பார்த்துப் பெரிய சோக நிலைப்படுதல் எல்லாம் இல்லை. மொத்தமாப் பார்த்தா நல்லாப் பண்ணிருக்காரு. அதுக்காக, சினிமா பார்க்கப்போகும்போது நாவலை எடுத்துட்டுப் போய்ப் பார்க்கக்கூடாது. சினிமாவை சினிமாவாப் பார்க்கணும். அது வேற மீடியம். இப்போ நான் என் நாவலுக்கு இடைய பாட்டு வைக்க முடியாதுல. "பரதேசி"க்கு வசனமே நான்தான எழுதினேன். நான் மூனாவது காட்சிக்கு எழுதினத அவர் இருவதாவது காட்சிக்கு வைப்பாரு. அது அவரோட சுதந்திரம். அவருடைய ஆற்றல் அது. அவருடைய துறையில அவருடைய மீடியத்துல அவர் எவ்ளோ சரியாப் பண்ணியிருக்கார்னுதான் பார்க்கணும். சொற்கள் மூலமாகக் கிடைக்கும் அனுபவமும் காட்சிகளின் மூலமாகக் கிடைக்கும் அனுபவமும் வேற வேற. ஒரு இசைக்கலைஞன் சொல்வான். எனக்கு ஓவியம் வரையத் தெரியாது.. அவளுடைய அழகை வரைந்து காட்ட. ஆனா அதை என் வயலினில் வாசிச்சுக் காட்ட முடியும்னு. ஓவியமா வரையும்போது ரெசம்பிலேன்ஸ் இருக்கும். வயலின்ல எப்படி அதைக் கொண்டு வருவீங்க. ஏன்னா அது வேற, இது வேற.

## இலக்கியவாதிகள் என்ன கொம்பு முளைத்தவர்களா....!

ஒருபோதும் கிடையாது. சாதாரணத்துக்கும் கீழ. எழுதக்கூடிய ஆற்றல் அவன்கிட்ட இருக்கு. அவன் எந்த வகையில மேம்பட்ட மனுஷன்....? சமூகத்துக்கு முன்னுதாரணமா நடக்கறவன்தான் மேம்பட்ட மனுஷன். அவன் சக மனிதன்கிட்ட எப்படி இருக்கான்.. உயர்தரமான கொள்கைகளை அவன் எழுத்துல எழுதிட்டுக் கேவலமான மனிதனா அவன் வாழ்ந்துட்டு இருந்தா அது என்ன கொம்பு? உழவர் சந்தைக்குப் போய்க் கூறு வெச்ச கத்திரிக்காய் வாங்குற சாதாரண மனுஷன் நான். இந்தப் புரிதல் எனக்கிருக்கு.



காட்டுக்கீரையை எல்லாம் கோயம்புத்தூர் வந்தப்புறம்தான் நாங்க சாப்பிடவே ஆரம்பிக்கிறோம். அதை ஒரு கீரைக்காரம்மாகிட்ட வாங்கும்போது அதுக்கு இடையில் வேற ஒரு கீரையும் செருகி இருக்கு. நான் அதைக் களைன்னு எடுத்து வீசப் போனேன். அய்யா அது தொய்ய கீரை. இதோட சேத்துச் சமைச்சா.. இன்னும் சுவை கூடும்னு அந்த அம்மா சொல்லுது. நான் பெரிய கொம்பு முளைச்சவன்னு நினைச்சா அந்தக் கீரையைக் களைன்னு நினைச்சு உருவிப்போட்டுருப்பேன். அதன் மூலம் கிடைக்க இருந்த அந்தச் சுவையை இழந்திருப்பேன்... இல்ல. சாதாரண மனுஷனா இருக்கையிலே நான் நிறையக் கத்துக்கறேன். அது மூலமாக் கிடைக்கற லாபம் அதிகம். ஒரு கொம்பும் கிடையாது. சாதாரண தொழில் செய்யற சாதாரண மனிதனைவிட எழுத்தாளன் எந்த வகையிலும் உயர்ந்தவன் கிடையாது. அவனுக்கு இயற்கையோ கடவுளோ ஏதோ சில ஆற்றல்களைத் தந்துருக்கு. எப்போ உயர்ந்தவனாகுறான்னா..சக மனுஷனை விட மேம்பட்ட குணாம்சங்களைக் கொண்டிருக்கும் போதுதான் அவன் உயர்ந்தவனாகறான். தனிமனிதப் பண்புகள்தான் உங்களைக் கொம்பு முளைச்ச ஆளாகத் தெரியச் செய்யுமே தவிர நீங்க நல்லாப் படம் வரையறீங்க... நல்லாப் பாடறீங்க... நல்லா எழுதறீங்கங்கற தகுதி மாத்திரம் போதாது. ஒழுங்காச் செங்கல் வெச்சுக் கட்டடம் கட்றவன் எழுதறவன விடக் கீழானவனா...? நாம அப்டி நினைச்சிக்கறோம். நீங்க உயர்ந்தவன்னு நினைக்கும்போதே அந்தத் தகுதி அடிபட்டுப் போயிடுது. மிகவும் சாதாரணமா இருக்கும்போதுதான் நாம கற்றுக்கொள்கிறோம். ஒரு எழுத்தாளனைப் பொதுமக்கள் அடையாளம் கண்டுகொள்ளும் தருணங்களில் மகிழ்ச்சி அடைஞ்சுக்கலாம். அந்தச் சந்தோசத்தின் காரணமாகக் கொம்பு முளைச்சிடாது. முளைக்கவும் கூடாது. தவம் செய்வார்.. தத்தம் கருமம் செய்வார். தவம்ங்கிறதே என் வேலையை நான் ஒழுங்காச் செய்றதுதான்.

**வாழ்வின் ஆதாரமான நீரின் பற்றாக்குறை பற்றிய அச்சத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்......?**

நாலு மணி நேரத்துக்கு ஒரு தடவை ஒரு ஆரோக்கியமான ஆளு கழிப்பறை உபயோகப் படுத்தினா நாள் ஒன்னுக்கு 15 லிட்டர் தண்ணில இருந்து 25 லிட்டர் தண்ணி வரை செலவாகுது. எங்க வீட்ல நாலு பேர் இருந்தா ஒவ்வொருத்தரும் நாலு முறை போனா எவ்ளோ லிட்டர் தண்ணி போகுது. சிறுவாணியையும் மழையையும் சொல்லிக்கிட்டு இருக்கறதுல பிரயோஜனமில்லை. அந்தச் சந்தர்ப்பங்கள்ல குவளையில தண்ணீ எடுத்துச் செலவு செய்யலாம். திறந்த வெளிகள்ல மூத்திரம் போறத நாம அநாகரீகமாக் கருதறோம். ஆனா கிராமத்துல அது சகஜமா நடக்குதே. எல்லாரும் வெளியத்தான் போறாங்க. அதனால ஒரு பிரச்சனையும் வந்தர்ல. எனக்குத் தண்ணீ வந்துக்கிட்டு இருக்குல்ல.. அதனால அது பத்திய கவலை எனக்கில்ல. நம்ம தேவையை நாம சீரியஸா உணரணும். எவ்ளோ சிக்கனமாப் பயன்படுத்தணுமோ

அவ்ளோ சிக்கனமாப் பயன்படுத்தணும். செம்புலயோ கேன்லயோ கடைசிச் சொட்டு வரை குடிங்க. மழை நீரைச் சேகரிக்க.. இன்னும் வேறு விதமான திட்டங்களை வகுக்கணும். நீர்தாங்க எல்லாமே. இந்தத் தலைமுறை தப்பிச்சிக்கும். அடுத்த தலைமுறை மாட்டிக்கும். இயற்கையைக் குறை சொல்றதுல அர்த்தமே இல்ல. எங்கப்பா... சாப்டுட்டு வீட்டுக்குப் பின்னால இருக்கற ஒரு தென்னை மரத்துல கை கழுவுவாரு. சாயந்திரம் உடம்பு கழுவ இன்னொரு தென்னை மரம். ஒரு விவசாயிக்கு அந்தத் தெளிவு இருந்துச்சு. கல்யாண வீடுகள்ல தண்ணியை இஷ்டத்துக்குச் செலவு பண்றத மாத்திக்கணும். இயற்கை சார்ந்த வாழ்க்கை முறையைப் பள்ளிகளிலேயே சொல்லித்தர வேண்டி இருக்கு. தேவைப்படாம ஒருதரம் போட்ட உடையை உடனே துவைக்காம மறுமுறையும் போட்டுட்டுத் துவைக்கலாம். பல விஷயங்களைத் திரும்பப் பார்க்க வேண்டி இருக்கு. திரும்பச் சொல்ல வேண்டி இருக்கு.

**தொடர்ந்து எழுத்தாளர்கள் தாக்கப் படுவதையும் அதன் நீட்சியாகக் கொல்லப் படுவதையும் சக எழுத்தாளராக எப்படிப் பார்க்கிறீர்கள்?**

சக எழுத்தாளராப் பார்க்கப்படுவதிலும் அரசியல் இருக்கு. ஒரு மார்க்சிய எழுத்தாளர் தாக்கப்பட்டா முற்போக்கு எழுத்தாளர்கள் குய்யோ முய்யோன்னு சத்தம் போடுவாங்க. மார்க்சிய அணிக்கு எதிரணில தாக்கப்பட்டா சத்தமே போட மாட்டாங்க. அவனும் எழுத்தாளன்தானே. உலகத்துல இருக்கற அத்தனை எழுத்தாளனும் ஒரே கொள்கையைப் பின்பற்றணும்னு ஏதும் இருக்கா...? கொள்கை முரண்தான. உதாரணத்துக்கு ஜோ டி க்ரூஸ் தாக்கப்பட்டார். அதுக்கு மாறு கை மாறு கால் வாங்கணும்னு சொன்னாங்க. பெருமாள் முருகன் தாக்கப்பட்டார். யாராவது ஏதும் சொன்னார்களா.....?


இவனும் எழுத்தாளன்தான். அவனும் எழுத்தாளன்தான். அப்போ உனக்குப் பிடிக்காத தத்துவார்த்த சார்புடையவன் தாக்கப்பட்டாச் சரியா அது? எழுத்தாளன்தான அவன். அவனுக்கு ஒரு குரல் இருக்கு. ஒரு பார்வை இருக்கு. உலகத்துல இருக்கற அத்தனை மக்களும் ஒரே இசையா கேக்கறான்? ஒரே உணவா சாப்பிடறான்? ஒரே மதமா இருக்கு? ஒரே மொழியாப் பேசறான்? அப்போ கொள்கை சார்ந்த முரண்கள் இருக்கும். ஒரு சட்டம் போட்டு எல்லாரையும் காந்தியத்தைப் பின்பற்றுங்கன்னு சொல்ல முடியாது. பெரியாரிசம்தான் பேசணும்னு சொல்ல முடியாது. பெரியார் மீது ஆயிரத்தெட்டு முரண் என்கிட்டே இருக்கு. நாஞ்சில் நாடன் தாக்கப்பட்டா...வாங்கட்டும்னு நினைக்கறதும்... ஒரு குறிப்பிட்ட எழுத்தாளர் தாக்கப்பட்டா ஜனாதிபதிகிட்ட கூட மனு குடுக்கறதும்.. நியாயமில்லை. அவன் தாக்கப்பட்டா சரி... இவன் தாக்கப்பட்டா தப்புங்கற எண்ணம் இருக்கு. அது சரி இல்ல. இப்போ ஜெயமோகன் தாக்கப்பட்ருக்கார். ஒரு சின்ன விஷயம். தோசைமாவு புளிச்சுப் போச்சுன்னு திரும்பக் கொடுத்திருக்காரு. இப்போ எழுத்தாளன் அல்லது எழுத்தாளன் இல்லாமையே இருக்கட்டுமே. ஒரு தனி மனிதன்......உங் கடைல வாங்குன பழம் அழுகி இருக்குனு சொன்னா அடிச்சிடுவியா...? போலீஸ் ஸ்டேஷன் எதுக்கு இருக்கு.. சட்டம் ஒழுங்கு எதுக்கு இருக்கு? ஜெயமோகன் எனக்கு முன்னுரை எழுதல.. எனக்கு எதிரா எழுதறாரு..... என் நாவலைப் பாராட்டிச் சொல்லல.. அதனால அவரு செத்தாலும் பரவாயில்லன்னு சொல்றது எப்படி...? அருவருப்பா இருக்கு.

**முதிர்ச்சி அடையாமலும், தெளிவான பார்வை இல்லாமலும் ஆளாளுக்குத் தானாகவே புத்தகம் போடுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

சும்மா எட்டு பத்து கவிதைகளை எழுதிட்டு நானும் புஸ்தகம் போட்டுட்டேன்னு வந்தா.. எப்படி? நீங்க எல்லாக் குப்பையும் எழுதிப் போடுவீங்க. அதைக் கொண்டாடணும்னு தலை எழுத்தா.. சிலர் நல்லா எழுதறாங்க. ஆனா மொழில ஒரு சுவாரசியம் இல்ல. நானூறு ரூபாய் குடுத்து வாங்கின பல நாவல்களை 40 பக்கத்துக்கு மேல படிக்க முடியாம நான் மடக்கி வெச்சிருக்கேன். அப்படி எழுதுபவர்கள் மீது எனக்கு ஒரு பகையும் கிடையாது. படிக்கக்கூடிய ஆர்வத்தைத் தூண்டணும்ல. எம் கோபாலகிருஷ்ணன் என் நண்பர்கிறதுக்காக அவருடைய "மனைமாட்சி"யை நான் கொண்டாடல. ஒரு வரி விடாம அது இழுத்துட்டுப் போகுது. அந்தத் தன்மைக்கு அவர் முயற்சி செய்யறார். உழைக்கறார். இடது கையில செய்துட்டுப் போற சமாச்சாரம் இல்ல. காலச்சுவடுல உயிர்மைல வந்ததுங்கிறதுக்காகவெல்லாம் அது நல்ல எழுத்தாகிடாது. சின்ன பசங்க எவ்ளோ நல்லா எழுதறாங்க.

**சாதி எப்போதேனும் அழியும் என்று நினைக்கிறீர்களா..?**

கொஞ்சம் நேரம் எடுக்கும். ஆனா அப்படி ஒரு சமத்துவம் நடந்திடக்கூடாதுங்கிறதுல



அரசியல்வாதிங்க ஜாக்கிரதையா இருக்காங்க. படைப்பு மனம் சாதி பார்க்காதுங்க. சாமி சாதி பார்த்தா அப்புறம் அது என்ன சாமி?

## உங்கள் 'வழுக்குப் பாறை' கவிதைத் தொகுப்பு பற்றி...!

நான் அடிப்படையில் கவிஞன் இல்லைங்க. ஆனா ஒரு மொழிக்குள்ள இருக்கற உன்னதம் கவிதைன்னு நம்பறேன். சிறு வயசுல இருந்தே அரசியல் கூட்டங்கள் கேக்க ஆரம்பிச்சு.. பாரதியார், கம்பன், இளங்கோ, நாலடியார், புறநானூறுன்னு கேக்க ஆரம்பிச்சுக் கவிதை மேல ஒரு பிரேமை வந்திருச்சு. ஆரம்பத்துல கவிதைகள்தான் எழுத முயற்சி பண்ணினேன். அப்புறம் பிக்சன்... கட்டுரைன்னு வந்துட்டேன். கவிதைக்கு என்கிட்டே ஒரு உயர்ந்த இடம் உண்டு. உயர்ந்த கவிதை என்னன்னு எனக்குத் தெரியும். அப்போ, நானும் சில கவிதைகளை முயற்சி பண்றேன். சிறுகதையா நாவலா கட்டுரையா எழுத முடியாதவைகளைக் கவிதையா எழுதறேன். "வழுக்குப்பாறை"ல ஒரு 125 கவிதைகள் வந்துருக்கும்னு நினைக்கறேன். ஆனா யாரும் கவிஞர்னு சிறப்பு அந்தஸ்து குடுத்து நம்மள பார்க்கறது இல்ல. அதுல வருத்தம் கிடையாது. எனக்கே அதுல கிளைம் கிடையாது. ரொம்ப நெருக்கமான நண்பர்கள்கூட 'அண்ணாச்சி.. இந்தச் செய்யுள் எழுதறத விட்டுத் தொலைக்கலாம்'லன்னு கூட சொல்லி இருக்காங்க. யாருக்கும் விளங்காத சொல்லைப் போடறதுனால பெரும்பாலும் என் கவிதைகளைச் செய்யுள்ன்னு நினைக்கறாங்க (சிரிக்கிறார்).

கம்பன் சொல்றான்... "சான்றோர் கவி எனக் கிடந்த கோதாவரி..."

கோதாவரி நதி அறிவுடையவரின் கவிதை மாதிரி கிடந்ததாம். கோதாவரியின் வேகம் தெரியும். ஆழம் தெரியும். எவ்ளோ கரடு முரடுன்னு தெரியும். சான்றோர் கவி என்பது கோதாவரியின் உவமை. கவிதைக்கு இந்தத் தன்மையெல்லாம் இருக்கணும். வேகம் இருக்கணும். வீச்சு இருக்கணும். நல்ல தன்மை இருக்கணும். பயிர்களைச் செழிக்கப் பண்ணணும். கட்டற்றுப் பாயணும். அப்போதான் அது கவிதை. ஓடுனாத்தான் வண்டி. நின்னா அது சாக்கடை. கவிதைக்கு இந்தத் தன்மையெல்லாம் இருக்கு. மொழியின் உச்சகட்ட சாத்தியப்பாடு கவிதையில இருக்கு. ஒரு சொல்லை மாத்திட்டு இன்னொரு சொல்லை வைக்க முடியாது. ஒரு வரியை எழுதிட்டு ரெண்டாவது வரியைத் திட்டம் போட்டா எழுதறோம். அது அதுவா வருதுல்ல. அதுதான் கவிதை. அதனால்தான் பாரதிதாசன் சொல்றான். "சொற்கள் எனக்கு ஏவல் கேட்டு நிக்கணும்"ங்கறான். ஓவியனுக்கு எப்படி வண்ணங்கள் முக்கியமோ அப்படி எழுதறவனுக்குச் சொற்கள் முக்கியம்.

## தெண்டல்?

ஒணான். ஒடக்காயி. ஓந்த்தான். ஓகி. ஒடக்கான். தெண்டல். தெண்டல் நான் இருவது வயசு வரை உபயோகிச்ச சொல்தான். நானே மறந்துபோய்ட்டேன். தேவநேயப்பாவாணரைப் படிக்கும்போதுதான் திரும்பவும் நினைவுக்கு வருது. ஓசைக்குத் தகுந்த மாதிரி.... சொல் மாறுது. நாலாயிரம் ஐயாயிரம் சொல்லுக்குள்ளதான் தமிழ்க் கவிதை உழண்டுட்டுக் கிடக்குது. தேங்கிக் கிடக்குது. என்னுடைய அனுமானம் தமிழ் மொழிக்குள்ள 10 லட்சம் சொல் இருக்கணும்.

## எழுத்து எப்போதேனும் சலித்ததுண்டா..?

எழுதாமல் இருந்த நாட்கள் உண்டு. எட்டு நாள் பத்து நாள் எழுதாம இருந்தா புத்தகங்களை ரேக்ல இருந்து எடுத்துத் திரும்பவும் அடுக்குவேன். எழுதலனாலும் படிச்சிட்டு இருப்பேன். ■

• கவி : மனுஷ்ய புத்திரன்
சித்திரம் : அன்பழகன்

## 1

### அன்புடை நெஞ்சம்

இந்த இரவில்
நான் இருக்கும் இடத்தில்
மழை பெய்வதுபோலவே
நீ இருக்கும் இடத்திலும்
மழை பெய்துகொண்டிருக்கிறது.

நாளை காலை
சூரியோதயத்தில்
நான் கண் விழிக்கும்
அதே வெளிச்சத்தில்
நீயும் கண் விழிப்பாய்.

## 2

### வினோதம்

இன்று உனக்குத்
தருவதற்கு என்னிடம்
எதுவும் இல்லை

நான் இன்னும் இருக்கிறேன்
எனும் சிறு வினோதத்தைத் தவிர

## 3

அந்த வலி நெஞ்சில் ஊடுருவும்
அதிகாலைகளில் நாகம் ஒன்று
உடல் மேல் ஊர்ந்து வரும்
உணர்வு. நான் ஆடாமல்
அசையாமல் கண் இமைக்காமல்
அந்த நாகத்தையே
பார்த்துக்கொண்டிருக்கிறேன். ■



நினைவுகள்

கவிக்கோ அப்துல் ரகுமான்

• ஆரூர் தமிழ்நாடன்

# நான் தரிசித்த மகாகவி...!

இந்த நூற்றாண்டின் மகாகவிகளில் பிரதானமானவர் கவிக்கோ. தன்னைக் கரைசேர்க்க அன்னைத் தமிழே ஆசையாய்க் கண்டெடுத்த தத்துவஞானி.

தமிழின் உயரத்தை உயர்த்திய மகாகவிகளில் நம் கவிக்கோ அப்துல்ரகுமான் பிரதானமானவர். சிந்தனைக்கு எட்டாத சிந்தனையாளர்.

**'கற்பனைகள்**
**என்னிடமிருந்து**
**என்னை**
**இழுத்துச்செல்கின்றன' –**

என்ற ஞானவித்தகர்.

கற்பனை செய்து பார்க்க முடியாத கற்பனையாளர். சிந்தனையால் தன்னைத்தானே ஆழப்படுத்திக்கொண்டவர். அதனால்தான்

**'பாதையும் நானே**
**பயணமும் நானே**
**போய்ச் சேரும் ஊரும் நானே' –**

என மாயவெளியில் மகத்துவமாய் அலைந்து திரிந்தவர். ஆழங்காண முடியாத சிந்தனைகளைத் தன்னுள் மூழ்கிக் கண்டெடுத்தவர். அந்தத் தத்துவங்களை எளிய சொற்களுக்குள் நிரப்பி, தமிழ்ப் பரப்பெங்கும் ஒரு வள்ளலைப் போல் வாரி இறைத்தார்.



**'ஆச்சரியம்**
**ஒன்பது ஓட்டை பலூனுக்குள்**
**நீ ஊதிய காற்று**
**எப்படி நிற்கிறது?'**

என்ற அவரது வியப்பு, இப்போதும் பெருவியப்பூட்டுகிறது.

அவரை அறிந்திராவிட்டால் என் கவிதை ரசனை முழுமை பெற்றிருக்காது. அவர் கவிதைகளை நான் படித்திராவிட்டால் காகிதப் படகுகள் கூட என் எழுத்திலும் கற்பனையிலும் தரைதட்டி நின்றிருக்கும். அவரோடு நான் பழகியிராவிட்டால் என் பிறப்பு முழுமை யில்லாமல் முடிந்துபோயிருக்கும்.

நல்லவேளை, இவ்வாறான விபத்தைக் காலம் எனக்கு ஏற்படுத்தவில்லை. அது கருணை பெய்து கவிக்கோவைக் கண்டடைய வைத்தது. அதனால்தான் எனக்கு நானே நிம்மதியடையும் அளவிற்கு என்னுள் ஓரளவு பூரணத்துவம் பெற்றிருக்கிறேன். அல்லது பெற்றுவிட்டதாக நம்புகிறேன்.

பால்வீதி, முட்டைவாசிகள், மரணம் முற்றுப்புள்ளியல்ல உள்ளிட்ட கவிக்கோவின் படைப்புகளைப் பார்க்கும்வரை, என் இலக்கிய உலகம் முட்டை ஓட்டுக்குள் முடங்கிக்கிடந்தது. ஒரு அழகிய ஆகாயத்தை அவர்தான் எனக்குள் விரியவைத்தார். உயரங்களில் ஆழத்தையும் ஆழங்களில் உயரத்தையும் தரிசிக்க வைத்த மாயக்காரர் அவர்.


அவருடைய உயரம் எனக்குத் தெரியும் முன்பே திருவாரூர் திரு.வி.க. கல்லூரியில் அவர் தலைமையில் கவிதை பாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 'விளக்கேந்தும் விளக்குகள்' என்ற பொதுத் தலைப்பில், எனக்கு வழங்கப்பட்ட தலைப்பு 'சிவப்பு விளக்கு'. அதில் அந்த வயதுக்கே உரிய வகையில் வெப்பம் தகிக்கக் கவியெழுதிப் பாடினேன். பல இடங்களில் என்னை அவர், அடடே போட்டுப் பாராட்டினார். அவரது

தலைமைக் கவிதை உருவகச் சுரங்கமாய் எங்கெங்கோ இழுத்துச் சென்றது. அன்றிலிருந்து தான் அவர் மீது மெல்ல மெல்லக் காதல் படரத்தொடங்கியது. அவர் எழுத்துக்களைத் தேடிப்பிடித்துப் பித்தானேன். அப்போது ஜூ.வி.யிலும் ஜூனியர் போஸ்ட்டிலும் எழுதிய தொடர்கள், வசியவலை வீசி வளைத்தன.

அவரது அலங்காரமற்ற சொற்களுக்குள் கடலின் ஆழம் புகுந்துகொள்ளும் வித்தையை ரசித்து ரசித்து, ஒரு பித்தனாய் அவரை என் மனதிற்குள்ளேயே பின்தொடர்ந்தேன். அந்தக் காலகட்டத்தில் சுரதா, பொன்னிவளவன், வைரமுத்து, மு.மேத்தா போன்ற கவியுலக ஜாம்பவான்களிடம் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்த நான், கவிக்கோவை மட்டும் நெருங்கவில்லை. அதற்கான வாய்ப்பும் அப்போது எனக்கு வாய்க்கவில்லை. அவர் என் தூர தேசக் காதல் யாத்ரீகராய் இருந்தார். எங்களுக் கிடையிலான தூரத்தைக் கருணையோடு காலம் ஓர் நாள் களவாடியது. அன்று என்னை அவரிடமே தொலைத்து அவரிடமே கண்டுபிடித்தேன்.

'இனிய உதயம்' இதழின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நான், அன்றே, கவிக்கோவை அதில் எழுதவைப்பது எனத் தீர்மானித்தேன். என்னை அன்பு இளவல் ஆரூர் புதியவன் எனும் பேராசிரியர் ஹாஜாகனி, கவிக்கோ இல்லத்திற்கு அழைத்துச்சென்று அறிமுகப்படுத்தினார். இதில் ஒரு சின்ன சுவாரஸ்யம் என்னவெனில், ஹாஜாகனி மாணவராக இருந்தபோது, கவிக்கோவின் நூல்களை அவருக்கு நான்தான் கொடுத்துக் கவிக்கோவை அறிமுகப்படுத்தி, அவரைப் படிக்கச் சொன்னேன். அந்த ஹாஜாகனிதான், அறிமுகப்படுத்தியவனைக் கவிக்கோவிடம் அறிமுகப்படுத்தினார்.

ஒற்றை நொடியிலேயே ஒரு யுகாந்திரத்திற் கான நட்பை என்மேல் ஈவு இரக்கமின்றிக் கொட்டினார் கவிக்கோ. கவிதை கேட்கச் சென்ற நான், எங்கள் ஆசிரியர் நக்கீரன் கோபால் அவர்களிடம் கூட இசைவுபெறாமல், எங்கள் 'இனிய உதயத்துக்கு' நீங்கள்தான் நெறியாளராக இருந்து வழி காட்டவேண்டும் என்றேன். உடனே, தலையசைத்த அவர், இதழில் இதை இதைச் சேர்ப்போம் என்று பட்டியல் போடத் தொடங்கியதோடு, படைப்பாளர் சிலரையும் தொடர்புகொண்டு இனிய உதயத்திற்குப் படைப்பு



கேட்டார். அன்றே இனிய உதயத்தின் ஆசிரியராகவே ஆகிவிட்டார் கவிக்கோ.

'ஒரு கவிதைத் தொடரையும் உதயத்தில் எழுதுங்கள்' என்றேன். 'என்ன தலைப்பில்?' என்றார். 'உங்கள் விருப்பம்' என்றேன். மூன்று தலைப்புகளைச் சரசரவென எழுதி நீட்டினார். அதிலிருந்து 'அழகை ஆராதிப்போம்' என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன்.

என் பொறுப்பில் வந்த இனிய உதயம் முதல் இதழிலேயே, இதழின் ஆலோசகராய் மாறி, ஆராதனைத் தொடரையும் தொடங்கிவிட்டார் கவிக்கோ.

இப்படி அவரைக் கிள்ளிக்கொண்டு வரலாம் என்று அவரைத் தேடிப்போன என்னை, அவர் அள்ளி எடுத்துக்கொண்டார். மரணம் வரை அவர் என்னை விட்டுப் பிரியவில்லை. வாழ்வில் வேறெந்த சுகத்திற்கும் அடிமைப்படாத அவர், எல்லாவற்றிலும் ரசனையோடு மூழ்கினார்.

அவர் வாழ்வின் ரசிகர்.

ஒழுக்க எல்லைகளைக் கொஞ்சமும் மீறாத ரசிகர். ஒதுக்கப்பட்டவைகளின் பக்கம் அவர் நினைவுகள்கூட ஒதுங்கியதில்லை.

அவர் கவிதைப் பிரியர் மட்டுமல்ல; இசைப்பிரியர்.

உலகின் உன்னத இசைக் களஞ்சியங்களைத் தன் இல்லத்தில் சேமித்தார்.

அவர் ஒரு ரசனையான உணவுப்பிரியர். பொருட்களைக் கொடுத்து அவரை வயப்படுத்த முடியாது. ஆனால், பெருமாள் கோயில் புளியோதரையைக் காட்டி அவரைக் கடத்திக்கொண்டே போய்விடலாம்.



ஒரு சந்திப்பில், உரையாடலின் நெகிழ்ச்சியில் இருந்த கவிக்கோ, என்ன நினைத்தாரோ...

**‘என்னைச்**
**சந்திக்க வராதே..!**
**நீ பிரிந்து போகும்போது**
**ஏற்படும் வலியைத்**
**தாங்கமுடியவில்லை’**

என்று என்னிடம் எழுதிக்கொடுத்தார். அப்போது அவர் நலமுடன் தெம்பாகவே இருந்தார். எனினும், அவரது உள்மனம் உணர்த்தவேண்டியதை உணர்த்திவிட்டது. அவர் எழுதிக்கொடுத்த அந்தத் துண்டுத்தாள்... இப்போதும் என்னைத் தூங்கவிடுவதில்லை. அதிலிருந்த ஒவ்வொரு எழுத்திலும் அவரது இதயத்துடிப்பை என்னால் கேட்கமுடிகிறது.

என்னிடம் கடைசியாய் ஒரு கவிதையை எழுதிக்கொடுத்தார்.

**‘இறங்கவேண்டிய இடம்**
**வந்துவிட்டது என்கிறார்**
**நடத்துனர்**
**ஆனால்**
**என் பயணம் இன்னும்**
**முடியவில்லையே’**

*

**‘கண்ணாடி அப்படியேதான் இருக்கிறது**
**நான்தான் உடைந்துவிட்டேன்’**

*

**‘என்னிடமிருந்து**
**புறப்பட்டு**
**நெடுந்தூரம் வந்துவிட்டேன்**
**எங்கே போவது என்றும் தெரியவில்லை**
**திரும்பிப் போகவும்**
**விரும்பவில்லை’**

என்றெல்லாம் அந்தக் கவிதைகள் நிகழ இருப்பதைக் குறிப்பால் உணர்த்தின. அதோடு, ‘எனது வாழ்க்கை இன்னும் மிச்சமிருக்கிறது. ஆனால் அழைப்பு வந்துவிட்டதே’ என்ற தொனியே இவற்றில் உழல்கிறது.

ஆனால் இவையெல்லாம் அவர் இருக்கும் போது, மூளைக்கு உறைக்கவில்லை.

அவருடனான நட்புக்காலத்தில் எத்தனையோ அனுபவப் பக்கங்கள் நினைவில் புரள்கின்றன. அவரோடு சுற்றித்திரிந்த குறும்பயணங்கள், அவர் நாக்கு அழைத்துச் சென்ற உணவு விடுதிகள், கலைஞரிடம் அவர் அழைத்துச் சென்ற பொன்பொழுதுகள், உலகம் அறியாத அவரின் இசை உலகம், எல்லாவற்றிலும் அவர் மேற்கொள்ளும் தத்துவ யாத்திரை, மருத்துவ மனையிலும் அவர் நடத்திய இலக்கிய ராஜாங்கம், தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த எனக்காக, அங்கேயே வந்து அவர் செய்த துவா, அவருடைய முகநூல் பிரவேசம், நள்ளிரவில் மு.மேத்தாவைக் கடற்கரைக்குக் கடத்திவந்து, அவரின் 70ஆம் பிறந்த நாளைக் கொண்டாடிய பேரன்பு, நக்கீரனுக்காக ஆப்புக் கவிராயராக அவர் எடுத்த அவதாரம், தொலைபேசியில் வந்து விழும் கவிதைகள், ஒரு பெரும்கவிஞரின் குடும்பத்தைச் சேர்த்துவைக்க அவர் எடுத்த முயற்சி, சிறுநீரகப் பிரச்சினைக்கு நடுவிலும் மெரினா போராட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய சாகஸம், கடைசியாய்க் கொடுத்த விருந்து, தன் இல்லத்தில் அவர் பொறிக்க விரும்பிய மரணக் கவிதை, மரணத்துக்கு முன்னான கடைசிச் சந்திப்பு என இதயத்துக்குள் ஏராளப் பக்கங்கள் படபடக்கின்றன. நான் தீர்ந்து போவதற்குள் எல்லாவற்றையும் எழுதித் தீர்க்கவேண்டும்.

அவர் இரவைப்போல் நிரந்தரமானவர். எனினும் அவர் பகல்களையே பிரசவித்தார். ‘உன் இருளில் மின்மினிகளாய் அலைகின்றன என் வார்த்தைகள்’ என்று எழுதினார். என் நிலையும் அதுதான்.

அந்த மகாகவிஞன் மரித்தான் என்பது பாமரக் கணக்கு. நிலைத்தான் என்பது பரவசக் கணக்கு. ■

• லீலாசுகன்
(சுகனின் மகள்)

# நெஞ்சில் உறைந்தவை



ஒரு 'வானவில்' தோன்றி மறைய எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளுமோ அதே அளவுக்காலம் இருக்கும் என்பேன்.. அப்பா என்னுடன் இருந்த நாட்களை. அப்பா என்ற ஆளுமையை நான் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

'நான் சொல்றதத்தான் நீ கேக்கணும்' என அப்பா என்னை ஒருபோதும் அதட்டியதோ, கட்டளையிட்டதோ கிடையாது. பேசவிட்டு விவாதித்துத் தெளியவைப்பார். தெளியவில்லை என்றால் "தெளிவற்ற மனம் தெளியும்" என என் போக்கில் விட்டுவிடுவார். பேசாமல்கூட இருந்திருக்கிறோம். என்னையோ, என் எண்ணங்களையோ ஒடுக்கி என்னை வற்புறுத்தி ஒன்றுகூடச் செய்ய வைத்தது இல்லை. நான் என் இயலாமையால் துவளும்போது என்னை உற்சாகப்படுத்தத் தவறியதும் இல்லை. நான் தோற்கும்பொழுது "இன்றோடு போகட்டும் திருந்திவிடு, உந்தன் இதயத்தை நேர்வழி திருப்பிவிடு" என்பார்.

எனக்குப் பத்து வயது இருக்கும். கிரிக்கெட் மைதானம் சென்று, விளையாடுவோம். எப்பொழுதும் எதிரணியிலேயே விளையாடி இருக்கிறேன். அப்பாவின் அணியில் நான் விளையாடியதே இல்லை. அப்பொழுது கோபமும், வெறுப்பும் சேர்ந்து வெறித்தனமான அப்பாவைப் பார்ப்பேன். என் பார்வையைப் புரிந்துகொண்டு அப்பா வெளிக்கொணர்ந்த பதில் சிரிப்பு. அந்தச் சிரிப்பை வர்ணிக்க இயலாது. அப்படி ஒரு நக்கலான சிரிப்பு. விளையாட்டில் அடிபட்டு நான் அழுதிருக்கிறேன். 'விளையாட்டில் இதெல்லாம் இயல்பு. உத்வேகம் இருந்தால் விளையாடு, இல்லையென்றால் ஓய்வெடுக்கலாம்' என்பார். ஒருநாள் நண்பர் வீசிய பந்து என் கண்ணில் பட்டுப் பலத்த அடி. அழுதேன். பந்து வீசிய நண்பரே பயந்துபோய் அப்பாவைப் பார்த்தார். அப்பாவிடம் அப்பொழுதும் பதற்றம் இல்லை. அழுகை வெறியாக மாறியது, போடுங்கள் பந்தை என்று விளையாடினேன். அன்று எங்கள் அணி வெற்றி பெற்றது. அப்பொழுது அப்பா வாழ்த்து கூறிச் சிரித்துவிட்டுக் "கோழைகள்தான் கண்ணீரை வீண் செய்வார்கள்" என்று கூறினார். அப்பாவின் அணியில் விளையாடி, வெற்றி பெறுவதைவிட இந்த மகிழ்ச்சி வித்தியாசமான உணர்வைக் கொடுத்தது. வலிகள் இருந்தாலும் வெற்றி பெற்றபோது கிடைக்கும் மகிழ்ச்சி மருந்தாக மாறும் எனப் புரிந்தது.

அப்பா ஆசிரியர். அந்த அதிகாரத்துடன் எங்களுக்குப் படிப்பைத் திணித்ததோ, நாங்கள் படிக்கும்பொழுது தலையிட்டதோ கிடையாது.

படிப்பைக் கவனிப்பது எல்லாம் அம்மாதான். இரண்டாம் வகுப்பு படிக்கும்பொழுது (< , >) இவ்விரண்டு குறிகளின் பேதம் எனக்கு விளங்கவில்லை. "சுகலீ இது ஒன்னும் இல்லடா.. இந்தக் குறிகளை நம் வீட்டுக் கதவு என வைத்துக்கொள். எந்த எண் பெரிதோ அந்தப் பக்கம்

கதவு திறக்க வேண்டும். அதனால் வாய் அகன்ற பகுதியை அதை நோக்கி இருக்கும்படி போடணும் டா" என்று சொன்னார்கள். அந்த வயதில் என் மனதில் சட்டென்று ஒட்டிக்கொண்டது.

சுகன் இலக்கிய நிகழ்வுகளில் தமிழ் வணக்கம் எனக்குத் தரப்பட்டிருந்தால் அதற்கான பாடலைத் தேர்வு செய்து கொடுப்பார். இதைத் தவிர பேசும் பொறுப்பு எனக்குக் கொடுத்தால் ஒருபொழுதும் எழுதிக்கொடுத்து என்னை மேடை ஏற்றியது கிடையாது. அப்பாவிடம் "தெரியவில்லை" என்று கூறினால் பாற்கடலில் அமுதம் கடைவது போல் செய்திகள் கிடைக்கும். "செய்திகளைக் கூறிவிட்டுக் கடைசியாகத் "தெரியவில்லை" என்று கூறுவது தவறில்லை. "தெரியவில்லை என்று கூறிவிட்டுத் தெரிந்துகொள்ளாமலோ, தெரிந்துகொள்ள முயற்சி எடுக்காமலோ இருப்பதுதான் தவறு, தேடுதலில் பஞ்சம் இருக்கக்கூடாது மகளே" என்பார்.

அப்பா பொதுவாகப் பொறுப்புகளை எளிதில் கொடுத்துவிடமாட்டார். கொடுத்துவிட்டார் என்றால், அதில் ஈடுபாடு, ஒழுங்கு, திறம்படச் செயலாற்றுதல் இருக்க வேண்டும் என எண்ணுவார். இவை இல்லையென்றால் பொறுப்பு பறிக்கப்படும். திரும்பி நான் தலைகீழாக நின்றாலும் வாங்குவது கடினம். சுகனுக்கான சந்தா வரவு மற்றும் செலவு பார்க்கும் நோட்டு, பணம் இவற்றைப் பள்ளி செல்லும் அவசரத்தில் அலமாரியில் வைக்காமல் வெளியே வைத்துவிட்டுச் சென்றுவிட்டேன். அப்பா பத்திரப் படுத்தி வைத்ததோடு, இரண்டு நாட்கள் எதுவும் கூறாமல் என்னைத் தேடவிட்டார். பின்பு பத்திரப்படுத்தியதைக் கூறியதோடு செய்யும் வேலையில் நிதானமும், தன் நிலை அறிந்தும் செயல்படவில்லை என்றால் வாய்ப்புகள் நம்மை விட்டு நழுவிவிடும் என்றும் கூறினார். அப்பொறுப்பு என்னிடம் இருந்து பறிக்கப்பட்டது. அந்தப் பொறுப்பை நான் திரும்பிப் பெற எந்த முறையீடுகளும், பரிந்துரைகளும் அப்பாவிடம் செல்லுபடி ஆகவில்லை.

ஆங்கில இலக்கணம், தமிழ் இலக்கணம், தட்டச்சு, ஒற்றுப்பிழை, ஹிந்தி, பாட்டு, கவிதை எழுதுதல், செய்யுள் பொருள் உணர்தல், கணினி மென்பொருள் கருவியைக் கையாளுதல் எனப் பல்வேறு பரிணாமங்களை என் முன் வெளிச்சப்படுத்தினார். மின்சாரம் இல்லாத இரவுகளில் நிலா ஒளியில் அப்பாவுடன் பேசிய பேச்சு, என் பாட்டைக் கேட்டு அப்பாவின் சிலாகிப்பு... எதையும் மறந்துவிட முடியாது. வாழ்க்கையின் பொக்கிஷமான பக்கங்கள் அவை. எனக்கு மின்னஞ்சல் முகவரி உருவாக்கி அவர் அனுப்பிய முதல் மின்னஞ்சல் இது.

'என்னுயிர் மகளுக்கு வணக்கம்...

புதிய மின்னஞ்சல் பெருவழியை உனக்குத் திறந்துவிட்டிருக்கிறேன். அந்த வெளியில் உன் எண்ணச் சிறகுகளைக்கொண்டு நீ பயணிக்கலாம், பயணம் இனிதானதுதான். தொந்தரவுகள் வராதவரை எதிர்ப்படும் எத்தனையோ வண்ணப்பறவைகள் உன் கண்களைக் கவரும். எதையும் ஆய்ந்து இரசி, இரசிப்பதில் என்ன ஆய்வு என்று உனக்குள்ளேயே கேட்டுக்கொள்ளாதே. அப்படித்தான் கேட்க மனது தூண்டும். எதையும் அளவோடு இரசிக்கக் கற்றுக்கொள்வதோடு, அதையும் ஆய்ந்தும், ஆழ்ந்தும் இரசிக்க வேண்டும். எதையும் சந்தேகி என்றுதான் அம்மா பொதுவுடைமைச் சித்தாந்தம் நம்முன்னே விரிகிறது. தீதும் நன்றும் பிறர் தர வாரா. என்ன புரிகிறதா? பறக்கப்பறக்க உன்னைத் தெளிவிக்கும். வாழ்த்துக்கள்.

உன் அப்பா

க.சு.சரவணன்.'

அப்பாவின் இந்த வார்த்தைகளை நான் பொது இடங்களில் பேசும்பொழுதும் பதில் மின்னஞ்சல் அனுப்பும்பொழுதும் நினைவுபடுத்திக் கொள்வேன்.

அப்பா, அம்மா சண்டைகளில்கூட என்னைக் கூப்பிட்டுக் கேட்பார் "சுகா சரி, தவறு எது என உன் கண்ணோட்டத்தைக் கூறு. நான் சரி செய்து கொள்வேன். நீ சிறுபிள்ளை என்றெல்லாம் நினைக்க மாட்டேன். தலைவணங்கிக் கேட்பேன்" என்பார். சம்பள நாளில் மாலை கூடிப் பேசுவதும், இனிப்பு சாப்பிடுவதும் வழக்கம். எட்டாம் வகுப்பு படிக்கும்பொழுது அப்பா சம்பளத்தை முழுவதும் என் கையில் கொடுத்து கணக்கு எழுதச் சொல்லி அனைத்துச் செலவுகளுக்கும் என்னிடம் இருந்து அம்மா அப்பா வாங்கிச் செல்வார்கள்... அம்மாவும் அப்பாவும் எங்களிடம் திறந்த புத்தகங்களாகவே இருந்தார்கள்.

என் தவறை நான் உணராமல், மன்னிப்பு கேட்காமல் பல நாட்கள் அப்பாவுடன் பேசாமல் இருந்திருக்கிறேன். என் பெரும்பாலான பிறந்த நாள்களில் அப்பா என்னுடன் பேசியது கிடையாது. பேசும்படி நான் நடந்துகொண்டதும் கிடையாது. வீம்பு பிடித்து மரம் போல் நிற்பேன். அருமை தெரியவும் புத்தியில் பிடிபடவும் இல்லை. அதனாலோ என்னவோ என் இனிவரும் எந்தப் பிறந்தநாளிலும், அப்பாவின் முகத்தைக்கூடப் பார்க்க முடியாத சபிக்கப்பட்டவளாக நிற்கிறேன். தோல்விகள் ஏற்படும் பொழுது ஊற்றுக்கண்ணாய்ப் பெருக்கெடுக்கவும், வாழ்க்கையை இலட்சியத்துக்காக மாற்றி, ஓடவும் கற்றுக்கொடுத்தார். சாகும்வரை படிக்க வேண்டும். தனிமையைப் போல் புத்தி புகட்டும் ஆசானும் இல்லை. புத்தகங்களைப் போல் சிறந்த நண்பனும் இல்லை என்று கூறுவார்.

மருத்துவமனையில் நாங்கள் கழித்த மாதங்கள் என் மூச்சு இருக்கும்வரை என் மனதில் இருக்கும்.

சுயநினைவு இழந்து பிழைத்து வந்தபொழுதும் அவருக்கு இருந்த தெளிவு எனக்கு மட்டுமே புரியும். "இந்த மருத்துவம் இவர்கள் சிகிச்சை பார்ப்பது எதுவுமே சரியில்லை சுகா" என்றார். "திடீரென்று என் மூச்சு நின்றுவிட்டது என்று கொடுத்து விட்டார்கள் என்றால் என்ன செய்வாய்?" என்று முதல் முறை தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து வந்தவுடன் என்னிடம் கேட்டார். அப்பாவிற்கு ஆங்கில மருத்துவம் மீது ஈடுபாடு இல்லாததால் இப்படி கூறுகிறார் என்று நினைத்து அவரை அன்று சமாளித்தேன்.

அப்பாவின் வற்புறுத்தலால் வீட்டிற்கு வந்து அப்பாவிற்குத் தினம் கட்டு மாற்ற மருத்துவரை ஏற்பாடு செய்தோம். அப்பொழுது காஸ் துணியில் மருந்து வைத்து உடம்பில் அடைத்துக் கட்டு கட்டி அதை மறுநாள் மாற்றுவார்கள். மருத்துவர்களின் கவனக்குறைவால் முதுகில் இருந்து சில நாட்களாக அடைக்கப்பட்டு இருந்த துணியை எடுத்தோம். இன்னும் அந்தக் கவுச்சி என்னை விட்டுப் போகாமல் இருக்கிறது. தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் பாது காவலரை ஏமாற்றிவிட்டுச் சென்று பார்ப்பேன். நேரம் பாராமல் நெஞ்சு குறுகுறுக்காமல் மருந்துகளை எழுதிக் கொடுத்து வாங்கி வரச் செய்தார்கள். சுயநினைவை இழந்து அப்பா ஏதோ முணுமுணுத்து இருக்கும்பொழுது ஒருமுறை பார்த்தேன். அப்பா என்று கூப்பிட்டேன். உடனே சுகலீலா வந்திருக்கிறாள், அவள் குரல் அது என்று முணுமுணுத்தார். அது என் மனதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. பல நாட்களைத் தொலைத்துவிட்டேனே என்று நெஞ்சு அடித்துக்கொண்டது.

பல மருத்துவ உபகரணங்களைக் கொண்டு அப்பாவைச் சிறைசெய்திருந்தார்கள். 'யார் வந்துருக்காங்க தெரியுதா? சொல்லுங்க'ன்னு மருத்துவர்கள் கேட்கும்பொழுது நெஞ்சில் கையை வைத்து என்னை நோக்கிக் கையசைத்து அழைத்தார். அப்பா சொன்னாங்களே கோழைகள்தான் கண்ணீரை வீண் செய்வார்கள் என்று, அதை நினைத்துக்கொண்டு 'நான் உங்க பொண்ணு' எனக் கூறிச் சிரித்துவிட்டு வெளியே வந்தேன்.

வீட்டிற்கும் மருத்துவமனைக்கும் அலைந்தோம். கடைசியாகச் சர்க்கரையின் அளவு உடலில் குறைந்து சுயநினைவு இழந்து உளறும் அளவிற்கு உடல்நிலை மோசம் ஆனது. காலையில் இருந்து அப்பாவின் உளறல் நிற்கவில்லை. குழந்தையைச் சமாதானப் படுத்துவது போல் நாங்கள் செய்த எந்த முயற்சியும் அப்பாவை அமைதிப்படுத்தவில்லை. அம்மா என்னைப் 'பார்த்துக்கோ மருத்துவமனை செல்ல ஏற்பாடு செய்கிறேன்' எனப் போனாங்க. ஏதேதோ சொல்லிப் பார்த்தேன். எதார்த்தமாக 'அப்பா நான் பாட்டு பாடவா' எனக் கேட்டேன். உளறல் நின்று கண்ணில் கண்ணீரைப் பார்த்தேன்.

"சன்னிதியின் முன்னே நின்று சங்கடங்கள் தீர வேண்டி சங்கரியே சாம்பவியே வணங்குகிறேன்" எனப் பாடினேன். சுய நினைவை இழந்த நிலையில் என் பாட்டு அப்பாவின் ஆற்றலை ஐந்து நிமிடம் சேமித்தது என் மனதைத் தைத்தது. எத்தனையோ முறை நல்ல குரல் வளர்த்துக்கோ என்றிருக்கிறார். அவருக்கு இறுதிவரை என் குரலை முழுமைப்படுத்தி மகிழ்ச்சி அளிக்காத பாவம் செய்த மகள் நான். குற்ற உணர்வு கொல்கிறது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த கடைசி வாரம் மூச்சு உள்ளதா என்று ஈ.சி.ஜி. நாடித்துடிப்பு காட்டும் கருவி இதையெல்லாம் பார்த்துவிட்டுத்தான் வெளியில் வருவேன். கடைசியாக அப்பா நான் பேசியதைக் கேட்டுக் கையசைத்தது "அம்மாவை நான் பார்த்துக்கொள்கிறேன்" என உறுதி கூறியபோதுதான்.

முதல் நாள் இரவு துடித்த இதயத்தைக் கைவைத்து உணர்ந்த நான் மறுநாள் காலை உயிரில்லை என்று கொடுத்தவுடன் கைவைத்துப் பார்த்தேன். 'இந்த மருத்துவம், இவர்களின் சிகிச்சை சரியில்லை, உயிரில்லை எனக் கையில் கொடுத்தால் என்ன பண்ணுவ?' என்ற அப்பாவின் இரண்டு கேள்விகளும், அம்மருத்துவமனை பற்றிப் பத்திரிக்கைகளில் படிக்கும்பொழுது நெஞ்சைப் பிளக்கின்றன. நான் தவறுவதற்கு முன் அப்பா எப்பொழுதும் அறிவுறுத்துவார். அதே போல் இதையும் அறிவுறுத்தியும் விட்டுவிட்டாயே சுகா என என் மனது என்னைப் பிளக்கிறது.

அம்மாவின் அம்மா (அம்மச்சி) அப்பாவை எடுக்கும் தருவாயில் அப்பாவின் கன்னத்தில் முத்தம் கொடுத்தார்கள். அப்பொழுது அப்பாவின் கண்கள் சட்டென்று திறந்துகொண்டன.

அப்போது அம்மாவிற்கான அப்பாவின் கவிதையை நினைத்துக் கொண்டேன்.

'என் நாளங்களில் இரத்தமோடவில்லை, அவளின் நினைவுகள்தான்... எல்லாவற்றையும் மறந்து போகலாம். ஆனால் உன்னைத் தவிர... என் கடைசி நிமிடங்களில்கூட உன் நினைவுகள் உதிராது... ஒருவேளை நான் செத்துப் போனாலும்... என் உடலில் உன் ஒரு முத்தம்... மீண்டும் என்னை உயிர்ப்பிக்கும்! வாழ்க்கையில் நாம் சராசரிகள் அல்லடி... மைல்கற்கள்!'

மூவர் மீதும் கவலை இல்லை. என் பிள்ளைகள் பிழைத்துக்கொள்ளும் என்பார். அப்பா... உங்கள் பிள்ளைகள் நாங்கள் பிழைத்துக்கொள்வோம். ■

## தண்ணீருலகம்

# தண்ணீர்க் கவிதைகள்

மாசம் மும்மாரிகூட வேணாம்,
வருசத்துக்கு மூனு மழயாவது
தாடியம்மான்னு சாட்டினாங்க
அம்மனுக்குத் திருவிழா..
வருசம் முச்சூடும் கருவறைச்
சூட்டிலயும் கற்பூரச் சூட்டிலயும்
வதங்கின அம்மனும் காத்தாடக்
கிளம்பினா திக்குவிசயம்..
நகநட்டு பூமால பாரத்தோடயும்
பட்டுச்சேல கசகசப்போடயும்
பக்தனுங்க நசநசப்போடயும்
தேரோட ஊர்வலம் போயிக்
கத்திரி வெய்யிலு தாளாம
ஆஞ்சு ஓஞ்சு எங்கூட்டு வாசல்ல
நின்ன அம்மன் வாய்திறந்து கேட்டா
'மவராசியா இருப்ப..
ஒரு சொம்பு தண்ணி குடு தாயி'

– ஷெண்பா

அரசியல் கட்சிகள்
அரங்கேற்றிய
தண்ணீர்ப் பந்தல்கள்
துவக்கிவைக்க வந்த
அரசியல்வாதிகளுக்கு
டிஜிட்டல் பேனர்கள்
மண்பானைகளில்
தண்ணீர் விநியோகம்
திறப்புவிழாச் செலவு
பல லாரி தண்ணீர் செலவில்..

– மாறன்மணிமாறன்



# தண்ணீர்க் கவிதைகள்

ஆற்று நீர்
அலையாகும்போது
உப்பு கரிக்கத் தொடங்குகிறது..!

– க ராஜகுமாரன்

நீர் வற்றிய ஆற்றில்
கடைசி மீன்கள்
மூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றன!

– ஜெகன் மோகன்

குடங்களின் கனவில்
நீர் நிறைந்த ஞாபகம்

சாலையெங்கும்
நிறைந்து கிடக்கிறது
கானல் நீர்

உயிர் விடக் காத்திருக்கும்
அதோ ஓர் ஒற்றை மரம்

வெட்டுண்ட மரத்தின்
வேர்களைப் போலவே
பற்றிக்கிடக்கிறது நம்பிக்கை........

– வீ.கதிரவன்

எல்லையற்ற அகன்ற வானத்தில்
அமிலத்தை அள்ளித் தெளித்துக்
கருமேகங்களைத் திரண்டு வரச்செய்து
சிவப்பு மழையைப் பொழிய வைக்கப்
பிரயத்தனங்கள்
செய்துகொண்டிருக்கிறார்கள்
புதிதாய் முளைத்த காவல்காரர்கள்
மழை நீர் நிறமற்றது
ஏழை பணக்காரன் பாகுபாடற்றது
மலைக்கும் மடுவுக்கும் வித்தியாசம்
அறியாதது
என்ற அதன் தன்மைகளைக்
கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றி
வஞ்சத்தை அதன் நெஞ்சத்திலேற்றிப்
பொழிய வைக்கிறார்கள்
என்றுமே இல்லாத
சிவப்பு மழையைப் பார்த்து
ஒரு பாதி மக்கள் பரிதவிக்க
மறு பாதி மக்கள் எவ்வித
அசூயையுமின்றி
அள்ளிக் குடித்துக்
கும்மாளம் அடிக்கத் தொடங்குகிறார்கள்
நிற்காமல் பெய்துகொண்டிருக்கிறது
சிவப்பு மழை தன் கோர நாக்கினால்
பூமியை விழுங்கியபடி.

– பிரபுசங்கர் .க ■



• முகம்மது பாட்சா

# கவி கா.மு.ஷெரீஃப்





**'அச்சமுள்ள சிறு பறவை கோழிக்கும்**
**வீரவெறி உடனிருக்கும்**
**ஒச்சமென்று ஒதுக்கவொண்ணா**
**உயர்வனைத்தும் பெற்றதுவே நம் நாடு'**

தமிழ் தமிழ் என்றே தமிழுக்காக வாழ்ந்த ஒரு கவிஞன்தான் கவி கா.மு.ஷெரீஃப் அவர்கள். அவரை இந்த இலக்கியச் சமூகம் ஏன் தூக்கிப் பிடிக்கவில்லையென்பது வியப்பான ஒன்றுதான்.

'எழுத்தாளனென்பவன் அந்த எழுத்தாகவே வாழும்போதுதான் அவனது படைப்புகளும் உண்மை நிலையோடு வாழத்தொடங்குகின்றன.. அந்த உண்மை மாறாமல் வாழ்ந்தவர்தான் கவி கா.மு.ஷெரீஃப் அவர்கள்' என்று கவிஞர் வைரமுத்து அவரைப் பாராட்டுகிறார்.

'எனக்கும் மூத்தவர் கவிஞர் ஷெரீஃப் அவர்கள்.. எனது கவிதைகள் வெளிவருவதற்கு முன்பாகவே நான் அவரது கவிதைகளின் தொகுப்பை வாசித்தவன்' என்று பெருமையுடன் கூறிக்கொண்டவர் கவிஞர் கண்ணதாசன்.

திரையிசையில் கடினமான வார்த்தைகளைத் தவிர்த்து எளிமையான நடையில் மக்களிசையாகக் கவிதைகளைக் கொண்டுபோய்ச் சேர்த்தவர் கவிஞர்.

**'ஏரிக்கரையின் மேலே போறவளே பெண்மயிலே**
**என்னருமை காதலியே என்னைக் கொஞ்சம்**
**பாரு நீயே**
**அன்னம் போலே நடை நடந்து சென்றிடும்**
**மயிலே**
**ஆசை தீர நில்லு கொஞ்சம் பேசுவோம் குயிலே'**

கவிதை நயம் சிதையாமல் முதலாளி படத்திற்குக் கவிஞர் எழுதிய பாடல்தான் இஃது. இந்தப் பாட்டிற்காகவே அந்தப் படம் ஓடியது என்று சொன்னால் மறுப்பதற்கில்லை.

சங்கப் பாடலின் நயத்தோடு தலைவனின் வருகைக்காகத் தலைவி காத்திருக்கும் பாடலொன்றைச் சிட்டுக்குருவியிடம் தூது விட்டுப் பாடுவதாக எழுதிய கவிஞரின் பாடலொன்று ராஜேஸ்வரியின் மழலைக் குரலில் அத்தனை இனிப்பாகச் சினிமாவிற்குள் நுழைந்தது.. அதுதான்

**'சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா?**
**என்னை**
**விட்டுப் பிரிஞ்சுப் போன கணவன் வீடு**
**திரும்பல்லே'**

கவிஞர் திரை இசைக்காகத் தந்த பாடல்கள் அத்தனையுமே எளிய தமிழில் என்றும் காலத்தில் நிற்கும் பாடல்களாக அமைந்தன.

பாட்டும் நானே பாவமும் நானே, அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை, வானில் முழுமதியைக் கண்டேன், உலவும்

தென்றல் காற்றினிலே, வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும், ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா?, பணம் பந்தியிலே குணம் குப்பையிலே... என்று அவரது பாடல்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

'அன்னையைப் போலொரு தெய்வமில்லை' என்ற பாடல் தாய்மையின் சிறப்பை அத்துணை அழகாகப் பேசியது. உலகத்தின் பல முகங்களை 'வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும்' பாடல் மூலமாகத் தனது செழிப்பான வரிகளால் எடுத்துவைத்தார் கவிஞர் கா.மு.ஷெரீஃப்.

கவிஞர் அவர்கள் மிகப்பெரிய ஆளுமை ஒருவரையும் நமக்கு அறிமுகம் செய்தவர் என்றால் வியப்பாகத்தான் இருக்கும். அந்த ஆளுமை வேறு யாருமில்லை... கலைஞர் கருணாநிதி அவர்கள்தான். அவரது எழுத்துக் களில் குளிர்ந்துபோன கவிஞர்.. மாடர்ன் தியேட்டரில் கலைஞரை அறிமுகம் செய்துவைத்தார். கலைஞரின் ஜனரஞ்சகப் பயணம் அங்கிருந்துதான் தொடங்குகிறது.

சினிமாத் துறையில் சற்று நெளிந்து வளைந்து சென்றிருந்தால் கவிஞரின் வாழ்க்கை மிகவும் செழிப்பாகவே இருந்திருக்கும்... 'ஆபாசம் மலிந்த பிறகு அங்குத் தனக்கு வேலையில்லை' என்று தூக்கிப் போட்டுவிட்டு வந்த கவிஞனை நாம் அசராமல் எப்படிப் பார்க்க முடியும்?

கவிஞரின் முதல் கவிதை 1934ஆம் ஆண்டுக் குடியரசு இதழில் வெளிவந்தது. பள்ளிப் படிப்பை அதிகம் படிக்காதவர். அவரைக் குடும்பச் சூழல் அனுமதிக்கவில்லை என்பதை மிகவும் நாசூக்காகக் கவிஞரே ஒருதடவை மேடையில் சொல்லி யுள்ளார். தன் தந்தையாரிடம் தமிழ் படிக்க அனுமதி கேட்டபோது 'நீ பேசும் மொழியை எதற்குப் படிக்கவேண்டும்' என்றாராம்... 'ஆங்கிலமாவது படிக்கிறேன்' என்றபோது. 'அந்நிய மொழியை ஏன் படிக்க வேண்டும்' என்று தடுத்தாராம்... சுயமாகக் கற்றலை மிகுத்துக் கொண்ட கவிஞர் தனது கண் பார்வை குறைந்தபோதும் கண்ணாடி போட்டுக்கொண்டு கூடவே ஒரு லென்ஸையும் கையில் வைத்துக்கொண்டு படிப்பார்.

'கவிஞர் ஷெரீஃப் அவர்கள் அருந்தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள் அனைத்தையும் பாங்குறக் கற்றுத் தெளிந்தவர்கள்' என்று மறைந்த சிலம்பொலி செல்லப்பன் குறிப்பிடுகிறார்.

'சீறாப்புராணம் சொற்பொழிவைக் கேட்ட பிறகு, நான் அவரை ஒரு சிறந்த சொற் பொழிவாளராக அறிந்து மகிழ்ந்தேன்' என்று தமிழறிஞர் கி.ஆ.பெ. புகழ்ந்துள்ளார்.

'தம்பி ஷெரீப் கவிஞன் என்று கண்டு கொண்டேன். அவருடைய பாக்களைப் படித்து அதனின்றும் இன்பத்தைக் கங்கு கரையின்றி அனுபவிப்பீர்களாக' என்று 1946ஆம் ஆண்டி லேயே அறிஞர் வ.ரா. பாராட்டியிருக்கிறார்.

கலைமாமணி விக்கிரமன் அவர்கள் கவிஞரை 'சுயம்பு கவிஞர்' எனப் பாராட்டி மகிழ்கிறார்.

'இலக்கியத்தைப் போல, திரைப்படப் பாடல்கள் என்றைக்கும் நிலைத்து நிற்கக் கூடியவை அல்ல. ஆனால், அந்தப் பாடல்களும் கூட, இலக்கியத்துக்கு நிகராக நிலைத்து நிற்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கவி கா.மு.ஷெரீப் அவர்களின் பாடல்கள் உண்டு', என்று தனது நெஞ்சுக்கு நீதி என்ற சுயசரிதை நூலில் கலைஞர் கருணாநிதி அவர்கள் கவிஞரைக் குறிப்பிட்டிருக்கிறார்.

ம.பொ.சி.யின் தமிழரசுக் கட்சியில் முக்கிய நிர்வாகியாகச் செயல்பட்டவர் கவிஞர். அப்போது இவர்கள் முன்னெடுத்த தீர்மானம்தான்.. மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம், தமிழ் ஆட்சிமொழி போன்றவை. ஆங்கில மொழித் திணிப்பிற்கு எதிரான போராட்டங் களிலும், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும், தமிழரசுக் கழகத்தின் முன்னணித் தலைவராகவும் இருந்தும் செயல்பட்டவர் கவிஞர் கா.மு.ஷெரீஃப் அவர்கள்.

சென்னையை ஆந்திராவிடமிருந்து மீட்டெடுத்த போராட்டமாகட்டும், கன்னியா குமரியைக் கேரளத்திடமிருந்து காப்பாற்றிய போராட்டமாகட்டும், திருத்தணியைத் தமிழகத்திற்குத் திரும்பிப் பெற்ற போராட்டமா கட்டும் அனைத்திலும் வீரியத்தோடு போராடிச் சிறை சென்றவர் கவி கா.மு.ஷெரீஃப் அவர்கள்.

இந்தியச் சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்டவர் கவிஞர் என்பதால்.. அவருக்குத் தியாகிகள் பென்ஷன் அறிவிக்கப்பட்டபோது, 'தான் செய்த தொண்டு பணத்திற்காக அல்ல. அதனைப் பணத்தைக் கொண்டு அளவிடுவது அநாகரீகமானது' என்று கவிஞர் அதனை ஏற்காமல் நிராகரித்துவிட்டார்.

கவிஞரின் குடும்பம் வறுமையில் இருந்தபோது நண்பர்கள், 'முதலமைச்சர் உங்களுக்கு நன்கு




தெரிந்தவர்தானே, அவரிடத்தில் ஒரு வீடு கேளுங்கள்' என்று சொன்னபோது, 'நான் வல்ல இறைவனையன்றி, வேறு எவரிடமும் கையேந்த மாட்டேன்' என்றவர். யாரிடமும் உதவி பெறுவதை விரும்பாதவராகவே வாழ்க்கையை வாழ்ந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

கவிதைகளையும் கவிஞர்களையும் பற்றி 1955இல் தமிழ் முழக்கம் என்ற பத்திரிக்கையில் கவிஞர் எழுதிய கவிஞன் யார்? என்ற கட்டுரையிலிருந்து சில சுவாரசியமான தகவல்களை நாம் பெற முடிகிறது.

'கவிஞன் யார்? அவனுக்குள்ள இலக்கணம் என்ன? என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்காத ஒரு கூட்டம் இலக்கணம் தெரியாதவர்கள் கவிஞர்களா? என்று நகைக்கிறது. கவிஞன் என்பவன் இலக்கணத்தின் சிருஷ்டி கர்த்தா. இலக்கணத்திற்குள் அடங்கிவிடுவது கவிஞனுக் குள்ள இலக்கணமல்ல. அது தமிழ்ப் பண்டிதர் களுக்கான இலக்கணம். பண்டிதன் வேறு, கவிஞன் வேறு. இதை உவமை நயத்துடன் கூற வேண்டுமென்றால் கவிஞனைக் காட்டாற்றிற்கு ஒப்பிடலாம். பண்டிதர்களை வெட்டி வைத்த வாய்க்காலுக்கு ஒப்பிடலாம்.

கவிஞன் சிருஷ்டிப்பது இலக்கியம். பண்டிதர்கள் வகுப்பது இலக்கணம். பிறக்கும் போதே குழந்தை ஆடையுடன் பிறக்க வேண்டும் என்பதை ஒத்ததே, கவிஞனை இலக்கணத்திற்குள் அடக்க முயல்வதும். கவிஞன் இல்லையென்றால் இலக்கியத்தில் புதுமை இருக்காது. பழமையை வைத்துக்கொண்டு நீண்ட நாளைக்குப் பெருமையைப் பேசி மொழியை யாரும் காப்பாற்றிவிட முடியாது. தமிழை அழிக்கும் கூட்டம் கவிஞனை இலக்கணச் சிறையில் தள்ளலாம். தமிழை வளர்க்கும் கூட்டம்.. அப்படிச் செய்ய முடியாது...'

மேலும் அந்தக் கட்டுரையில் உண்மையான கவிஞனைக் குறிப்பிடும் கவிஞர், 'பரிசு வழங்குபவர்களைவிடத் தன் கவிதைகளை அதிகம் படிப்பவர்களைத்தான் உண்மையான கவிஞன் விரும்புகிறான்... மக்களும் அவனுக்குப் பரிசுகளைக் கொடுத்துச் சோம்பேறியாக்கி விடுவதைவிட அவனது நூல்களை வாங்கி வாசிப்பதுதான் அவனை ஊக்குவிப்பதாகும்.. கையில் பொருளையோ பொன் முடிப்புகளையோ கொடுத்தால் எந்தக் கவிஞனும் சோம் பேறியாகிவிடுவான். அப்புறம் அவன் எழுத்தில் எந்த ஜீவனும் இருக்காது.. ' என்றும் சொல்கிறார்.

இந்தக் கட்டுரை இன்றைய கவிஞர்களுக்கும் நிச்சயம் பொருந்தும்... பணமுடிப்புகளால் திளைத்துப்போன இன்றைய கவிஞர்கள்... தங்களை அறிவு ஜீவிகளாக பாவித்துக்கொண்டு விஷயமில்லாமல் உளறுவதை நாம் கண் கூடாகவே காண்கிறோம்.

'என் வாழ்நாளில், உண்மையான இந்தக் கவிஞன் முன்தான் சிகரெட் குடிக்க அச்சப்பட்டுத் தவிர்த்திருக்கிறேன்' என்று சொல்லும் எழுத்தாளர் ஜெயகாந்தன் தனது கட்டுரை யொன்றில் மிகவும் சிலாகித்து வியந்த கவிஞர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும்.

1914 ஆகஸ்ட் 11இல் திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி அருகில் உள்ள அபிவிருத்தீஸ் வரம் என்ற ஊரில் பிறந்த கவிஞர் ஒளி, தமிழ் முழக்கம், சாட்டை ஆகிய நாளேடுகளுக்கும் ஆசிரியராக இருந்தவர்.

3 சிறுகதை நூல்கள், 3 நவீனம், 4 நாடக நூல்கள் என 40க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள கவிஞர் சில திரைப்படங்களுக்கு வசனகர்த்தாவாகவும் செயல்பட்டுத் தனது திறமைகளை வெளிப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது வாழ்நாளின் இறுதிப் பகுதிகளில் சீறாப்புராணத்தை விளக்கும் சொற்பொழிவுகளை நிகழ்த்தி மகிழ்வுடன் கழித்தார்.

தமிழ் தமிழ் என்றே சுவாசித்து வாழ்ந்த இந்தக் கவி மாமேதையின் மூச்சுக்காற்று 1993ஆம் ஆண்டுடன் நிறுத்திக்கொண்டது.

கவிஞர் எழுதிய இறைவனுக்காக வாழ்வது எப்படி?, இஸ்லாம் இந்து மதத்துக்கு விரோதமானதா?, நல்ல மனைவி, தஞ்சை இளவரசி, வள்ளல் சீதக்காதி, விதியை வெல்வோம் ஆகிய நூல்கள் அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

அண்ணாரின் சிறப்பை நினைவுகூர்ந்து முன் வைப்பதில் நமக்குப் பெருமை சேர்கிறது. ■

• சக.முத்துக்கண்ணன்

# அன்றில்







'அன்றில் இலக்கியச் சுற்றம்' தேனி மாவட்டம் கம்பம் வட்டாரத்தில் 2014லிருந்து இயங்கிவரும் இலக்கிய அமைப்பு.

கம்பன் கழகங்கள், திருவள்ளுவர் மன்றங்கள் உள்ளிட்ட மரபான தமிழ் அமைப்புகளின் வெகுஜனத்தன்மையையும், முற்போக்கு அமைப்புகளின் சமகால அரசியல் தன்மையையும், நவீன இலக்கிய அமைப்புகளின் இலக்கியப் பார்வை மற்றும் உரையாடல் தன்மையையும் உள்வாங்கிக் கொண்ட அமைப்பாகவே அன்றில் செயல்பட்டு வருகிறது. அன்றில் கட்சி சாராத அமைப்புதான் என்றாலும் அரசியலற்ற அமைப்பில்லை. வள்ளுவர், காந்தி, பெரியார் - இம்மூவரின் உருவம்தான் அன்றிலின் சின்னம். அன்றிலின் அரசியல் இவர்களின் நீட்சியாகவே இருக்கும்.

அன்றிலுக்கென்று ஆயிரக்கணக்கான பார்வையாளர்களைக் கொண்ட முகநூல் பக்கமும், தமிழகம் முழுவதும் விரிந்திருக்கிற பல்வேறு இலக்கியவாதிகளை உள்ளடக்கிய வாட்ஸ் அப் குழுமமும் இயங்கிவருகிறது.

பொதுவாக நாம் எந்த வாட்ஸ்அப் குழுவிலும் ரொம்ப நாள் நீடிப்பதில்லை. குட்மானிங், குட்நைட் தொல்லைகளாலும் கொஞ்சம் கூட யோசிக்காமல் பகிரப்படும் வீடியோ இம்சைகளாலும் குழுவிலிருந்து வெளியேறிவிடுவோம். கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கண்ட குப்பைகள் இல்லாத ஆரோக்கியமான இலக்கிய & அரசியல் விவாதங்களும், விமர்சனங்களும், படைப்புகளும் பதிவிடப்படும் குழு இது. நாள்தோறும் பலர் விரும்பித் திறக்கும் இவ்வாட்ஸ்அப் குழு இலக்கிய இதழுக்கான தன்மையோடு நடத்தப்பட்டு வருகிறது.

தேனி அருகே கம்பம், உத்தமபாளையம் பகுதியில் காந்தி, பெரியார், கலைஞர் போன்ற அரசியல் ஆளுமைகளையும், பாரதி, ஞானக்கூத்தன், அப்துல் ரகுமான், தோப்பில் முகம்மது மீரான், பிரபஞ்சன், எஸ்.ராமகிருஷ்ணன், வைரமுத்து, ஜெயபாஸ்கரன், நா.முத்துக்குமார், கம்பம் மாயவன் போன்ற இலக்கிய ஆளுமைகளையும் கொண்டாடும் வகையில் சிறப்புக் கருத்தரங்கங்களை நடத்தி மாவட்டத்திற்குள் முதன்மையான இலக்கிய அமைப்பாக அன்றில் உருவெடுத்துள்ளது.

தமிழின் தொன்மை, சமகாலக் கல்விமுறை, வளர்பருவ மனநிலை, பெண்ணியம், இந்திய ஜனநாயகம், சூஃபியிசம், காதல், தேசியம் வளர்த்த தமிழ், திராவிடம் வளர்த்த தமிழ், பொதுவுடைமை வளர்த்த தமிழ், திரைத்தமிழ் போன்ற

பொருண்மைகளிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருகின்றன.

'படைப்பரங்கம்' என்கிற பெயரில் கவிதை வாசித்தல், நூல் அறிமுகம், கதையாடல், இசைப்பாடல், சிறு உரைகள் என்று பல்வேறு வடிவங்களில் அறிமுகப் படைப்பாளிகளுக்கும், மாணவர்களுக்கும் வாய்ப்பளித்து வருகிறது.

ஆண்டிற்கொருமுறை பொது இடங்களில் மக்களைத் திரட்டி மரபான இலக்கியத் தலைப்புகளில் பட்டிமன்றம், வழக்காடு மன்றம், கவியரங்கு உள்ளிட்ட வடிவங்களில் நிகழ்ச்சிகளை அன்றில் நடத்திவருகிறது.

'அன்றில் மாணவர் சுற்றம்' எனும் அன்றிலின் கிளை அமைப்பின்வழி தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பேச்சு, கட்டுரை, கவிதை, ஓவியம், பாட்டு என ஐந்து கலைப்பிரிவுகளில் வருடந்தோறும் போட்டிகள் நடத்தி ரூ30000 மதிப்பிலான பணப்பரிசுகளும், கேடயங்களும், புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஹௌதியா இலக்கியச் சுற்றம் எனும் அன்றிலின் கிளை அமைப்பை உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரிக்குள் ஏற்படுத்தி நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இலக்கிய அனுபவம் பெறவும், தமது படைப்புத்திறனைக் கொணரும் வாய்ப்பாகவும் வாரந்தோறும் இலக்கியச் சந்திப்பை நடத்திவருகிறது.

அன்றில் நிறுவனரும், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியரும், பேச்சாளரும், எழுத்தாளருமான முகம்மது ரஃபீக் @ மானசீகன் அவர்கள் எழுதிய முகநூல் கட்டுரைகளைத் தொகுத்து இரண்டு நூல்களாகத் தமிழினி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

படைப்பாளிகள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், அரசு அலுவலர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், மாணவ, மாணவிகள் என்று ஐம்பதுக்கும் மேற்பட்டோர் அன்றிலின் செயற்குழு உறுப்பினர்களாக இயங்கிவருகின்றனர். சமீபத்தில் இக்குழு முடிவின்படி 'அன்றில் விருதுகள்' அறிவிக்கப்பட்டுள்ளன. வருடந்தோறும் ஏதேனும் ஒரு கலைப்பிரிவிற்கு இவ்விருது வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டைச் 'சிறுகதை ஆண்டாக' அன்றில் அறிவித்திருக்கிறது. அந்த வகையில் சிறுகதையில் வாழ்நாள் சாதனையாளர் ஒருவருக்கும், கடந்த ஆண்டுச் சிறுகதைத் தொகுப்பு வெளியிட்டிருக்கும் ஒரு அறிமுக எழுத்தாளருக்கும் முறையே ரூ15,000, 10,000 பணப்பரிசு மற்றும் நினைவுக் கேடயத்துடன் அன்றில் விருதுகள் வரும் நவம்பரில் வழங்கப்பட உள்ளன.

அன்றில் தனது அடிப்படைக் கொள்கைகளாகப் பின்வருவனவற்றை ஏற்றுக்கொண்டுள்ளது.

1. அழகியல், சமூகப் பார்வை இரண்டையும் இலக்கியத்தின் இரு கண்களாகக் கருதுதல்.

2. இலக்கியத்தை நவீனப் பார்வையோடு அணுகுதல். எந்தவொரு கோட்பாட்டின் ஆராய்ச்சிக்கூடமாகவும் இலக்கியம் மாற்றப்படுவதை நிராகரித்தல்.

3. இலக்கியத்தின் ஆதார ஸ்ருதியாக விளங்கும் மெய்ம்மையின்வழி நிற்றல்.

4. ஏகாதிபத்தியம், பாசிசம், நவீன முதலாளித்துவம் ஆகியவற்றின் தீய விளைவுகள் மனிதர்களின் மீதான வெறுப்பாக மாறிவிடாமல் எதிர்த்தல்.

5. மதவெறிக்கு எதிராகக் குரல் கொடுத்தல். ஆனால் எல்லா மதங்களின் மைய தரிசனமான ஆன்மீகத்தை நேர்மறைத்தன்மையோடு அணுகுதல்.

6. மொழி சார்ந்த அடையாளங்களை முன்னிறுத்தினாலும் இசங்களின் பாதிப்பில்லாத சர்வதேசப் பார்வையைக் கொண்டிருத்தல்.

7. தமக்கென்று ஒரு அரசியலை, கோட்பாடுகளின் வாயிலாக அல்லாமல், மெய்ம்மையின்வழி நின்று நிகழ்கால நடைமுறைகளின் அடிப்படையில் வரித்துக்கொள்ளுதல்.

8. பாலின சமத்துவத்தை இயற்கைவழி நின்று அணுகுதல்.

9. சிறந்த படைப்புகளைக் காய்த்தல் உவத்தலின்றி விமர்சித்தல். புதிய படைப்புகளை மலரச் செய்தல். படைப்புச் செயல்பாடு குழுவாதமாக மாற்றப்படுவதை நிராகரித்தல்.

10. சமூகத்தில் மட்டுமல்ல.. இலக்கியத்திலும் பன்மைத் தன்மையை அங்கீகரித்தல்.

11. படைப்பாளிகளுக்குக் களம் அமைத்துத் தருதல். இலக்கிய ரசனையை வளர்த்தல். இலக்கியம் வழியாகச் சமூகத்தோடு உரையாடுதல். இளைய தலைமுறைக்கு இலக்கியத்தை எடுத்துச் சென்று புதிய படைப்பாளிகளை உருவாக்குதல்.

அன்றிலின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்று அந்தந்த வட்டாரத்தின் தன்மைக்கேற்ப நிகழ்ச்சிகளை நடத்துகிற சுயபொருளாதாரச் சார்பு கொண்ட கிளைகளை எல்லா மாவட்டங்களிலும் உருவாக்க அன்றில் திட்டமிட்டிருக்கிறது. ■

• கவி : அனாமிகா

சமுத்திரத்தைத் தூக்கிக்கொண்டு
பறக்கிற அப்பறவையின்
அலகிலிருந்து
கடல் சிறுமீனெனத் துள்ளியது
வானில் விழுந்த துளியிலிருந்து
கடலுடைந்து பெருநதியெனப்
பெருகியது. ■



கட்டுரை

தொடர்ச்சி

• கவிஞர் விக்ரமாதித்யன்
ஓவியம் : அன்பழகன்

# சி.மோகனின் கவிதைப்பெண்கள்



அவள் ஒரு ரகஸ்யத் தோட்டத்தைப்
பராமரித்து வருகிறாளென
யூகமாய் உணர்ந்திருந்தேன்
தோட்டத்தைச் சென்றடையும் மார்க்கத்தை
அவளறியாது அவளிடமிருந்து
அறிந்துவிடும் ஆசையும்
என்னுள் வளர்ந்துகொண்டிருந்தது
நான் சற்றும் எதிர்பாராது
ஓர் அதிகாலையில்
அவளுடைய ரகஸ்யத் தோட்டத்தின்
விநோதப் பறவையொன்று
வந்தென்னை வசீகரித்தது

இதுவரை பார்த்தோ கேட்டோ
அறிந்திராத பறவையது
அதன் உடல் வனப்பும்
வண்ணப் பொலிவும்
மாய இசையும்
விந்தை நடனமும்
என்னை வசியம் செய்தன
சொக்கித் திளைத்த ஒரு தருணத்தில்
என்னைக் கொத்திச் சென்று
அவளுடைய ரகஸ்யத் தோட்டத்தில்
நட்டுவைத்தது
காதலால் பரிமளிக்கும்
அவளுடைய நிலவறைத் தோட்டத்தில்
தலை கொய்யப்பட்டுப்
பதியமிடப்பட்ட நான்
விநோதப் பறவை வந்தமரும்
மரமாக வளர்ந்துகொண்டிருக்கிறேன்
அவ்வப்போது தோட்டத்தில்
உலாவரும் அவள்
கொய்யப்பட்ட தலைகளைக் கொண்டு
பந்தாட்டம் ஆடுகிறாள்
வெகு விமரிசையாய்
அவள் வித்தைகளில்
குதூகலிக்கின்றன பந்துகள்.

(பக்கம் : 39-40)

*"ரகஸ்யத் தோட்டம்", "விநோதப் பறவை" அவளின் பின்புலம்; விவரிப்புகளாய்; இறுதிப் பத்தி, எல்லாவற்றையும் சித்தரித்துச் சொல்வதாய்; எதார்த்தத்தை அப்படியப்படியே முன்வைக்க முடியாதபோது, புனைவாக்க வேண்டியிருக்கிறது; அப்படியான பேசுபொருள்; மற்றபடி, புதிர் / பூடகம் எனக் கொள்ளவேண்டியதில்லை; புரியும்; 'அவள்', அவளின் உலகம், அதில் நிகழ்வன அனைத்தும் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன - நிரல்பட; எளிமைதான்; இன்னும் லகுவாய் இருக்க வழியில்லை; அவள் நிரம்ப வித்யாசமானவள்; அதனாலேயே கவிதையும்.*

உன் கண்களில் சலனிக்கும்
கருநீல ரத்த ஆற்றில்
கண் நனைக்கும் அந்தரங்க நண்பனை
அது மரணத்தின் சங்கமத்துக்கு
அழைத்துச் செல்வதும்
உன் இதழ்களில் ஊறும்
வெளிர்சிவப்பு மரணபானத்தில்
இதழ் பதிக்கும் ரகஸ்ய நண்பனை
அது மீளாத் துயிலில் ஆழ்த்துவதும்
காலமும் கற்பிதங்களும் விதித்த சாபம்
தப்பிப்பதற்கில்லை
உன் மாசற்ற கொலைகள் குறித்துக்
குற்றச்சாட்டு எதுவும்



நான் கொண்டிருக்கவில்லை
எனினும் விமோசனமாய்
அவர்களுக்கு நீ
ஒரு பரிசளிக்கலாம்
என் யோசனை இது
பரிசீலிக்கலாம் நீ.
நீ பெயர் சூட்டி
நேசித்து விளையாடிய பொம்மைகள்
நைந்தும் பிய்ந்தும் ஊனமுற்றும்
உன் அலமாரியை நிறைத்துக் கிடப்பதைச்
சற்றே ஒருமுறை பார்
அவற்றில் ஒன்றை நீ ஏன்
உன் அந்தரங்க நண்பர்களுக்குப்
பரிசாக அளிக்கக்கூடாது
அவர்களுக்கும் அந்தப் பொம்மைகளுக்கும்
அது நிச்சயம் புத்துயிர் அளிப்பதாய் இருக்கும்
நரகத்தில் குதூகலமாய்



விளையாடிக் களிக்கவோ
சொர்க்கத்தில் ரகஸ்யமாய்
ஒளித்து வைத்திருக்கவோ
அது உதவியாக இருக்கும்
இனியேனும்
உன் அந்தரங்க நண்பர்களுக்கு
மரணத்துக்குப் பின் விளையாட
நீ புறமொதுக்கிய
பொம்மைகளில் ஒன்றைப்
பரிசாக அளித்துவிடு
என் யோசனை இது
பரிசீலிக்கலாம் நீ.

(பக்கம் : 43-44)

*கவிதைப்பெண் நேரடியாக வரவில்லைதான்; எனில், விஷயமே அவள்தானே; அவளின் செயல் பற்றிய எதிர்வினை? பகடி? விமர்சனம்? புரிகிறாற்போல இருக்கும் கவிதை பற்றி அதிகம் பேசக்கூடாது, இல்லையா.*


*சி.மோகனின் கவிதைப் பெண்கள், வேறானவர்கள் - வேறு வேறு தன்மை கொண்டிருப்பதனால்; நவீன கவிதையில் கண்டிருக்க முடியாதவர்கள்; உள்ளபடியே, நம்முடைய வாழ்விலும் கவிதையிலும் பெண்கள் உரிய இடம் பெற்றுள்ளார்களா; ஏன் இப்படி இருக்கிறது?*

*கவிதைகள் அத்தனையும் தன்மையிலேயே; நயத்தக்க நாகரிகமாய்; இத்தகைய விஷயங்களைச் சொல்லத் தயக்கம் கொள்வதே நிலவுகிற ஒன்று; எவ்வளவோ பேசுகிறார்கள் / எழுதுகிறார்கள் எனினும் ஆண் - பெண் சம்பந்தப்பட்ட விஷயத்தைக் கவிதையில் கொண்டு வருகிறவர்கள் அபூர்வம்; அவை, கவிதையாகவும் தேறவேண்டும்; நிறைய இருக்கிறது.*

*நவீனக் கவிதையில் பெண்கள் எந்த அளவுக்குப் பாத்திரமாக உள்ளார்கள்; அவர்கள் வாழ்வு மற்றும் வகிபாகம் பற்றியெல்லாம் எண்ணம் கொண்டிருப்பதனாலேயே இந்தக் கட்டுரை வரிசையே; குறிப்பாக, ஆண் கவிஞர்கள் எழுதினவற்றையே எடுத்துரைப்பதாய் அமையும் - உள்ளது உள்ளபடி; ஆவணமொப்ப; இதைச் செய்யவே ஆள் இல்லை என்பதே எதார்த்தம்.* ■

• அண்டனூர் சுரா
ஓவியம் : அன்பழகன்

# பிரளய காலத்தவன்



'அய்யகோ, என் மகனை யாரேனும் காப்பாற்றுங்களேன்..' அத்தாயின் கதறல் எங்குமாகச் சலனமித்திருந்தது. இப்பொழுதுதான் போர் மண்டலம் தாழ்ந்து பனியின் பெய்யொலி கேட்கத் துவங்கியிருக்கிறது. அதற்குள் குறட்டை யொலியினூடே ஓலமா? காதுகளை இறுகப் பொத்திக்கொண்டு சிலர் புரண்டு படுத்தார்கள். என்னவோ, யாரோவெனச் சிலர் எழுந்து சுக்குநூறாய்த் தகர்ந்து, புகை அப்பிப்போயிருக்கும் சாளரம் வழியே எட்டிப் பார்த்தார்கள். யாழிவன் ஒருவன் மட்டும், அந்த நடுநிசியில் அலறலொலி வந்த திசையை நோக்கி நடந்தவனாக இருந்தான்.

அத்தெருவில் விழித்தவனாக, திடுக்கென விழிப்பவனாக இருப்பவன் அவன் ஒருவன்தான். தெருவே தூங்குகையில் தூக்க முணுமுணுப்பும் நினைவிலியில் உளறும் தாய், சேய்களின் துயரத் தவிப்பும் அவனைத் தூங்க விடுவதில்லை. ஒரு பிணத்தின் கேவுதல் கூட அவனுக்குக் கேட்கவே செய்யும். அன்றைய தினமும் அப்படித்தான், கதறலொலி கேட்டு முதலில் விழித்தானா, எழுந்தானா அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை, ஆனால் நடந்திருந்தான். காது செல்லும் திசையில் அவனது கால்கள் நடந்தன.

ஒரு குடிசைக்குள் விளக்கு ஒளிர்ந்தது. விளக்கு என்பது வெறும் விளக்கு அல்ல, மனிதன் வாழ்கிறான் என்பதற்கான சாட்சியம் அது. அந்த ஒளியை நோக்கி நடந்திருந்தான். அக்குடிசைக்குள் அடிபட்ட கரடியின் ஓலம் ஒடுங்கி முணங்குவதைப் போன்ற கேவுதல் கேட்டது.

'தாயே...'

கதவைத் திறந்தாள் அத்தாய். வந்தவர் யாரெனப் பாராமல் இமையைக் கசக்கி மகனின் முகத்தைப் பார்த்தவளாக இருந்தாள். மகன் ஓலைப்பாயில் ஆசிரியப்பா போலக் கால் நீட்டிப் படுத்திருந்தான். மகனின் மேல்வயிறு மூச்சுவாங்கியது. கணுக்காலிடத்தில் அவனது மறுகால் கிடந்தது. கைகளில் ஒன்று துவண்டும் மற்றொன்று குவிந்துமிருந்தது. தலைக்குத் தலையணை. மார்பு வரைக்குமாக மூடிக்கிடந்தது ஒரு கிழிந்த போர்வை. அவனது முகத்தில் ஒரு புத்தகம் கவிழ்ந்திருந்தது.

'சின்னா...'

இன்னொரு முறை அழைத்தால் அவன் விழித்துக்கொள்வான். அப்படியாகவே அவனது தூக்கமிருந்தது. எத்தனை மணிக்குப் படுத்தானோ,

படுத்தவுடன் தூங்கிவிடுகிற வயதா அவனுக்கு..? இந்நிலத்தின் காலநிலையும், வானிலையும் அப்படியாகவா விட்டு வைத்திருக்கிறது? தூங்குபவன் தூங்கட்டும், இன்னொரு முறை அவனை எழுப்பத் தயங்கி மகனின் முகத்தைப் பார்த்தவாறு நின்றாள்.

புத்தகத்தோடு தூங்கிப்போனவன் அவன், புத்தகத்தின் முகத்தில் விழிக்க வேண்டும் என்பதற்காகவே புத்தகத்தை முகத்தில் மூடியிருந்தான். அதன் பக்கங்கள் காற்றில் அளாவிக்கொண்டிருந்தன.

இரவு, அவள் பாதி தூக்கத்தில் விழித்து மகனைப் பார்த்திருந்தாள். அவன், பத்து பக்கங்களளவிற்கே வாசித்திருந்தான். இப்பொழுது புத்தகத்தின் பெரும்பகுதியை வாசித்துவிட்டது கவிழ்ந்திருந்த பக்கங்களில் தெரிந்தது. அவன், முயலைப் போலத் தலையை வைத்தபடி தூங்கினாலும் அவனது தூக்கம் பனிக்கரடியின் குளிர்காலத் தூக்கத்தை ஒத்ததாக இருந்தது. கண்களின் தூக்கமல்ல அது. மூளையின் தூக்கம். வாசிப்பிலும், வாசித்த களைப்பினாலும் வரும் தூக்கம். அவனை எழுப்பலாம், எழுந்தால் கண் விழிக்கும், நினைவு விழிக்காது.

'என்ன தாயே, கூடாக் கனவு எதுவும் கண்டாயா...?' அவ்வீட்டிற்குள் நுழைந்த யாழிவன் கேட்டான். அவனது கேள்விக்கு அவளால் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை. மகனைப் பார்த்தபடியே நின்றாள். மகனை வாரி அள்ளி அணைக்க வேண்டும் போலிருந்தது. தூங்கும் தன் பிள்ளையைக் கொஞ்ச எத்தாய்தான் விரும்புவாள்....? கடற்கரை அலையைப் போல இமைக்கரையில் நுரை. தன் கண் முன்னே இராணுவத்தின் துவக்குக்குக் கணவனை இழந்து, 'அப்பா...' எனக் கட்டியணைத்த மூத்த மகனையும் இழந்து, எஞ்சியது இவன் ஒருவன்தான், அவனையும்... அதற்கு மேல் அவளால் யோசிக்க முடியவில்லை. கையை இறுக மூடி மடிக்குள் வைத்துக்கொண்டாள்.

'என்ன கனவு கண்டாய் தாயே...?'

'அதிகாலை கனவு பலிக்குமாமே, தம்பி...'

'கனவு என்பது நினைவிலும், மனதிலும் வருவது. நினைவு நடந்ததைத் திரும்பவும் நடப்பதாகக் காட்டும். மனது யாருக்கோ நடக்க இருப்பதைத் தனக்கு நடப்பதாகக் காட்டும். இரண்டில் எதை நீ கண்டாய்..?'

'என் வீட்டிற்குள் ஒரு ஆண் சிங்கம் குட்டிபோட்டது. புதைக்குழிக்குள் அடக்கம் செய்யப்பட்ட பிணங்கள் மண் பிளந்து எட்டிப்பார்த்தன.. நூலாம்படை மொய்த்த ஓர் அரங்கமிருக்கிறது. அதற்குள் கவியரங்கம் நடக்கிறது. நரிகள் கையில் கவிதையுடன் உட்கார்ந்திருக்கின்றன. ஒரு மான் கவிதை வாசிக்கிறது. ஒரு ஓநாய் அந்த மானைக் கடித்துக் குதறுகிறது. யானைகள் கனைக்கின்றன. புலிகள் பிளிறுகின்றன. அரங்கம் கெலிப்பதும், சிரிப்பதும், துள்ளிக்குதிப்பதுமாக இருக்கிறது. மான்கள் தெறித்து நாலாபுறமும் ஓடுகின்றன. ஒரு சிங்கம் பூச்சி மருந்து அடித்துக் கவிபாடிய ஒரு மானைக் கொல்கிறது...'

யாழிவன், கனவைக் கேட்டுத் திகைத்து அத்தாயின் முகத்தைத் தழுவுவதைப்போலப் பார்த்தான். குடை விரிப்பாக அவனது புருவங்கள் ஏறி விரிந்திருந்தன. 'என்ன கனவோ, யாருக்கான கனவோ..' மகனையும் அவனையும் மாறிமாறிப் பார்த்தபடி நின்றாள்.

யாழிவன் வேட்டியைச் சுருட்டிக் கொடங்கைக்குள் வைத்துக்கொண்டு ஒரு கையைத் தாங்கிக் கால்கள் மடக்கி உட்கார்ந்தான். 'தாயே, கொஞ்ச நாட்களாகவே உன் மகனின் போக்குச் சரியில்லை. எந்நேரம் பார்த்தாலும் அவன் புத்தகமும் கையுமாக இருக்கிறான். துரோ என்கிற கவிஞனின் நூலை மட்டும் வாசித்தவனாக இருக்கிறான். கண்களை மூடிக்கொண்டு என்னென்னவோ எழுதுகிறான், எழுதியதைக் கிழித்தும், கசக்கியும் எறிகிறான். எறிந்ததைத் திரும்பவும் எடுத்து விரித்துச் சுருக்கமில்லாமல் நீவி மடித்துச் சட்டைப்பைக்குள் வைக்கிறான். கள்ளிக்காட்டிற்குள் நிற்கிறான், காட்டாமணக்குப் புதருக்குள் நடக்கிறான். ஊமத்தம்காயைப் பறித்து அதிலொரு குச்சியைச் சொருகி முகத்திற்கு நேராக நீட்டி என்னென்னவோ பேசுகிறான். அவனது பேச்சை அவனே கைக்கொட்டி ரசிக்கிறான். அவன் தன்னைக் கவிஞனாகவும், புலவனாகவும் நினைக்கிறான் போலும், தாயே..'

'ஆமாம் தம்பி, கண்டவர்கள் அப்படியாகத்தான் சொல்கிறார்கள்...' அவள் முந்தானையைக் கையால் கசக்கி மடிக்குள் வைத்தாள்.

'தாயே, இளம்பிள்ளை. ஒரே பிள்ளை, தந்தையில்லாப் பிள்ளை வேறு. போர் ஓய்ந்தும் போர் ஓயவில்லை. இனி ஆகாத காலம் மக்களுக்கில்லை. கவிஞர்களுக்கு....'

'என்னய்யா இப்படிச் சொல்கிறீர்...?'

'ஆமாம் தாயே, கவிஞர்களைக் கொன்று கவிஞன் வாழும் காலமிது. பிடிக்காத கவிஞர்களை வசைபாடிக் கழிக்கிறார்கள். சாதியைத் தேடி

வறுத்துக்கொட்டுகிறார்கள். தன்னை விடவும் ஒருவன் மெச்சும்படியான ஒரு கவிதை எழுதிவிட்டால் அவனது சுதியும் கதியும் அவ்வளவேதான். இப்பொழுதெல்லாம் யாரும் கவிதையில் எழுத்துப்பிழை பார்ப்பதில்லை. பிறப்பையும் குடும்பப் பிழைப்பையுமே பார்க்கிறார்கள். எழுத்துக்கொண்டு எழுத்தைக் கொல்கிறார்கள். பிறந்த குழந்தை அன்றே துள்ளியோட வேண்டும். இல்லையேல், குழந்தை நடக்கும் நடையைப் பாரெனப் பேதை என்றும், குழந்தை போதையால் தவழ்கிறது என்றும் கைக்கொட்டிக் கெலிக்கிறார்கள்...'

'இப்படியெல்லாமா நடக்கிறது..?'

'இளங்கவி, வளர்கவி, முதுகவி என்கிற பாகுபாடெல்லாம் இங்குக் கிடையாது. எழுதிப் பழகும் எவனும் முதல் கவிதையிலேயே வள்ளுவனை மிஞ்சிவிட வேண்டும், ஷேக்ஸ்பியரைத் தாண்டிட வேண்டும். வெல்ஸின் கற்பனை என்னே பெருங்கற்பனை, என் கற்பனையைப் பாரெனச் சொல்லில் காட்டிட வேண்டும்.. அந்தக் கற்பனையும் அவர்களுக்குப் பிடித்ததாக இருக்க வேண்டும். இல்லையேல், முகநூலில், புலனத்தில் எழுது எழுதென எழுதித் தற்கொலையை நோக்கித் தள்ளிவிடுவார்கள்...'

'இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்..?'

'நானே ஒரு கவிஞன்தான். காலாவதியான கவிஞன். தேய்பிறையை ஈழப்பெண்ணென்று வர்ணனை செய்துவிட்டேன். நிலவைக் கற்பழித்துவிட்டேனென என் குடும்பப் படத்தைத் தேடி எடுத்து, ஆபாசமாகக் கழுவி ஊற்றிவிட்டார்கள். என் பெற்றோரைக் கொன்றொழிக்கையில் பனித் தூக்கத்திலிருந்தவர்களெல்லாம், என்னை மொழியைக் கொல்கிறான், இவன் பாதகனென்று சாபம் திரித்தார்கள். என் உயிர் என் கவிதையை விடவும் மேலானது என்று கவிதை எழுதுவதிலிருந்து விலகிக் கொண்டேன். நானொன்று சொல்கிறேன், கேட்பாய்தானே தாயே...'

'சொல்லுடா யாழி. நீ என் வயிற்றில் பிறக்கவில்லையானாலும் நீயும் என் பிள்ளைதான். சொல்லும்..'

'கடந்த வாரம் வீதியில் ஒரு முதுபெருங்கவிஞன் செத்துக்கிடந்திருக்கிறான். அவனை எடுத்துப் பிரேத பரிசோதனை செய்திருக்கிறார்கள். மூளை இருந்திருக்கிறது. இதயமில்லை...'

'அய்யகோ, அப்படியென்றால் கவிஞர்கள் இதயமில்லாதவர்களா..?'

'மனசாட்சி இல்லாதவர்கள். இன்னொன்றையும் சொல்கிறேன்...'

'சொல்லுப்பா தம்பி...'

'சமீபகாலக் கவிஞர்களில் யாரெல்லாம் சிறப்பாக எழுதுகிறார்கள் எனக் கேட்டுவிட்டால் போதும், அவர்களுக்குத் தெரிந்த, உறவின, பிறக்கப் போகிற குழந்தைகளின் பெயர்களைத்தான் பட்டியலில் அடுக்குவார்கள்.'

'தம்பி!'

'தாயே, உன் மகனை அடுத்த போருக்குத் தலைமைத் தாங்கச் சொல். அவனுக்குத் தளபதியாக என்னை இணைத்துக்கொள்கிறேன். ஆனால், கவிஞனாக மட்டும் ஆக்கிவிடாதே. கவிஞர்களைக் கொல்வதற்கென்றே கருவியொன்று கண்டுபிடித்திருக்கிறார்கள். பூச்சிமருந்தின் விலை வேறு குறைந்திருக்கிறது...'.

சின்னா, விழித்ததும் முகத்திலிருந்து புத்தகத்தை எடுத்தான். விரிந்த ஏட்டிற்குள் ஒரு விரலைக் கொடுத்து மூடி முன், பின் அட்டைகளைத் தடவி முன்அட்டைப் பக்கத்தைக் கண்டுபிடித்திருந்தான். கண்களைத் திறந்து பார்த்தான். அட்டையில் கவிஞர் துரோ!

'தாயே, இன்றைய நாள் மார்ச் 15 தானே...?'

தாய் ஓடினாள். நாட்காட்டியைப் பார்த்துவந்து 'ஆமாம் சின்னா..' என்றவாறு கையைப் பிசைந்துகொண்டு நின்றாள். அந்நாளைக் கேட்டதும் அவனுக்குள் உயிரூட்டம் எடுத்தது. இந்நாளுக்காகத்தான் அவன் இத்தனை நாட்கள் காத்திருந்தான். யாரை அவன், இந்தக் கவிவுலகத்தின் ஆசானாக நினைத்துக்கொண்டிருந்தானோ, அவரைக் கவிபாடப் போகிற நாள் இது. அவனுக்கு இது முதல் மேடை, முதல் கவிதை. முதல் அமர்வு.

துரோ பற்றி அவன் எழுதிய கவிதையைக் கையில் வைத்திருந்தான். புத்தம் புதிய உருபாய்த்தாளினைக் கசங்காமல், மடங்காமல் வைத்திருப்பதைப்போல அத்தனைப் பத்திரமாக அக்கவிதையை அவன் வைத்திருந்தான். வசந்தகாலம் சூரியனின் வெக்கையையும் துடைக்கும்படியான இளந்தென்றல் - ஒரு பேரழகியின் நிரல்நிரை - தேன் தடவிய உதடுகளின் கனிரசம் - இத்தனையும் ஒன்றுகலந்த இன்பமலையை விடவும் உயர்தரமான மயக்கும் கவிஞனை நான் காட்டட்டுமா, அவர்தான் என் துரோ.

எழுதிய கவிதையை மேடையில் வாசிப்பதைப்போல வாசிக்கிறான். கவிதையைத் தேன்பருகல் போல ஜெபிக்கிறான்.

'மகனே சின்னா, எங்கேயடா கிளம்பிவிட்டாய்..?'

'கவியரங்கத்தில் கவிபாட..'

'வேண்டாம் மகனே, பொல்லாத சொப்பனமொன்று நான் கண்டேனடா...'

சின்னா சிரித்தான். 'தாயே, உன் மனதில் நிறைய வடிவங்கள் இருக்கின்றன. அதனால் கற்பனையாகக் கனவுகள் நிறையக் காணுகிறாய்..'

'விடிகாலை கனவு பலிக்குமேயடா, இந்நேரத்தில் கண்ட கண்ணகியின் கனவு பலித்தது. சீசரின் மனைவி கல்பூர்னியாவின் கனவு பலித்தது...'

'தாயே, எப்பொழுது நீ நல்ல கனவு காண்பது, நான் கவிபாடி துரோவிற்கு நிகராக ஆசனத்தில் அமர்வது. நான் சகுனங்களில் நம்பிக்கை இல்லாதவன்..'

'போர் வேறு திரும்பவும் மூள இருக்கிறதாம்..'

'போர் எங்கே தாயே முடிந்தது, திரும்பவும் மூள...'

'பார்த்தாயா, பார்த்தாயா, முன்பு போல இப்பொழுது நீ பேசுவதில்லை. எப்படியெல்லாமோ பேசுகிறாய், விடலைச் சேவலின் கூவுதல் உன் பேச்சாகியிருக்கிறது.'

'கவிபாடக் கிளம்புகின்ற எனக்குச் சீர் கொடுக்கலாம், அணிகள் நீட்டலாம். தாயே நீ முரண் அல்லவா காட்டுகிறாய்...'

'மகனே, இன்று ஒருநாள் என் பேச்சை நீ கேட்கத்தான் வேணும்...'

'என் பேச்சைக் கேட்க நூறு பேர் எனக்காகக் காத்திருக்க, உன் பேச்சைக் கேட்க, இது நேரமும் அன்று, காலமும் அன்று..'

'மகனே, எனக்கு மிஞ்சிய ஒரே பிள்ளை நீ...'

'தாயே, உன் உயரத்தை மிஞ்சிய தனயன் நான். என்னை வாழ்த்தி வழியனுப்பி வை, தாயே...'

'வாடா மகனே..'

சின்னா நடந்தான். அவன் மனம் முழுவதும் துரோ. துரோவைப் பாடப் போகிற உந்துதல் அவனை இளம்மானெனத் துள்ளச் செய்தது. அரும்பு மீசையில் இயைபு, தளை முளைத்தது. அதோ! கவிபாடும் சீரரங்கம். இலக்கணத்தால் வடிக்கப்பட்ட இலக்கியம் போல அத்தனைக் கச்சிதம். ஒற்றை அரங்கம். ஒரு வாசல். ஒரே கதவு. ஒரேயொரு மேடை. அரங்கத்திற்கு வெளியே ஒவ்வொரு பக்கமாக ஒதுங்கி மிதக்கும் பாசியைப் போலக் கவிஞர்கள். சின்னா, ஒரு கவிதையின் கடைசி வரியையும் நெருங்கி விட்டவனைப்போல வாயிலை நெருங்கினான். அரங்கத்திற்குள் நுழைகிறான். ஒரு கை தடுத்தது.

'இங்கேயே நில்'

'உன் பெயர் என்ன? நீ எங்கே போகிறாய்? ஒவ்வொரு கேள்விக்கும் நேரான பதில் சொல்..'

சின்னா திகைத்து நின்றான். 'நான் கவிஞன், இளங்கவிஞன், முதல்முறையாகக் கவிபாடப் போகும் பிஞ்சுக்கவிஞன்.'

'எங்கே போகிறாய்...?'

'கவிஞன் எங்கே போவான்...?'

'கவியரங்கத்திற்கு...'

'ஆமாம்...'

'சரி, உன் பெயரென்ன...?'

'சின்னா..'

அவனை ஒரு கை தடுக்க, ஒரு கை கண்களை மறைக்க, இழுக்க, தள்ள.. அந்த இடத்தில் ஒரே களேபரம்.

'நான் கவிஞன், புலவன், கவிபாடி, என்னை விட்டுவிடுங்கள்...' அவன் கூக்குரலெடுத்துக் கத்தினான். தன் வயதையொத்த கவிஞரிடம் கைக்குலுக்கிப் பேசிக்கொண்டிருந்த துரோ, களேபரக் குரல் கேட்டதும் திரும்பிச் சின்னாவைப் பார்த்தார். அவர் பார்த்ததும் அவனைப் பிடித்திருந்த கைகள் இறுக்கம் தளர்ந்தன. கண்களைப் பொத்திய கைகள் விலகின. சின்னா கண்களைத் தேய்த்துக்கொண்டு வெளியைப் பார்த்தான். அவனால் நம்ப முடியவில்லை. அவன் காலையில் யார் முகத்தில் விழித்தானோ, இன்று அவன் யார் குறித்துக் கவிபாட இருக்கிறானோ, அவர் அவன் முன்னே நின்றுகொண்டிருந்தார். அவனது உதடுகள் துரோ, துரோ.. என்றவாறு உச்சரித்தன.

தன் ஆதர்சக் கவிஞரைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் பேரானந்தம் கொண்டான். அவனது கண்கள் அவரை நோக்கித் தாவின.

'நான்.. நான்.. சின்னா.. கவிஞன். உம்மைப் பாடப்போகிறவன்...'

துரோ அவனைக் கூர்ந்து பார்த்தார். 'நீதான் சின்னாவா, கவிதையைப் பிழையெனப் பாடுகிறவன் நீதானா? மொழியைக் கொல்கிற இவனைப் பூச்சிமருந்தால் கொன்றொழியுங்கள்..' என்றவர் முகத்தை வேறொரு பக்கமாகத் திருப்பிக் கொண்டார்.

சின்னா அந்த ஒரு கணம் ஆடித்தான் போனான். துரோ நீயுமா? அப்படியானால் இந்தச் சின்னா சாகிறவன் அல்ல, கவிஞனாக வாழ்கிறவன். ■




# வேர்த்திரள்

காயாவின் நிழலில் இருந்தும்
ஒலிக்கும் குழலோசை
மாயோனின் பேரன்புப்
பெருவெளியெங்கும் நீளும்
ஆயனின் ஒவ்வொரு
கண்ணயர்விலும் இது நிகழும்
இன்று அவ்வாறில்லை
தோன்றிப்பூக்கள் வாசம் தொடர்வது
இதம்தான்
இடையனின் கவனம் நிரை
செலுத்துவதிலே நிற்கிறது
காடடைதல் ஆன்மாவின் தூண்டுதல்
வனப்பட்சிகளின் ஒலிகள்
வேர்த்திரளையும் குளுமையூட்டும்
பின்சாமத்தில் சிறுசொல் கூட்டிய
ஆய்ச்சியோடு சடவுசெய்தலில்
மனம் களைப்படைதல் இயல்புதான்
சாமையின் கொதிநிலையில்
தகிக்கிறது தலைவியின் துயர்
இடைச்சியின் விழிகள்
நொடிக்கொருதரம் பாதையை
நேர்குத்தி மீள்கிறது
கனவின் நீட்சிச் சட்டென விரிகிறது
கருடசஞ்சீவி நாகங்களைத் துரத்த
வனம் இயல்புநிலையிலில்லை.
முன்அந்தி எழும்பிவிட்டது
சலசலக்கும் நீரை வெறிக்கும்
தலைவனின் மனம் பறவைபோல்
சிலிர்க்கிறது
தூரத்தில் முல்லைப்பூச்சூடி ஆய்ச்சி
வருகிறாள்

– குமரேசன் கிருஷ்ணன்

## அம்மையார் ஹைநூன்பீவி நினைவு பரிசுப்போட்டிக் கவிதைத்தொடரில் மூன்றாம் பரிசு பெற்ற கவிதைகள்



பசிய வனமொன்றின் இடுகாட்டில்
விம்மி நிற்கும் இந்த நகரத்தில் இருந்தாலும்
நான் வாழ்வது,
அங்குச விசிறலில் கண்கள் சுருக்கிக் கையேந்தும்
கோவில் யானையின் கண்களில் மின்னி மறையும்
பல நூறு பறவைகள் பதறிப் பறக்கும்
பெரும் பிளிறலின் பேரதிர்வில் அதிர்ந்தடங்கும்
ஆகாயப் பறவைகள் விதைத்த
அடர் பசும்வனத்தில்தான்.
ஒருபோதும் அடைபடாத
மலையின் ஊற்றுக்கண்களில் பிரவகிக்கிறது
என் தாகம் தீர்க்கும் அமுதம்.
என் தோள்களிலமர்ந்து சிறகு கோதிப்
பாடலிசைக்கின்றன பறவைகள்.
மிகுந்த ப்ரியத்துடன் என் உடலை உரசி
நாவினால் ஈரப்படுத்தி நகர்கின்றன
வன விலங்குகள்.
சர்ப்பங்கள் நெளியும் சருகுகளடர்ந்த
வளமான மண்ணைத் துளைத்துத் துளைத்து
விரிகின்றன எனது கனத்த வேர்கள்.
உற்று நோக்குங்கள்
பசிய எனதுடலில்
ஒளிச்சேர்க்கை நிகழும் அற்புதத்தை.

– **ஜி.சிவக்குமார்**


காடுகளின் மொழியை நான் விரும்பி
ருசிப்பேன்.
பழங்கள்தான் அவைகளின் சொற்கள்
இவ்வளவு இனிமையான சொற்களை
மனிதனால் பேசவே முடியாது.
மேலும் மரங்களைப்போல ஒளியையும் நீரையும்
பிசைந்து ஒரு வாய் உணவு தர மனிதனால்
ஆகுமா?
மரங்கள் என்பவை இலைகள் கொண்ட இசை
காற்று அதை எப்படி பாடிப்பாடித் தீர்க்கிறது.
மனிதனோ அதை வேட்டையாடித் தீர்க்கிறான்.
கதவுகளாகவோ ஜன்னல்களாகவோ மரம்
இறந்தபிறகும் வெளிச்சத்தை வரவேற்கிறது.
மனிதனோ இதயத்துக்குள்ளேயே இருட்டைப்
பதுக்கி வைத்திருக்கிறான்.
காடுகள் பூமியின் குழந்தைகள்.
வேர்த்திரள்களால் தன் கழுத்தைக்
கட்டிக்கொள்ளும்
அந்தப் பச்சைக் குழந்தைகளைச் சுமந்துகொண்டு
சூரியனைச் சுற்றிவரும் பூமித்தாயின்
முகத்தில்தான் எத்தனைப் பூரிப்பு!

– **கார்த்திக் திலகன்** ■

• தஞ்சாவூர்க் கவிராயர்

# நடைச்சித்திரங்களில் நடக்கும் திருவிழா...

## மானா பாஸ்கரனின் 'புத்தரின் டூத் பேஸ்ட்டில் உப்பு இல்லை' நூல் குறித்து



புத்தரின் சொற்கள் புதிர் மிகுந்தவை. எளிமையாகத் தோன்றி நம்மை ஏமாற்றுபவை. ஞானத்தை நோக்கிய பயணத்தில் நம்மை இட்டுச் செல்லும் தோணிகள் அவை. புத்தரின் படத்துடன் 'புத்தரின் டூத் பேஸ்ட்டில் உப்பு இல்லை' என்ற தலைப்பின் புதிர்த் தன்மை கண்டு நம்மைப் புன்னகைக்க வைக்கும், இந்தப் புத்தகத்தில் ஆச்சரியமான விஷயங்கள் மண்டிக் கிடக்கின்றன. அவற்றைத் தனக்குப் பிடித்த புத்தரின் பிம்பத்தோடு பொருத்திக் காட்டுவதில் மானாவின் எழுத்து ஒரு சித்துவேலையே செய்திருக்கிறது.

தேர்ந்த சிற்பி ஒருவனின் கையில் கரடுமுரடான கற்பாறையைக் கொடுத்தால் அதிலிருந்து ஒயிலும் நளினமும் மிகுந்த அழகி ஒருத்தி வெளிப்பட்டுப் புன்னகைப்பாள். அதைப் போலவே கரடுமுரடான வாழ்க்கைக் காட்சிகளிலிருந்து இவர் பேனா செதுக்கும் எழுத்துச் சிற்பங்கள் நெஞ்சைக் கொள்ளைக் கொள்கின்றன.

மானா பாஸ்கரன் என் அன்புத்தம்பி. பத்திரிக்கைத்துறையில் நான் பெற்ற வெற்றிகளில் அவருக்கும் பங்குண்டு. என்னையும் மானாவையும் நன்கறிந்தவர்கள் அவர் குறித்த இந்த என் நயந்துரை கண்டு கண்சிமிட்டக்கூடும். என்னுள்ளிருக்கும் என்னையே என் தராசுத் தட்டுகளை ஏந்திப் பிடிக்கும் முள்ளின் தடுமாற்றம் திகைக்க வைக்கிறது. ஆயினும் என் கையில் இருப்பது விமர்சனத் தராசு அல்ல. தட்டில் இருப்பது கத்தரிக்காயும் அல்ல. அவ்வளவும் திரட்டுப்பால் கட்டிகள். அந்தத் தட்டு தாழ்வதே உசிதம். எத்தனை எடைக்கற்கள் எடுத்துவைத்தாலும் திரட்டுப்பால் ருசியை வெல்ல முடியுமா? இமயமலையை எடுத்துவைத்தாலும் முடியாதே!

சாக்பீஸ் வெளியீடு என்ற சிறிய அறிவிப்பிலேயே நீங்கள் நுழையவிருக்கும் குழந்தமைத் திருவிழாவின் கொண்டாட்ட நுழைவாயிலின் கற்கண்டு தரப்பட்டுவிடுகிறது. முன்னுரை சிறிய நாதஸ்வரக் கச்சேரி. 'நான் ஒசத்தி; நான் மட்டும்தான் ஒசத்தி' என்று குரல் கொடுக்கிற எவரையும் மனசின் குட்டிச்சுவரில் கூட உட்காரவைத்துவிடக் கூடாது என்ற மானாவுக்கே உரிய வாசனை வாக்கியம் பன்னீரால் தெளிக்கப்பட, கட்டுரைகளின் தேரோட்டம் நகர்கிறது.

ஊருக்குள் வந்த அதிசயம் என்ற கட்டுரையை எட்டாங்கிளாஸ் பாடப் புத்தகத்திலும் சேர்க்கலாம். பிஎச்.டி. மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைக்கும் கொடுக்கலாம். வார்த்தைகளின் திருவிழாவில் முட்டி மோதிக்கொள்கையில் நுரைபொங்கக் கலரை உடைத்து வாயில் ஊற்றிச் சட்டை நனைய நடக்கும் திருப்தி அல்லது சந்தோசத்தை என்னவென்று சொல்ல?

அம்மாவின் மொழி என்ற கட்டுரை புல்லாங்குழல் விற்பவன் கையில் மட்டுமே பொழியும் 'சிங்காரவேலன்' பாட்டாகி, மனம் மயக்கும். 'நான் சிவாஜி கட்சி', தமிழர்களின் கிலுகிலுப்பை, ஞாயித்துக்கிழமையும் இங்கிலாந்து லெட்டரும் போன்ற கட்டுரைகள் என் மனசில் மானாவை இன்னும் உயர்த்திப் பிடிக்கின்றன.

அம்பேத்கர், ஆனந்த விகடன் ஆசிரியர், சின்னக்குத்தூசி, நம்மாழ்வார், ஞாநி என்று விரியும் ஆளுமைகள் பற்றிய ரங்கராட்டினமும் உண்டு. இத்தொகுப்பைத் திருவிழா ஆலயப்பிரவேசமாய்க் கொண்டால் கர்ப்பக்கிருகமாய்ப் புத்தர் பற்றிய கட்டுரை அறியாமை இருட்டுக்குள் ஒளிரும் ஞான வெளிச்சம்.

நடைச்சித்திரங்கள்வழி மானா நடத்திக் காட்டியிருக்கும் இந்தச் சொற்களின் திருவிழாவுக்குத் தமிழக வாசகர் கூட்டத்தை வருக வருக என்று வரவேற்கிறேன். வாசித்துவிட்டுத் திரும்புபோது, குழந்தையாய் மென்மனசுக் கலைஞனாய், மெல்ல மனம் மாறும் ஞானியாய் ஆகியிருப்பீர்கள் என்பது சர்வ நிச்சயம்! ■

கட்டுரை




• கோ.லீலா

# மறைநீர் (VIRTUAL WATER)

**நா**ம் பயன்படுத்துகின்ற பொருட்கள் அனைத்திலும் மறைந்திருக்கும் நீர், மறைநீர் என வழங்கப்படுகிறது. ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியையும் பணத்தைக் கொண்டு மதிப்பிடுவதைப் போல நீர் வளத்தைக் கொண்டு மதிப்பிடும் பொருளாதாரம்தான் மறைநீர்!

ஒரு பொருளுக்குள் மறைந்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத நீர் - இதுவே மறைநீர். மறைநீர் என்பது ஒருவகை பொருளாதாரம். மறைநீர் என்பது ஒரு தத்துவம். காற்றைப் போன்றது அது. இதைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் ஜான் ஆண்டனி ஆலன். இந்தக் கண்டு பிடிப்புக்காக 'ஸ்டாக்ஹோம் வாட்டர் 2008' விருது பெற்றவர்.

ஒரு மெட்ரிக் டன் கோதுமை 1,600 கியூபிக் மீட்டர் தண்ணீருக்குச் சமம் என்கிறது மறைநீர் தத்துவம். எப்படி? கோதுமையை விளைவிக்க நீர் தேவை. ஆனால், கோதுமை விளைந்தவுடன் அந்த நீர் இருக்காது. எங்கே போனது அது? கோதுமைக்காகச் செலவிடப்பட்ட நீர் கோதுமைக்குள்தானே மறைந்திருக்க வேண்டும். இதுவே மறைநீர்.

ஒரு கிலோ அரிசி உற்பத்தி செய்ய 2500 முதல் 3000 லிட்டர்கள் தண்ணீர் மறைமுகமாகத் தேவைப்படுகிறது. 1.1 டன் எடைகொண்ட இலகு ரக வாகனத்தை உற்பத்தி செய்ய 4 லட்சம் லிட்டர் தண்ணீரும், ஒரு ஜீன்ஸ் பேன்ட் தயாரிக்க 10,000 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகிறது.

காலையில் ஒருவர், ஒரு கோப்பை காப்பி அருந்துகிறார் என்று வைத்துக்கொள்வோம். அக்காப்பியில் உள்ள மறைநீரின் அளவு 140 லிட்டர் ஆகும். அதாவது ஒரு காப்பிச் செடியைப் பயிரிட்டு, வளர்த்து, கொட்டையை அறுவடை செய்து, தூளாக்கி, அதைக் கப்பலில் ஏற்றுமதி செய்யும் நாட்டின் நீர் அதில் மறைந்துள்ளது. இது ஒவ்வொரு ஏற்றுமதிப் பொருளுக்கும் பொருந்தும். இப்படி கணக்கிடும்போதுதான் ஒரு கோப்பை காப்பியின் மறைநீர் அளவு 140 லிட்டர் ஆகிறது. இந்த அளவானது ஒருவர் நேரடியாகப் புழங்கும் ஒருநாள் நீரின் அளவாகும்!

பாட்டிலில் அடைக்கப்பட்ட சுத்திகரிக்கப் பட்ட ஒரு லிட்டர் குடிநீரின் சராசரி விலை ரூ.20. ஆனால், எத்தனைப் பேருக்கு மறைநீர் (Virtual water) விலை தெரியும்?

நீரின் தேவையையும் பொருளின் தேவையையும் துல்லியமாக ஆய்வுசெய்து அதற்கு ஏற்ப உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகளை வகுக்க வேண்டும். சீனா, இஸ்ரேல் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் அப்படித்தான் செய்கின்றன. சீனாவின் பிரதான உணவு பன்றி இறைச்சி. ஒரு கிலோ பன்றி இறைச்சி உற்பத்திக்கான மறைநீர் தேவை 5,988 லிட்டர். சீனாவில் பன்றி உற்பத்திக்குக் கெடுபிடி அதிகம். அதனால், தாராளமாக இறக்குமதி செய்துகொள்ளலாம். ஒரு கிலோ ஆரஞ்சுக்கான மறைநீர் தேவை 560 லிட்டர். சொட்டு நீர்ப் பாசனத்தில் கோலோச்சும் இஸ்ரேலில் ஆரஞ்சு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குக் கெடுபிடிகள் அதிகம். இவ்விரு நாடுகளும் ஒவ்வொரு பொருளுக்குமான மறைநீர் தேவையைத் துல்லியமாகக் கணக்கிட்டு அதன்படி ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகளை வகுத்துள்ளன.

இந்திய நிலவரம்..

முட்டை உற்பத்தியில் இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது மகாராஷ்டிரம். நாமக்கல்லுக்கு




இரண்டாவது இடம். நாமக்கல்லில் ஒரு நாளைக்கு மூன்று கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதில் 70 லட்சம் முட்டைகள் தினசரி வளைகுடா நாடுகள், ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதன் மூலம் ஆண்டுக்கு 4.80 கோடி டாலர்கள் அன்னிய செலவாணி கிடைக்கிறது.

மூன்று ரூபாய் முட்டைக்கு 196 லிட்டர் மறைநீர். வளைகுடா மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் தண்ணீர்ப் பற்றாக்குறை கொண்டவை. ஐரோப்பிய நாடுகள் மறைநீர் தத்துவத்தைப் பின்பற்றுபவை என்பதை இங்குக் கவனிக்க வேண்டும். சரி, சராசரியாக 60 கிராம் கொண்ட ஒரு முட்டையை உற்பத்தி செய்ய 196 லிட்டர் மறைநீர் தேவை. மூன்று ரூபாய் முட்டை 196 லிட்டர் தண்ணீரின் குறைந்தபட்ச விலைக்குச் சமம் என்பது எந்த ஊர் நியாயம்? முட்டையினுள் இருக்கும் ஒரு கிராம் புரோட்டீனுக்கு 29 லிட்டர் மறைநீர் தேவை. ஒரு கிலோ பிராய்லர் கோழிக்கறி உற்பத்திக்கான மறைநீர் தேவை 4325 லிட்டர்.

சென்னை கதைக்கு வருவோம். பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு ஆண்டுக்கு லட்சக் கணக்கான கார்களைத் தயாரித்து அவர்கள் நாடு உட்பட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. ஏன்? அவர்களின் நாடுகளில் அவற்றை உற்பத்தி செய்ய முடியாதா? இடம்தான் இல்லையா? உண்டு. இங்கு மனித சக்திக்குக் குறைந்த செலவு என்றால், நீர்வளத்துக்குச் செலவே இல்லை. 1.1 டன் எடை கொண்ட ஒரு கார் உற்பத்திக்கான மறைநீர் தேவை நான்கு லட்சம் லிட்டர்கள்.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தோல் பொருட்களில் 72% வேலூர் மாவட்டத்திலிருந்தே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவில் 2013-14ஆம் ஆண்டில் தோல் பொருட்கள் ஏற்றுமதிக்கு 850 கோடி டாலருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலிருந்து ஆண்டுக்குச் சராசரியாக 5,500 கோடி ரூபாய்க்குத் தோல் பொருட்கள் ஏற்றுமதியாகின்றன.

அன்னிய செலவாணி வருவாய் ஆண்டுக்கு சுமார் 10,000 கோடி ரூபாய். ஒரு எருமை அல்லது மாட்டின் ஆயுள்கால மறைநீர் தேவை 18,90,000 லிட்டர். 250 கிலோ கொண்ட அக்கால் நடையிலிருந்து ஆறு கிலோ தோல் கிடைக்கும். ஒரு கிலோ தோலைப் பதனிட்டு அதனைச் செருப்பாகவோ கைப்பையாகவோ தயாரிக்க 17,000 லிட்டர் மறைநீர் தேவை.

பனியன், ஜட்டி உற்பத்தியில் முதலிடம் திருப்பூருக்கு. ராக்கெட் தயாரிக்கும் வல்லரசுகளுக்கு ஜட்டி தயாரிக்கத் தெரியாதா? 250 கிராம் பருத்தி உற்பத்திக்கான மறைநீர் தேவை 2495 லிட்டர்கள். ஒரு ஜீன்ஸ் பேண்ட் தயாரிக்க 10,000 லிட்டர் மறைநீர் தேவை.

ஐரோப்பிய நாடுகள் மறைநீர் தத்துவத்தைப் பின்பற்றுபவை என்பதை இங்குக் கவனிக்க வேண்டும். ஒரு பொருளின் விலை என்பது அதன் எல்லாச் செலவுகளையும் உள்ளடக்கியதுதானே? அப்படி எனில், பெரும்நிறுவனங்கள் எல்லாம் தண்ணீருக்கு மட்டும் ஏன் அதன் விலையைச் செலவுக் கணக்கில் சேர்ப்பது இல்லை? ஏனெனில், நம்மிடம் இருந்து இலவசமாகத் தண்ணீரைச் சுரண்டி நமக்கே கொள்ளை விலையில் பொருட்களை விற்கின்றன அந்நிறுவனங்கள்!

மறைநீருக்கு மதிப்பு கொடுத்திருந்தால் உலகின் பணக்காரர்கள் பட்டியலில் என்றோ இடம்பிடித்திருப்பான் இந்தியன். இனியாவது இந்திய அரசு மறைநீர் தத்துவத்தை உணர வேண்டும்! மூன்றாம் உலகப்போர் என்று ஒன்று நடைபெற்றால் அது நீருக்காகவே நடைபெறும் எனப் புவியியலாளர்கள் கூறுகிறார்கள். இயற்கை ஆர்வலர்களும் அமைப்புகளும் அவ்வழிவைக் கட்டுப்படுத்தச் சமூகத்தில் மக்களிடம் இயற்கை குறித்த புரிதல்களை ஏற்படுத்த வேண்டும்.

நன்றி : Virtual Water: Tackling the Threat to Our Planet's Most Precious Resource Book by John Anthony Allan ■

• ஜின்னா அஸ்மி
ஓவியம் : அன்பழகன்

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் – 9



நெருப்பிலிருந்து நீருக்குள்
ஊடுருவும் வெப்பத்தைப் போலவே
உன் காதல்...

•

உன்னை நினைத்துக்கொண்டே
மறக்கும் ஞாபக மறதி நான்...

•

உன் அன்பின் அளவு என்
காதலின் அளவுகோலுக்கு
அப்பாற்பட்டது...

•

வெளிப்படையானதை
மறைப்பதிலிருந்து தொடங்குகிறது
காதல் பற்றிய அறிவு....

•

எல்லா ஸ்வரங்களாகவும் நீயே
இருக்கிறாய்... ஆனாலும் உன்னைப்
பாடலாக்க முடிவதே இல்லை...

•

யோசிப்பது உன்னை
யூகிப்பது என்னை...
இடையில்
என்ன செய்துகொண்டிருக்கிறது
இந்த விதியும் காதலும்?

•

உன் வேட்டை விசித்திரமானது...
பிடிபட்டதைப் புறந்தள்ளிவிட்டுத்
தப்பிப் போனதைத் தேடுகிறாய்...

•

நான் உன்னுள்
தொலைந்துபோகிறேன்...
காணாமல் போனது பற்றி
ஏன் உனக்குக் கவலை? ■

# “வாழ்க்கை சலிச்சிருச்சு.. ஓவியம் சலிக்கல”
## - ஓவியர் ஜீவா நந்தன்

**கனடா அனுபவம் பற்றி....**

நான் பல பத்திரிக்கைகளுக்கு வரைஞ்சிட்டு இருந்தேன். எனக்கு ஏன் வரையக் கொடுக்கறாங் கன்னா.. ஓவியத் திறமையைக் கண்டல்ல. என் வேகத்துக்காகத்தான். 10 மணிக்கு ஒரு கதை வருதுன்னா நான் 12 மணிக்குள்ள வரைஞ்சு மின்னஞ்சல்ல அனுப்பிடுவேன். அங்க அச்சு போய்ட்டு இருக்கும். இங்க நான் வரைஞ்சிட்டு இருப்பேன். ஒருமுறை கனடாவுல 'தாய் வீடு'ங்கிற ஒரு பத்திரிக்கையில இருந்து போன் பண்ணினாங்க. எங்க பத்திரிக்கைக்கு வரைவீங்களான்னு கேட்டாங்க. என்னங்க.. அதுதான என் தொழில்.. வரைவேன்னேன். சரின்னு ஒரு கதையை அனுப்புனாங்க. அவுங்க அனுப்பின உடனே ஒரு மரத்தை டப் டப்னு வரைஞ்சு அத ஸ்கேன் பண்ணி ஒரு அஞ்சு நிமிசத்துக்குள்ள அனுப்பிட்டேன். அவுங்களுக்குப் பயங்கர அதிர்ச்சி. என்னடா இவ்ளோவ் வேகமான்னு.

அப்புறம்.. இதுக்கு நாங்க எவ்ளோ பணம் கொடுக்கணும்னு கேட்டாங்க. நிறைய பேர் பணமே தர்றதில்லன்னு நினைச்சிட்டு நீங்க கொடுக்கறதக் கொடுங்கன்னு சொன்னேன். அவுங்க டக்குனு 10000 ரூபாய் அனுப்பிட்டாங்க. 10000 ங்கறது இங்க அதிகம்ங்க... திருப்பியும் அனுப்ப முடியாது. இப்ப என்ன பண்றதுன்னு கேட்டேன். அய்யயோ நீங்க வைங்கன்னு சொன்னாங்க. அப்புறம் நான் யோசிச்சுட்டுச் சொன்னேன். நான் வரைஞ்சிட்டே இருக்கேன்.. நீங்க கதை அனுப்பிட்டே இருங்க. எப்போ தோணுதோ அப்போ அடுத்த பணம் கேக்கறேன்னு சொன்னேன். ரொம்பப் பிடிச்சுப் போய் அவுங்க என்கூட பயங்கர நட்பாகிட்டாங்க. அவுங்க கதை அனுப்பிட்டே இருப்பாங்க. நான் வரைஞ்சிட்டே இருப்பேன். அவுங்க ஆறு மாசத்துக்கு ஒருமுறை 10000 ரூபாய் அனுப்பிடுவாங்க.



ஒரு ஒன்றரை வருசத்துக்கு அப்புறம் அவுங்க ஓவியர் "மருது"வ சிறப்பு விருந்தினராக் கனடா கூப்ட்ருக்காங்க. அவருதான்... அட அவனைக் கூப்புடுங்கப்பா... அவன் எங்கயும் போனதில்லன்னு சொல்லியிருக்காரு. அவங்க அப்புறம் என்னைக் கூப்பிட்டாங்க. கூப்பிட்டுக் கனடா வர்றீங்களான்னு கேட்டாங்க. (சிரித்துக்கொண்டே) ஏரோபிளேனையே நாங்க இப்டி (அண்ணாந்து) பாக்கற ஆளுங்க.. என்னால செலவு பண்ணிட்டெல்லாம் அங்க வர முடியாதுன்னு சொல்லிட்டேன். எல்லாம் நாங்க பார்த்துக்கறோம்னு சொன்னாங்க, சரின்னுட்டேன். அங்க போய் ஒரு மாசம் இருந்தேன். ஒரு மாசமும் என்னை ராஜா மாதிரி பார்த்துக்கிட்டாங்க. ஒரு மாசமும் யார் யாரைச் சந்திக்கிறதுன்னு நிகழ்ச்சி போட்டாங்க. பிரதம மந்திரியை எல்லாம் சந்திச்சேன். நாடாளுமன்றத்துக்கெல்லாம் போனேன். அங்க நடக்கற வாதங்கள் எல்லாம் பார்த்தேன். ஒவ்வொரு நாளும் ஒரு வி ஐ பி கூட விருந்து. எனக்கு இந்தக் கட்டிடங்கள் பார்க்கறதுல எல்லாம் ஆர்வம் கிடையாது. ஒரு மாசம் இங்க என்ன பண்ணப்போறேன்னு கேட்டேன். அங்க இருக்குற அரசுப் பள்ளிகள்ல பத்து நாள் முகாம் போட்டாங்க. குழந்தைகளுக்கு ஓவியம் தொடர்பான பயிற்சி முகாம் நடத்த வெச்சாங்க. அது பயங்கர வெற்றி ஆகிப் பேப்பர்ல வந்து.. தொலைக்காட்சி நேர்காணல்லாம் பண்ணாங்க. தமிழ் ஆசிரியர்களுக்கு ஒரு முகாம் போட்டோம். அங்க இருக்கற புகலிடக் குழந்தைகளுக்குத் தங்களைப் பற்றிய மூலமே தெரியாது. வந்ததும் இங்கிலிஷ் பேசிட்டு யாரோ மாதிரி நடந்துக்க ஆரம்பிச்சிடுவாங்க. அவுங்களுக்குத் தமிழ் மரபு பத்தியோ தமிழ் மொழி பத்தியோ



எதுவுமே தெரியல.

இப்போ, கிணறுன்னா என்னன்னு தெரியாது. ஒரு மாட்டு வண்டி.. ஒரு குதிரை வண்டினா..... அதைக் கூகுளைப் பார்த்துத்தான் சொல்வாங்க. அவங்களுக்கு இயல்பாத் தெரிய வேண்டியது எதுவுமே தெரியாது. அதனால தமிழ் விஷயங்களை எளிய கோடுகள் மூலமாக் குழந்தைகளுக்கு எப்படி சொல்லித் தர்றதுனு ஆசிரியர்களுக்கு நான் சொல்லிக்கொடுத்தேன். அப்புறம் முதியோர்களுக்கு ஒரு முகாம். நிறைய விஷங்களைப் பகிர்ந்துக்க முடிந்தது.

ஒரு விருந்தினரை ஒரு மாசம் யாருமே இப்படி வெச்சிருக்க மாட்டாங்க. ஆனா என்னை ராஜ மரியாதையோடு வெச்சுப் பார்த்துக்கிட்டாங்க. இன்னைக்கும் அங்க எனக்கு ஏகப்பட்ட நண்பர்கள் இருக்காங்க. இன்னைக்கு எனக்கு வர்ற பெரும்பாலான வேலைகள் அங்கிருந்துதான் வருது.

## நீங்கள் கோவையின் அடையாளமா.... சாட்சியா...?

சாட்சி (பலமாகச் சிரிக்கிறார்).

அடையாளம்ங்கிற விருது கொடுத்திருக்காங்க. ரத்தினம் கல்லூரியில், 'ஐகான் ஆப் கோவை'ன்னு விருது கொடுத்தாங்க. ஆனாலும் நாம சாட்சிதான். என்னுடைய சாட்சியங்கள் நிறைய சொல்ல முடியாத சாட்சியங்கள். பல கொடூரங்களைப் பார்த்திருக்கேன். பல கொடூரங்களுக்கு ஆளாகியிருக்கேன். கோயம்புத்தூர் ஒரு அமைதியான ஊர் இல்லையே. ஆக, நான் சாட்சி.. மௌன சாட்சி.

## சிறுவாணி வாசகர் வட்டத்தின் சார்பாக நாஞ்சில் நாடன் விருது வாங்கியது பற்றி...?

சிறுவாணி வாசகர் வட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. புத்தகங்கள் எல்லார்க்கும் போய்ச் சேரணும்னு சந்தா மாதிரி போட்டுக் குறைந்த விலையில் நல்ல கிளாசிக் புத்தகங்களெல்லாம் போடறாங்க. கோவையில் சில நல்ல மனிதர்கள் அதுல இருக்காங்க. அவுங்கதான் நடத்திட்டு இருக்காங்க. நாஞ்சில் நாடன் பேரால விருது ஒன்னு கொடுக்கலாம்ன்னு முடிவு பண்ணுனாங்க. அவுங்க முடிவுப்படி விருதைச் சாதாரண மனிதர்களுக்குத் தான் கொடுக்கணும். எதையும் எதிர்பார்க்காம பணத்தின் பின்னால போகாமத் தனக்குன்னு ஒரு கொள்கையோடு வாழ்றவங்களுக்குத் தரணும்னு முடிவு பண்ணினாங்க. அந்த வகையில முதல் விருது எனக்குக் கிடைச்சது. அடுத்தது, சரவணன்னு ஒருத்தர்..... உ வே சா பத்தி நிறைய ஆராய்ச்சி பண்ணி எழுதுனாரு. விளம்பர வெளிச்சமே இல்லாத ஒரு மாபெரும் மனிதர். அவருக்கு இந்த வருஷம் கொடுத்தாங்க. இப்படி ஆட்களைத் தேடித் தேடித்தான் கொடுக்கறாங்க. மற்றபடி லைம்லைட்ல இருக்கறவங்களுக்குக் கிடையாது.

## கேமரா மீது எப்போதும் தாகம் கொண்டவர் நீங்கள். அது பற்றி....!

எங்கப்பா எப்பவும் கேமராவை வெச்சிக்கிட்டுக் கிளிக் பண்ணிட்டே இருப்பாரு. அதனால எனக்கும் இயல்பாவே அது மேல ஒரு ஆர்வம். அதுவுமில்லாம சினிமா மேல எனக்குக் கொஞ்சம் மோகம் அதிகம்ங்கறதுனால ஒளிப்பதிவு இயக்கம் அப்படின்னு கொஞ்சம் ஆர்வம். எனக்கு இன்னைக்கு வரைக்கும் தொழில்நுட்ப விஷயங்கள் எதுவுமே தெரியாது. கேமரா எடுப்பேன். பார்ப்பேன். அடிப்பேன். அவ்ளோதான். என்னுடைய கலைக்கண்கள்தான் அதை முடிவு பண்ணுதுன்னு நினைக்கறேன். வேற, தொழில்நுட்பக் கண்கள் கிடையாது. வடிவமைப்புன்னு சொல்லுவாங்க இல்லையா... அது இயல்பாவே வந்துருது. திரைப்படக் கல்லூரிக்குப் போகணும்னு சின்ன வயசில ஆசை இருந்துச்சு. பூனாவுக்குப் போகணும். திரைப்பட இயக்கம் பற்றிப் படிக்கணும்னு ஒரு ஆசை இருந்துச்சு. அப்போ எங்கப்பா இறந்து போனதுனால அது முடியாமப் போய்டுச்சு. எங்கப்பா இறக்கும்போது என் கடைசித் தம்பிக்கு வயசு பன்னிரண்டோ பதிமூனோதான். அவன் கையில கேமராவைக் கொடுத்து அவனை நான் உருவாக்கினேன். ப்ளஸ் டூ முடிச்ச உடனே திரைப்படக் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வெச்சு அவனைப் படிக்க வெச்சேன். அவனும் படிச்சான். இன்னைக்கு இந்தியாவுல சிறந்த முதல் மூன்று ஒளிப்பதிவாளர்களில் அவனும் ஒருவன். அந்நியன், ராவணன் படத்தோட கேமராமேன் "மணிகண்டன்" என் தம்பிதான். நிறைய ஹிந்திப் படங்களுக்கு வேலை


செஞ்சிட்டு இருக்கான். என் பையன் ஆனந்தும் என்னைக் கேக்காமலே ஒரு ஒளிப்பதிவாளரா ஆகிட்டான். "நவீன சரஸ்வதி சபதம்" படத்தோட ஒளிப்பதிவாளர். தம்பி தன்னைக் கொஞ்சம் நிலைநிறுத்திட்டான். பையன் முயற்சிகளில் இருக்கான். இப்படி எங்கக் குடும்பத்துல என் கேமரா சார்பா ரெண்டு ஒளிப்பதிவாளர்கள் இருக்காங்க.

## நீங்கள் வரைந்ததில் உங்களுக்குப் பிடித்த ஓவியம் எது? ஏன்?

அதை இனிமேல்தான் செய்யணும். மக்களுக்குப் பிடிச்சது நிறைய இருக்கு. 'ராஜாதி ராஜா'ன்னு ஒரு படம். அதுல ஒரு பத்தடி உயரத்துக்குக் கூலிங் கிளாஸ் போட்ட, கொஞ்சம் மேல பார்த்த மாதிரி ரஜினி தலையை மட்டும் வரைஞ்சிருப்பேன். கோவை 'நஞ்சப்பா' சாலையில வெச்சிருந்தாங்க. கூலிங் கிளாஸ்ல மரத்தோட பிரதிபலிப்பு தெரியும். பார்க்கறவங்கள்லாம் கூலிங் கிளாஸ் பார்த்துட்டு எதிர்ல பார்ப்பாங்க. அங்க மரம் இருக்காது. வெறும் கட்டிடம்தான் இருக்கும். சாதாரணமா வரைஞ்சது.. பயங்கரமாப் புகழ் அடைஞ்சது. எனக்குக் கருப்பா இருப்பவர்களை வரையணும்னா பயங்கர ஆர்வமா வரைவேன். கருப்பா இருக்கறவங்களை வரையும் போது நான் வெள்ளையா வரைஞ்சதே இல்லை. கருப்பாத்தான் வரைவேன். அதுலதான் உண்மையான அழகு கிடைக்கும்னு நம்பறேன்.

## ஓவியர் சிவக்குமார் அவர்களோடு இருக்கும் நட்பு பற்றியும் பகிர்ந்துகொள்ளுங்களேன்..!

சிவக்குமார் சின்ன வயசில எங்கப்பா வரையற சினிமா பேனர்களைப் பார்த்திருக்காரு. ஆக, உலகத்துலயே சினிமா பேனர் வரையறதுதான் பெரிய வேலைன்னு நினைச்சுக்கிட்டு அது சென்னைலதான் வரையறாங்கன்னும் நினைச்சுக்கிட்டுச் சென்னைக்குப் போய்ட்டாரு. அவுங்க மாமா அவரைக் கூட்டிட்டுப் போய் 'மோகன் ஆர்ட்ஸ்'ல வேலைக்குச் சேர்த்துவிட்டுருக்காரு. அப்புறம் எதுக்குப்பா சினிமா பேனர்லாம்னு யாரோ சொல்லி ஓவியக் கல்லூரியில சேர்த்து விட்டுருக்காங்க. அதனால அவருக்கு சினிமா பேனர் ஓவியர்கள்னா தனி விருப்பம். அதுல இருக்கற கஷ்டம்.. எல்லாத்தையும் இன்னைக்கும் அவர் மேடைகள்ல சொல்வாரு. அப்பா இல்லாம.. அம்மாவுக்கும் ஏதும் தெரியாத நிலைமைலதான் சென்னைல ரெண்டு மூனு வருஷம் பேனர் வேலைகளில் கஷ்டப்பட்டுருக்காரு. அதனால எங்க மேல எல்லாம் ஒரு தனி அன்பு இருக்கும். அவரோட புத்தகங்கள்ல்லாம் கொடுப்பாரு. வீட்டுக்கு வந்து ஓவியங்கள் பாருனுல்லாம் சொல்வாரு. ஆனா நான் போனதில்லை. இங்க கோயம்புத்தூர்ல அவரோட ஓவியக் கண்காட்சி நடத்தினார். கோயம்புத்தூரே




அத்தனைக் கூட்டத்தைப் பார்த்திருக்காது. அவ்ளோ கூட்டம். நான் ரெண்டு தடவை போயும் உள்ள போக முடியாம நான் திரும்ப வந்துட்டேன். கொஞ்ச நேரத்துல எனக்கு போன் பண்ணுனாரு. 'ஏன் நீ வரல'ன்னு. 'சார் நான் வந்தேன். என்னால உள்ளயே வரமுடியலை'ன்னு சொன்னேன். 'என்னடா சொல்ற'ன்னாரு. 'ஆமா'ன்னேன். 'சரி புக்கு வாங்கினியா?'ன்னு கேட்டாரு. '2000 ரூபாய் குடுத்துப் புக்கு வாங்கற அளவுக்கு இந்த ஓவியன் பணக்காரன் இல்ல'ன்னேன். உடனே தன்னோட வண்டி ஓட்டுநர்கிட்ட நூலக் கொடுத்து வீட்டுக்கே கொண்டு வந்து கொடுக்கச் சொல்லியிருக்காரு. கார்த்தியோட கல்யாண நாளுக்கு அடுத்த நாள் திரைச்சீலை தேசிய விருது பாராட்டு விழாவுக்கு வந்துட்டாரு. அவருக்கு நான் தம்பி மாதிரி.

## சினி ஆர்ட்ஸ் பற்றி...!

சினி ஆர்ட்ஸ் 1954இல் இருபத்தைந்து வயது இளைஞனாகிய என் அப்பாவால் ஆரம்பிக்கப்பட்டது. தோழர் ஜீவா பிறந்த பூதப்பாண்டி ஊரில்தான் எங்கப்பாவும் பிறந்தார். சிறுவயதில் கடும் வறுமையில் வாடியவர். கூலி வேலைக்குத்தான் போயிட்டு இருந்திருக்காரு. அங்கிருந்து ஒரு கட்டத்துக்கு மேல டவுனுக்கு வந்து தறி வேலை கத்துக்கிட்டு அந்த வேலையைச் செஞ்சு அதுல வர்ற வருமானத்தை வெச்சு ஓவியப் பள்ளியில சேர்ந்து ஆறு வருஷம் வீட்டுக்குத் தெரியாமப் படிச்சிருக்காரு. இருபத்தஞ்சு வயசுலயே அவர் பெரிய ஓவியரா ஆகிட்டாரு. அவரோட திறமை எனக்கு இந்த வயசிலகூட கிடையாது. பேனர் வரைய வேலை இருக்குன்னு சொல்லவும் திருச்சியில் ஒரு வருஷம் பேனர் வரையக் கத்துக்கிட்டு அங்கிருந்து கோயம்புத்தூர்க்கு, இதே

அஞ்சு முக்குக்கு வந்திருக்காரு. வந்துட்டு யாரோ மூலமாவோ ராயல் திரையரங்க உரிமையாளர ஓவியம் வரைஞ்சிருக்காரு. அது இன்னைக்கும் ஹோட்டல் தாய் வரவேற்பறையில் இருக்கு. அது பிடிச்சுப்போய் அவங்களுக்கு எங்கப்பா மேல ஒரு அன்பு வந்து, அவுங்க ஆதரவுல ராயல் திரையரங்கத்துல "தூக்கு தூக்கி" படத்துக்கு முதல் முறையா பேனர் வரைஞ்சிருக்காரு. அப்படியே அது தொடர்ந்தது. அப்படி ஆரம்பிச்சதுதான் இந்த சினி ஆர்ட்ஸ். அதுக்கப்புறம்தான் அவர் கல்யாணம் நடந்துச்சு. அப்புறம்தான் நாங்கெல்லாம்.

## பேனர் தொழில் பற்றி..?

இது ரொம்பக் கஷ்டமான தொழில். பணம் ஒன்னுமே வராது. இத்தனை வருஷம் நாங்க இந்த வேலையைச் செஞ்சதுக்குக் கோயம்புத்தூர்ல கோடீஸ்வரர்களாக ஆகியிருக்கணும். ஆனா பணமும் வரல.. வாழ்வும் செழிக்கல. திரைப்படத் தொழில்ல எதுக்கும் உத்தரவாதம் கிடையாது. எப்ப வேணாலும் யார் வேணாலும் ஏமாத்துவாங்க. உடல் உழைப்பு அதிகம் தேவைப்படுகிற வேலை. சவால் நிறைஞ்ச வேலை. எல்லாம் தெரிஞ்சும் எங்கப்பா இந்தத் தொழிலை விடவேயில்லை. அதுல ஒரு பிரம்மாண்டம் இருந்தது அவருக்குப் பிடிச்சிருந்தது. பத்து அடி இருபது அடின்னு கடும் வேலை இருக்கும். கோயம்புத்தூருக்கு மட்டுமல்ல.. ஈரோடு, ஊட்டி, பொள்ளாச்சின்னு பக்கத்து ஊர்களுக்கும் சேர்த்து வரையணும். அதுவும் ஒரே நேரத்தில 10,15 படங்கள் வரைகூட வந்திடும். எத்தனை படம் வரைஞ்சாலும் அந்தந்த நடிகரோட ஜாடையை விட்றாம வரையணும். கருப்பு வெள்ளைல இருந்து கலர்ல வரையும்போது அதுதான் பெரும் சவால். அந்தப் பயிற்சிதான் நான் எடுத்தேன். அப்படி வரையும்போது சுதந்திரம் அதிகமா இருக்கும். ஓவியனோட முழுத் திறமையும் வெளிவர வாய்ப்பு இருக்கும். படைப்பாளியாய் உயரமா இருந்தாலும்... பொருளாதார ரீதியா நாங்க வாழ்க்கை முழுவதுமே ஏழ்மையிலேயேதான் இருந்திருக்கோம். இந்தத் தொழில் செஞ்ச நிறைய பேர் காணாமப் போய்ட்டாங்க.

## உங்கள் முதல் பேனர்..?

"மூன்று முடிச்சு" படத்துக்காக ரஜினியை வரைந்ததுதான் எனது முதல் பேனர்.

## இந்தத் தொழிலில் நீங்கள் எப்படி வந்தீர்கள்..?

"அலைகள் ஓய்வதில்லை" ரிலீஸ் அன்னைக்குத் தான் எங்கப்பா திடீர்னு இறந்துபோய்ட்டாரு. கடும் உழைப்பு... சரியான தூக்கமின்மை... மன உளைச்சல்னு... எங்கப்பா ஐம்பத்தாறு வயதிலேயே மாரடைப்புல இறந்துபோய்ட்டாரு. யாருக்கும் என்ன பண்றதுன்னே தெரியல. எல்லாருமே சினி ஆர்ட்ஸ் முடிஞ்சதுன்னுட்டாங்க. சென்னைல இருந்து வேற புதுசா ஒரு ஆர்ட்ஸ் கம்பெனி வந்தது. எங்க சினி ஆர்ட்ஸ்ல வேலை செஞ்ச நிறைய பேர் அப்படியே நழுவிட்டாங்க. நான் அப்போ உச்ச கம்யூனிஸ்ட்டா இருந்தேன். சாவுக்கான எந்தச் சடங்கும் எனக்குக் கிடையாது. எங்கப்பா இறந்த மறுநாள் நான் கடையைத் திறந்துட்டேன். அது மகேந்திரன், பாரதிராஜான்னு புதுசா சினிமாக்காரங்க வந்த காலம். சினிமா மெல்லமா மாறிட்டு வருது. அதுக்கு இணையா நம்ம ஓவியங்களும் மாறுது. நவீனம் உள்ள புக ஆரம்பிச்சுது. எங்கப்பா வரையிற முறைக்கும் என் முறைக்கும் முற்றிலும் வேறுபாடு இருக்கும். அவர் முறையா ஓவியம் படிச்சவரு. நான் அப்படிக் கற்றுக்கொள்ளவில்லை. நான் இஷ்டத்துக்குச் சுதந்திரமாப் பல முயற்சிகளைப் பண்ணினேன். படங்கள்ல கதாநாயகர்களை விட்டுட்டுச் சின்ன பாத்திரம் செய்தவர்களை எல்லாம் வரைந்தேன். அது செம புகழ் அடைஞ்சுது. 2005ல இந்தத் தொழில் முடியற வரைக்கும் புதுசு புதுசா வரைஞ்சிட்டே இருந்தேன்.

## ஓர் ஓவியராக 'வான்கா'வைப் பற்றிச் சிறு குறிப்பு வரையுங்களேன்...!

வான்கா வாழ்நாளில் மிகக் குறைந்த ஓவியங்களைத்தான் வரைந்தான். அதீத பித்து நிலையில் வாழ்ந்தவன். அவனுடைய சோகமும் தனிமையும்தான் அவனுடைய ஓவியம். அவன் வண்ணங்களை ரொம்பத் தைரியமாப் பயன் படுத்தினான். குறிப்பா, மஞ்சள் வண்ணத்தை. அவன் பேட்ச்பேட்சாத்தான் வரைவான். அப்படியே குத்திக் குத்திக் குத்தித்தான் வரையறான். அவன் வாழ்க்கையில ஒரு படம்கூட விக்கலன்னுதான் நினைக்கறேன். இறந்ததுக்கு அப்புறம்தான் அவ்ளோ புகழ். 'அகிரா' வோட 'ட்ரீம்ஸ்'ங்கிற படத்துல வான்கா பத்தின ஒரு பகுதி வரும். எல்லாருக்கும் எப்படி சே குவேரா ஒரு ஆளுமையின் அடையாளமா இருக்காரோ அது மாதிரி ஓவியர்களுக்கெல்லாம் வான்கா ஒரு ஆளுமையின் அடையாளம். வான்கா என்றாலே எழுச்சி மிகுந்த ஒரு கலைஞன். சூரியன், சூரியகாந்திப் பூக்கள்ன்னு எல்லாமே ஒரு மாதிரி மஞ்சளான பார்வை அவனுக்கு இருந்தது. அவன் சூரியகாந்திப் பூ வரைஞ்சா இதழ்கள் எழுந்து நிற்கும். அவன் காதை அறுத்துக்கிட்டது தனிக்கதை.

## ஓவியம் எப்போதாவது சலித்ததுண்டா..?

வாழ்க்கை சலிச்சிருச்சு. ஓவியம் சலிக்கல. ■

நான் வாசித்தேன்

மாணவர் பக்கம்

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# அறியப்படாத தமிழ் மொழி

• த.க.தமிழ்பாரதன்
ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி.







**துக்கடா**

***சொல் = solஆ? cholஆ?*** *எனும் தலைப்பில் மொழியியல் பார்வையிலும் தொல்காப்பியரின் பிறப்பியல் அடிப்படையிலும் எழுத்துக்களின் பிறப்பை விளக்குகிறார். சகார ஞகாரம் இடைநா அண்ணம் எனும் நூற்பாவின்வழி, இடை நா இடை அண்ணத்தை ஒற்றப் பிறக்கும் சகர ஒலி cha என்றே ஒலிக்கிறது. எனில், சகரம் பயின்றுவரும் மொழிப் பயன்பாட்டுச் சூழலடிப்படையில் ஸ, ஜ உச்சரிப்பு வருவதையும் சுட்டுகிறார்.*

***சித்திரையா? தையா?*** *எனும் தலைப்பில் வானியல் சார்ந்தும் முன்வந்த ஆய்வுகளின் வழியிலும் தமிழ்ப்புத்தாண்டாகத் தை என்பதை நிறுவுகிறார். ஹேவிளம்பி போன்ற 60 ஆண்டுகள் இந்து ஆண்டுகளின் பெயர்கள். ஒரு தனிப்பட்ட சமயத்தின் ஆண்டைத் தமிழ் ஆண்டு என வரையறுத்தல் தவறு. சித்திரையை இந்து சமயப் புத்தாண்டாகக் கொண்டாடுவது சரி. ஆனால், அதுவே தமிழுக்கும் என்பது பொருத்தமற்றது. 1935 மே 18,19இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடிய தமிழறிஞர்கள் வள்ளுவரின் காலம் குறித்து ஆய்ந்தனர். கிறித்துவுக்கு முன் 31 ஆண்டு என வள்ளுவர் காலத்தை வரையறுத்தனர். இதனோடு தை 2ஆம் தேதியைத் திருவள்ளுவர் தினமாக மறைமலையடிகளின் மாணவரான சோமசுந்தரபாரதியார் வகுத்தளித்தார். திருவள்ளுவர் ஆண்டைத் தமிழ் ஆண்டாகக் கடைபிடிக்கலாம் என்ற கருத்தை முன்வைக்கிறார் நூலாளர். மேலும், மேஷ ராசியில் சூரியன் வருவதே புத்தாண்டாகச் சித்திரையில் கொண்டாடப்படுகிறது. ஆனால், மேஷ ராசி என்பது உலகம் முழுதும் முதல் கிடையாது. நிலப்பரப்புக்கு நிலப்பரப்பு முதல் ராசி மாறுபடுகிறது. எனில், கிரேக்க, மெசபடோமிய, ருசிய, செர்பிய, வைதீகப் பண்பாடுகளில் ஜன.14தான் வைதீகப் புத்தாண்டாகக் கொண்டாடப்படுவதாகத் தெரிவிக்கும் நூலாளர் இதற்கான சான்றுகளைத் தரவில்லை. இலக்கியத் தரவுகளை விரிவாகப் பேசியபின், இலக்கியங்களிலிருந்து இதுதான் புத்தாண்டு என்பதற்கான நேரடி வரைவுகள் ஏதுமில்லை என்கிறார். தை தமிழோடு தொடர்புடையதாக இருப்பதால் தையைத் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடுவதே உரியது என அறுதியிடுகிறார்.*

***திராவிடமா? தமிழா?*** *எனும் விவாதத்திற்குப் பாவாணரின் திராவிடத்தாய் நூலிலிருந்து விளக்கம் தந்துரைக்கிறார். மூலமொழி ஒலிப்பு/பெயர் endonym எனவும்,*

உலகம் வழங்கும் ஒலிப்பு/பெயர் exonym எனவும் வழங்கப்பெறுகிறது. எனில், திராவிடம் தமிழைக் குறித்த உலகமொழிச் சொல் என இருந்தது, பின்னாளில் ஒட்டுமொத்த மொழிக் குடும்பத்திற்கும் ஆகிவந்தது என்கிறார்.

| அவர்கள் அழைப்பது | நாம் அழைப்பது |
|---|---|
| Zhongguo (china) | சீனம் |
| Lonian/graikoi (greek) | யவனம் |
| Kedah (Malaysia) | கடாரம் |
| Java (Indonesia) | சாவகம் |
| Parsa (Persian) | பார்சி |
| Dravida | தமிழ் |

மேலும், திராவிட மொழிகளுக்கிடையிலான ஊடாட்டத்தையும் இவ்வியலில் விளக்கிச் செல்கிறார். திராவிடம் சமஸ்கிருதச் சொல்லல்ல என்பதைப் பாவேந்தரின் பாவரிகளால் வெளிக்கொணர்ந்து நிறைவு செய்கிறார்.

## தொல்காப்பியத்தில் சாதி உண்டா?

ஜாதி சமஸ்கிருதச்சொல். Caste எனும் பொருளுடையது. ஆனால், தமிழில் உள்ள சாதி அஃறிணைச் சிறப்பைக் குறித்துவரும் சொல். சான்று - சாதிக்காய், சாதிமல்லி, சாதிப்பொன். தொல்காப்பியம் தொழில் அடிப்படையிலான குடிப்பெயர்களைத் தந்தது. சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான் என்று சொன்ன தமிழ், ஜாதி அடிப்படையில் உயர்வு தாழ்வைக் கற்பிக்கவில்லை என்கிறார். தொல்காப்பிய மரபியலுக்கு உரையெழுதியோர் அறவோர், ஐயர் (தலைவர்), உயர்ந்தோர் என்பதற்குப் பிராமணர் என்று எழுதிவைத்தனர். நால்வர் என்றால் நால்வர்ணம், ஐவர் என்றால் பஞ்சபாண்டவர், வேல் என்றால் சுப்ரமணியன், குழல் என்றால் கிருஷ்ணன் என்ற தட்டையான மனநிலையே இதற்குக் காரணம் என்கிறார். வேலொடு நின்றான் (552) எனும் குறள் கொடுங்கோல் மன்னனைப் பேசுகிறது. வேல் என்பதாலே வேலன், முருகன் எனப் பொருள் கொள்ளுதல் அறிவீனம். இயலின் இறுதியில் தொல்காப்பிய மரபியலில் ஆண், பெண், இளமை, விலங்குப் பெயர்கள் குறித்துப் பேசும் 170 வரிகள் மூலவரிகள் எனவும், அந்தணர், வைசிகர், வேளாளர் குறித்துப் பேசும் 7185 வரிகள் இடைச்செருகல் எனவும், விலங்கு மரபுப் பெயர்கள், செடிகொடி மரபுப் பெயர்கள் சுட்டும் 8690 வரிகள் மூல வரிகள் எனவும் குறிப்பிடுகிறார். தொடர்பற்ற இடைச்செருகலுக்கும் சேர்த்தே உரையெழுதிய உரையாசிரியர்களை யாரும் எதிர்த்துக்கூட கேள்வி எழுப்பவில்லை என்பது விவாதத்திற்குரியது.

## சிலப்பதிகார – கம்ப இராமாயணச்சண்டை

கம்பன் இராமாயணத்தைத் தமிழ்ப்படுத்தும் போது, அதில் ஏற்றிய வைதீகத்தன்மையைச் சாடுகிறார். காலப்போக்கிலமைந்த செய்யுள் மரபில் சிலப்பதிகாரம் மற்றும் கம்ப இராமாயணம் இவற்றிடையேயான ஒற்றுமை வேற்றுமைப் பாகுபாடுகளை எடுத்துச் சொல்கிறார். இதிலிருந்து, சிலப்பதிகாரம் எவ்வகையில் மேம்பட்டதென்பதை நிறுவும் நூலாளரின் முனைவர் பட்ட ஆய்வு ‘இளங்கோ வென்ற தமிழ்; கம்பன் கொன்ற தமிழ்’ என்பதே. ‘ஒரு பெண்ணின் ஆற்றாமையால் ஊர் எரியாது; அது பகுத்தறிவும் அல்ல! இளங்கோவின் நாடக உத்தி, இயற்கையான எரிகல் நிகழ்வின் மீது, அறம் பிழைக்கப்பட்ட பெண்ணின் ஆற்றாமையை ஏற்றிவிடுதல்!’ என்கிறார். தமிழின் சமூகவியல் வரலாறு பேசும் சிலப்பதிகாரத்தினும் புராணக் கற்பனையைச் செய்யுளழகால் பேசும் கம்ப இராமாயணத்திற்கு அதிகப் பரவல் கிடைக்கக் காரணம் சமயப் பிடித்தமுள்ள தமிழ்ப் பண்டிதாளின் கட்டமைப்பே என்கிறார்.

## இலக்கண அரசியல்

இலக்கு+ அணம் = இலக்கணம் = இலங்குவது, இலக்கை அடைய வழிவகுப்பது இலக்கணம்.

இலக்கு + இயம் = இலக்கியம் = இலக்கை இயம்புவது இலக்கியம்.

“இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே!
எள் இன்றாகில் எண்ணெயும் இன்றே!”

“வழக்கின் ஆகிய உயர்சொல் கிளவி
“இலக்கண” மருங்கில் சொல்லாறு அல்ல!”
(தொல். கிளவி. 510)

எனும் நூற்பாவழி, தமிழில் முதலில் தோன்றியது இலக்கியமே, பின்னரே இலக்கணம்

என்பதை நிறுவுகிறார். ஊர்/இட, கருத்தா, ஓசை/ எழுத்து/சொல் ஆகிய நெகிழ்வுகளைக் கொண்டு பொருளில் மட்டும் நெகிழ்வற்று விளங்குகிறது. இதனுழி, அடிப்படை இலக்கணத்தை வரையறுத்துச் செயல்முறை இலக்கணத்திற்கு நெகிழ்வு காட்டுகிறது தமிழ்மொழி. க்கள்/கள் வருமிடங்கள், ஔவை/அவ்வை ஆகிய சொல்நிலையிலான மாற்றங்களோடு ஒற்றின் தலைமையையும் விளக்கிச் சுட்டுகிறார் நூலாளர். ஒற்று நிறுத்தற்குறிகள் இல்லாத காலத்தில் பொருள்கொள்ள உதவியவை எனும் கருத்தும் நோக்கத்தக்கது.

### நாட்டுப்புறத்தமிழ்

தமிழகத்தின் தொல்வரலாறு பொருநை, வையை, காவிரி, பெரியாறு, பெண்ணை, பாலாறு ஆற்றங்கரைகளில், அதன் மக்களிடத்தில் உள்ளதேயன்றிக் கோயில்களில் இல்லை. தமிழகத்தைச் சூழ்ந்த கடல்களில் மக்களுக்கும் முன்பே கடலோடிய ஆமைகளில், வேளிர் குறிஞ்சி மலைகளில், முல்லைக் காடுகளில்தான் உள்ளது. ரோம் நகரை ஏழு மலைகளின் நகரம் என்பர். சமணமலை, யானை மலை, அழகர் மலை, பரங்குன்றம், நாகமலை, கழுகுமலை, பசுமலை, சிறுமலை ஆகிய எட்டு மலைகளின் நகரமே மதுரை என்கிறார் நூலாளர். நம் சிந்தனை மதம் சார்ந்து மாறியது போல், வரலாறு அரசன் சார்ந்து மாறியது. கலைநயமிக்க தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியது, குஞ்சரமல்லப் பெருந்தச்சரும் சிற்பி குணவன் தலைமையிலானவர்களுமே. கட்டுவித்ததே இராசராசச் சோழன். எட்டுத்தொகை நூல்களில் காதல், வீரம், உணவு, ஆடை, கூத்து, இசை போன்ற மக்கள் சார் செய்திகளே மிகுதி. பத்துப்பாட்டு நூல்களில் அரசன்சார் செய்திகள் அதிகமாயின. சிலம்பின் காலத்தோடு தொலைந்த நாட்டுப்புறத் தமிழ் சிற்றிலக்கியக் காலத்தில் பள்ளு, குறவஞ்சி, அம்மானை, கண்ணி என மீண்டெழுந்தது. தொல்காப்பியப் பண்ணத்தியே நாட்டுப்புறப் பாடல்கள் என்பதைச் சான்றுகள்வழி வருவிக்கிறார்.

### சொல், செப்பு, பறை! பூ, அலர், மலர்!

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே. எனினும், எல்லாச் சொல்லும் ஒரு பொருள் குறித்தனவல்ல, தனித்தனி நுண்ணிய பொருண்மையைச் சுட்டுவன என்பதை விளக்குவதே இவ்வியல். 'அரும்பும்போது மலர், அரும்பிப் பனியில் நனைகையில் நனை, நனைந்து முத்தாகும்போது முகை, வெடிக்க ஆயத்தமாகும் போது மொக்குள், மணம் வீசுகையில் முகிழ், மலர்ந்தபின் மலர், நன்றாக மலர்ந்து மகரந்தம் தயாராகையில் அலர், கூட்டமாய் மலர்ந்தால் பொதும்பர், வீழும்போது வீ, உதிர்ந்து கிடக்கும் பூக்கள் பொம்மல், பழுப்பாய் வாடியபின் செம்மலர்' என்பதன்வழி பூவின் பல்வேறு நிலைகளைச் சுட்டும் பெயர்களை விளக்குகிறார். இதே போல், பே(ச்)சு என்பதற்கான பிற சொற்களை ஆங்கில விளக்கத்துடன் வரிசைப் படுத்துகிறார்.

| | |
|---|---|
| பேசு | = speak |
| பகர் | = speak with data |
| செப்பு | = speak with answer |
| கூறு | = speak categorically |
| உரை | = speak meaningfully |
| நவில் | = speak rhymingly |
| இயம்பு | = speak musically |
| பறை | = speak to reveal |
| சாற்று | = speak to declare |
| நுவல் | = speak with an introduction |
| ஓது | = speak to recite |
| கழறு | = speak with censure |
| கரை | = speak with calling |
| விளம்பு | = speak with message |

இன்னும் சில சொற்களின் பொருண்மைகளையும் நிலைகளையும்கூட இவ்வியலில் விளக்குகிறார் நூலாளர். இது பொருண்மை நிலையில் சொல்லின் நுணுக்கத்தை அறிய உதவுவதாக அமைகிறது.

### தமிழகத்தின் ஊர் பேர் விகுதிகள்

இதில் தமிழகத்தின் திணைப்பகுப்பின் அடிப்படையிலான ஊர்ப்பெயர்களை அதற்கான

காரணங்களைச் சுட்டிப் பட்டியலிடுகிறார். ஒரே ஆறு, இரண்டாய்ப் பிரிந்து, மீண்டும் ஒன்றாய்க் கூடும், இடைப்பட்ட திட்டுக்கு அரங்கம் என்று பெயர். ஆழ்வார்கள் பதின்மரும் பாடிய ஒரே தலமான திருவரங்கத்தின் அ என்பதை வெட்டி ரங்கம் என்பதோடு ஸ்ரீ சேர்த்து ஸ்ரீரங்கம் எனப் பொருளற்றுப் பெயர் மாற்றியுள்ளனர். திருமறைக்காடு = வேதாரண்யம் என மாற்றினர். ஆனால், திருமரைக்காடு என்பதே பண்டைய பெயர். மரை என்ற மான் வகை இருந்த காடு என்பதே பொருள். மறை எனத் தமிழில் மாற்றி, அதற்கொப்ப வேதாரண்யம் என சமஸ்கிருதவயப் படுத்தியுள்ளனர்.

முல்லை = காடு, பட்டி, பாடி, காவு, தோப்பு, பொழில், மந்தை

குறிஞ்சி = மலை, கோடு, குன்றம், குறிச்சி, பாறை, கல்

மருதம் = ஆறு, துறை, அரங்கம், கூடல், பழனி, கழனி, வயல், ஓடை, விளை, மடை, ஏரி, ஏந்தல், தாங்கல், குளம், கேணி, கிணறு, ஊருணி

நெய்தல் = கரை, துறை, பட்டினம், பாக்கம், குப்பம்

பொதுவான ஊர் விகுதிகள் = ஊர், நாடு, புரம், குடி, சேரி, இல், அகம், வாயில், முற்றம், பள்ளம், மேடு, பாளையம், கோட்டை, பேட்டை

## மதிப்புரை

சமஸ்கிருதம் என்கிற மொழி மதத்தின் பெயரில் நுழைந்து அரசரின் ஆதரவைப் பெற்று மக்களை அடிமைப்படுத்தி, தனித்தமிழ்ச் சமூகத்தை வைதீகத்தின்பால் அடிமைப் படுத்தியதை நூலின் பெரும்பாலான இடங்களில் காட்டப்பெற்றிருக்கும் தரவுகளின்வழி அறியமுடிகிறது. ஒரு மொழி தமிழ் மொழியின் எல்லாத் தளங்களிலும் தன் கலப்பைத் தந்திருப்பதும் அதைத் தமிழ்மொழி ஏற்றிருப் பதற்குத் தமிழ்நிலத்தில் நிலவிய சமூக அமைப்பின் பின்னணியைச் சுட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்களின் ஈற்றில் emoji எனப்படும் உருப்பொறிகளில் மகிழ்ச்சி, கோபம் எனும் இரு தன்மைய உருப்பொறிகளைப் பயன் படுத்தியுள்ளார். அது, தொடரில் பேசியுள்ள செய்திக்கான நூலாளரின் மன உணர்வை வெளிக்கொணர்வதாக அமைகிறது. தொடக்கக் காலச் சித்திர எழுத்துக்களின் மாற்று வடிவமாகக் கருதப்பெறும் உருப்பொறிகள் மனித உணர்வுகளின் வெளிப்பாடாக இருக்கின்றன. நிறுத்தற்குறிகள் இன்று உரைநடை, கவிதை என எழுத்திலக்கியங்களில் நிலைபேறடைந்ததைப் போன்று, பிற்காலத்தில் இந்த உருப்பொறிகளும் நிலைப்பதற்கான கூறுகள் உண்டு. இணையத்தில் எழுதுவோர் உருப்பொறிகளைக் கையாளும் போக்கு அச்சு ஊடகத்தில் வந்திருப்பது இங்கு நோக்கத்தக்கது.

அறியப்படாத, மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட, மறைக்கப்பட்டுக்கொண்டிருக்கிற தமிழின் மெய்த்தன்மையை அறிவிப்பதே நூல் எழுந்ததன் நோக்கம். ஆதலின், அதைச் சிறப்புறச் செய்திருக்கிறது. பல பொருண்மையிலான இயல்களின் தொகுப்பாகவே இந்நூல் உள்ளது. ஏற்கெனவே தமிழறிஞர்கள் ஆங்காங்கு, விவாதித்து விடைகண்ட, காணவேண்டியவற்றின் தொகுப்பாக இதைக் கருத முடியும். அறிஞர் நிலையில் பெரும் விவாதத்திற்குட்பட்டதாக இருக்கும் செய்திகளை மக்கள் மொழியில் மக்கள் விளங்கும் தன்மையில் தொகுத்தளித்திருக்கிறார் நூலாளர்.

ஒவ்வொரு இயலின் நிறைவிலும் கருவிநூல் பட்டியல் தரப்பட்டிருப்பதோடு, படலக் குறுந்தொகை எனும் பெயரில் இயலில் பேசப்பட்டுள்ள யாவற்றின் சுருக்கத் தொகுப்பும் தரப்பட்டிருக்கிறது. இயல்களுக்குள்ளேயே தேவையான இடங்களில் படம் சுட்டியிருப்பது பேசியுள்ள செய்திகளுக்கு மேலும் வலுசேர்க்கிறது. பின்னுரையாகத் தமிழ் வளர்க்கும் மீம்கள் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ் காலத்திற்கேற்றாற் போல், தன்னைத் தகவமைத்து யாவற்றினோடும் தன் பயணத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கிறது. ஆங்காங்கு, அறிஞர்களின் கருத்தை எடுத்துரைக்கும் அதேநேரம், உரிய இடங்களில் உரையாசிரியர் களை வினவுவதும், எதிர்க்கேள்விக் கேட்கா தோரைச் சாடுவதும் நூலின் தன்மைக்கான சான்றாகும். ■

• கவி : அனார்
சித்திரம் : அன்பழகன்


# பெண் பலி

அது போர்க்களம்
வசதியான பரிசோதனைக் கூடம்
வற்றாத களஞ்சியம்
நிரந்தரச் சிறைச்சாலை
அது பலிபீடம்
அது பெண் உடல்
உள்ளக் குமுறல்
உயிர்த் துடிப்பு
இருபாலாருக்கும் ஒரே விதமானது
எனினும்
பெண்ணுடையது என்பதனாலேயே
எந்த மரியாதையும் இருப்பதில்லை
அதற்கு
என் முன்தான் நிகழ்கின்றது
என் மீதான கொலை. ■



• சன்மது

# முழு உருமாற்றம்




"ஒரு ஆற்றலை ஆக்கவோ அழிக்கவோ முடியாது, ஆனால் ஒரு வகை ஆற்றலை மற்றொரு வகை ஆற்றலாக மாற்ற முடியும்." - வெப்பஇயக்கவியலின் முதல் விதி. இந்த விதியே அனைவரது விதி ஆகும். விதையின் சட்டை உரிக்கப்படும்போது, முளைக்கும் கால் மண்ணில் வேராய் ஊன்றி - ஒரு தாவரமாய்த் தலைநிமிர்கிறது. விதைக்குள் நிரப்பப்படும் மரபியலை எந்தத் தாவரமும் மீறுவதில்லை. மீறுவதையும் மீறுவதற்கான காரணத்தையும் அறிவியல் துணைகொண்டு ஒரு பெரிய திரியாய்த் திரித்திருக்கிறது இந்த மானிடச் சமூகம்.

வால் பொருந்திய நகர்திறன் பெற்ற ஒன்று புணர்ச்சி விதிகளுக்கப்பால் ஒரு வித்தை நோக்கித் தன் தடத்தைத் தேர்ந்தெடுத்து நகர்கிறதே அப்போதே ஆற்றல் இன்னொரு நிலைக்கு மாறுகிறது.

இந்த ஆற்றலைத் துவக்கியவர் யார்? அது இன்னொரு ஆற்றலின் நீட்சி.. இப்போது ஆற்றலுக்கான விளக்கம் எதற்கு? இதற்கான பதிலே இந்தக் கட்டுரையின் துவக்கம்.

"நீ நினைப்பதை அடைவாய், மனம்தான் அனைத்தும்" கௌதம புத்தர்.

புத்தரை மேற்கொளக் காட்டித் துவங்குவது மேல் சொன்ன விதியின் மிச்சம்.

"சித்தார்த்தர்'' புத்தனாக மாறிய அந்த ஏழாவது வாரம்வரை போதிமரம் நிழலை மட்டும்தானே கொடுத்திருக்க முடியும்.. உடை கலைந்த பின்பும் தன் மௌனம் கலையாப் புத்தர் யாருடைய ஆதிக்கத்தில் இருந்திருப்பார்?

மனமா? மூளையா?

"மனம் தன்னை உணர மூளையைப் பயன்படுத்தும், மூளை தன்னை மாற்றிக்கொள்ள

மனதைப் பயன்படுத்திக்கொள்ளும்" டேனியல் சீகல் என்ற மாபெரும் மனோதத்துவ மருத்துவரின் ஆழமான கருத்து. "உழைத்து உண்" என்பது நியதி, உழைத்தலின் சொற்றொடராய் வருவது களைப்பு. 'களைப்பு' ஒரு நிரந்தர அறிகுறியல்ல, இந்தக் களைப்பைக் களைந்து விட்டு எப்படியும் ஒருவன் திரும்பவும் தன் பணியில் பணிந்துவிடுகிறான். பணியைத் தொடர்கிறான், அதில் ஆழ்ந்து பயணிக்கிறான், அவன் எங்க போகிறான்.. திரும்பவும் இவனைச் சந்திப்போம்.

உழைப்பது நம்மில் பெரும்பாலானோருக்கு விரக்தியைத் திணிக்கிறது. அப்படி என்றால் 'இன்பம்' என்ற ஒன்று நமக்குத் தேவைப்படுகிறது. இந்த 'இன்பம்' பல்வேறு வாக்கியத்தில், பல்வேறு குறிப்புகளை அடக்கித் தன்னை வெளிக் கொள்கிறது.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"

மயக்கத்திலிருந்து விலகிக் குற்றமற்ற மெய்யை உணரும் நிலையை அடைந்தவர்க்கு, அந்நிலை துன்ப இருளை விலக்கும்; இன்ப நிலையைக் கொடுக்கும் என்பது வள்ளுவனின் நிலையான இன்பத்தைப் பற்றிய விளக்கம்.

இந்த இன்பம் சித்தார்த்தனை அல்ல புத்தனைச் சாரும். அப்படி என்றால் சித்தார்த்தனின் இன்பம்.. "டோபமைன்".

'டோபமைன்' என்ற இந்த வேதியியலின் மாற்றம் ஒரு மனிதச் சமூகத்தையே ஒரு புள்ளியில் சுருக்கிப்போகிறது. காலத்தின் நீளத்தை மடித்துக்கொள்கிறது. மூளையின் அடிப்பகுதியில், நியூக்ளியஸ் அகும்பேன்ஸ் மற்றும் வென்றல் டேகுமென்டல் என்ற இன்பம் ஊற்றெடுக்கு மிடம்தான் இந்த வேதியியல் சுரக்குமிடம். சுரக்காவிட்டால் என்ன? 'நடக்குவாதம்'தான் பதில்.

மூளையைப் புரிந்துகொண்டால் மனதைப் பின்பு தெரிந்துகொள்ளலாம். உடல் எடையின் இரண்டு சதவிகிதத்தை மட்டுமே கொண்டுள்ள மூளை நமது உடல் உள்ளுறுப்புகளையும், வெளிஉறுப்புகளையும் அடிபணியச் செய்யும் ஒரு சர்வாதிகார ரௌத்திரன். இங்கு இவனது ஒரே போதை இந்த 'டோபமைன்'.

இப்போது, ஒருவன் உழைக்கிறான்.. பின்பு எதுவாகிப் போகிறான் என்ற முந்தைய கேள்விக்கு இப்போது விடை காண்போம்.

உழைக்கிறான், உண்ணுகிறான், உறங்குகிறான், களிப்படைகிறான். வாழ்வியலின் தெவிட்டாத அமிழ்தத்தைச் சுவைக்காமல் மரணிக்கிறான், வாழ்க்கை நிறைவுபெறுகிறது.

அப்போது மகாத்மா காந்தி, ஆல்பர்ட் ஐன்ஸ்டின், ஆபிரகாம் லிங்கன், ஜார்ஜ் வாஷிங்டன், நெப்போலியன், கவுதம புத்தர், சார்லஸ் டார்வின், வில்லியம் ஷேக்ஸ்பியர், காரல் மார்க்ஸ், ஹெலன் கெல்லர்.. இப்படி நீளும் வரிசையில் இருப்பவர்கள் யார்?

எப்படிச் சரித்திரப் பக்கங்களில் இன்றும் வாழ்கிறார்கள்? எப்படி இவர்கள் மட்டும் வாழ்வாதாரத்தின் பிடியில் சிக்காமல் தனித்து நின்றார்கள்?

அனைவருக்கும் ஆற்றல் ஒரே வகையான தரத்தோடும், ஒரே வகையான வெப்பத்தோடும் ஒரு உயிர் ஜனித்த வினாடியே உடலுக்குள் ஊடுருவுகிறது. அதுதான் உடல் வெப்பம். உயிர் வேதியியல் இதனைத் 'தொகு வெப்பம்' (enthalpy) என்று குறிப்பிடுகிறது. இந்த வெப்பம் இல்லாதபோது உயிர் இருப்பது இல்லை.

நம்மில் எத்தனை பேர் என்பதைவிட, நாம் அனைவரும் எந்த ஒரு குறிப்பில்லாமலும் ஒரு குறிக்கோளை நோக்கித்தான் நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

"நம் வாழ்வின் இலக்கு மரணம்" - சிக்மண்ட் பிராய்ட்.

மரணம் நம் உடலுக்குத்தான், ஆற்றலுக்குக் கிடையாது. ஆற்றல் தன்னுடைய மரபு முத்திரையை அணிந்துகொண்டு உள்ளிருப்புப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறது. நம் இலக்கு பெரும்பாலும் நம் மரபணுக்களுக்குள்ளே தைக்கப்பட்டவை. பெற்றோரிடம் அல்லது முப்பாட்டனிடமிருந்துகூட வந்து இருக்கலாம்.

ஆற்றல் இன்னொரு நிலைக்கு நம்மை நகற்றித் தன்னை முழுமையாக்கிக்கொள்ள முயல்கிறது. இங்கு முழுமையாகிக்கொள்கிற ஆற்றல் ஒருவனை வெற்றி அடையச் செய்கிறது.

அப்படியென்றால் குழந்தைகள் எந்த வட்டத்தில் சேர்வார்கள் என்ற உங்கள் கேள்வி என் செவிவழிச் சேர்கிறது. ஒருவரது மூளை, அவரது இருபதாவது வயதில்தான் நிறைவான வளர்ச்சி பெறுகிறது என்கிறது விஞ்ஞானம். குழந்தையின் வளர்ச்சியின்போது உள்ளே எரிந்துகொண்டிருக்கும் ஆற்றல், சரியான கட்டமைப்பு இல்லாத மனதின் துணை யில்லாமலும், முழு வளர்ச்சியடையாத மூளையின் துணையில்லாமலும் தன்னை முன்னிறுத்திக் கொள்வதில் தோல்வியடைகிறது.

அப்போது 'நான்' ஏன் இன்னும் அந்த இலக்கை அடையவில்லை என்றால்? காரணம்.. திரும்பவும் மூளைக்கு வருவோம்.

மூளைக்குச் சிங்காரவனம் (pleasure ground) மட்டுமே பிடித்தவை. ஆற்றலின் வெப்பம் அதற்கு ஒரு பாலைவனக் காடு.

நம்மை எப்போதும் சிற்றின்பத்தோடு வைத்துக்கொள்ளும் 'டோபமைனை'ப் புணர்ந்துகொண்டே ஆற்றலுக்கு வெளியில் ஒரு மூடுதிரையைப் போர்த்திக்கொள்கிறது மூளை. இந்த மூடுதிரை மனிதனுக்கு மனிதன் மாறும் ரகமாக இருக்கிறது.

இதை அறிந்துகொண்டவன்தான் வேள்வித்தீயை வளர்த்துக்கொள்ளத் தன்னைப் பெரும்படையாகத் திரட்டுவான். அவனைச் சுற்றிக்கொள்ளும் மூடுதிரையின் தோல்களை மிருதுவாக்குவான். தெரியாதவன், தன் வசம் உள்ள ஆற்றலின் வெப்பத்தைத் தன் மூடுதிரையினால் அடக்கிக்கொள்கிறான். ஆற்றலை உள்ளடக்கி அதற்குச் சரியான தளம் இல்லாமல் இருக்குமானால் ஆற்றல் இன்னொரு நிலைக்கு மாற்றிக்கொள்ள வழி தேடுகிறது. உதாரணத்திற்குப் பனிக்குழையை நாம் ருசிக்காமல் இருந்தால் அது ஒரு திரவ நிலையை அடைகிறது. அதே போலத்தான் இன்னொரு நிலையான மரணத்தை ஆற்றல் அடைகிறது. இதை அறிவியல்ரீதியாகப் பார்ப்போம்.

கலவி, சூது, போதைப் பொருள் போன்றவை மிகைப்படும்போது டோபமைனின் ஆதிக்கம் மூளையில் அதிகமாகிறது. மூளை இன்பத்தளத்தை இன்னும் அதிகமாக்க, மேலே சொன்னவற்றிற்கு நம்மை அடிமையாக்குகிறது. இதன் விளைவு மூளை தன் அன்றாட பணியிலிருந்து தடம் புரண்டு மாற்றுச் செயலைச் செய்கிறது. இதனால் நமது உடலில் உள்ள திசுக்களில் சிதைவு ஏற்படுகிறது. திசுவினால் உண்டான உறுப்பு தன் இயக்கவிதிக்கு அப்பால் செயல்படத் துவங்குகிறது.

அதனால் பாதிக்கப்படும் முதல் உறுப்பு நுரையீரல். நுரையீரலின் செயல் உயிர்வளி யேற்றம். இப்போது ஆக்சிஜன் குறைவாக உடலுக்குச் சேர்கிறது. ஆக்சிஜன் இல்லாமல் ஒரு ஆற்றல் முழுவதுமாக வெளிப்படுவதில்லை. இதன் விளைவுதான் மரணம்.

புத்தனை எடுத்துக்கொள்வோம். அவனது ஆற்றல் அவன் சித்தார்த்தனாக இருக்கும்போது மூடுதிரையினால் மூடப்பட்டிருந்தது. டோபமைனின் ஆதிக்கமும், தன் மனதின் அடிபணிவும் இருந்திருந்தது. ஞானம் பெற்றான். அவன் ஆற்றல் ஒளிரியது.

இப்படி ஒவ்வொரு வெற்றியாளனையும் அளவிட முடியும். நாம் அனைவரும் ஊரும் பிராணி வகை. நாம் இங்கே ஊர்ந்து கொண்டேதான் இருக்க வேண்டும். நின்று விட்டால் உயிரற்ற பொருளாகிவிடுவோம். சேரும் இடம் முன்பே பதியப்பட்டவை. இங்கு சேரும் இடம் என்னவென்று ஆராய ஒவ்வொருவருக்கும் காலம் வேறுபடுகிறது. வேறுபடும் காலாவகாசங் களில் நாம் வெவ்வேறுவகையில் வெற்றி கொள்கிறோம். நாம் ஊர்ந்துகொண்டிருப்பதால் தான் இந்த உணவு, உடை, உறைவிடம் தேவைப்படுகிறது. அதுவும் இலக்கை எட்டும் வரை, வெப்பம் வெளிப்படும்வரை, வெற்றி கிட்டும்வரை.

இதை முடிக்கும்போது என் நிலை என்ன வென்று நெருங்கிவிட்டேன். நீங்களும் ஆராயுங்கள்.. ■

• புதுமைப்பித்தன்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்

5

"உங்கள் ஆயுள்தான். என் ஆயுளும் அல்ல, பத்திரிக்கை ஆயுளும் அல்ல; அது அழியாத வஸ்து. நான் போனாலும் வேறு ஒருவர் சித்த வைத்திய தீபிகையை நடத்திக்கொண்டுதான் இருப்பார்; அதற்கும் ஏற்பாடு பண்ணியாச்சு" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

இந்தச் சமயம் பார்த்து ரிக்ஷாக்காரன் வண்டி வேகத்தை நிதானமாக்கிவிட்டுப் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான்.

வேகம் குறைந்தால் எங்கே வண்டியில் இருக்கிற ஆசாமி குதித்து ஓடிப்போவாரோ என்று கந்தசாமிப் பிள்ளைக்குப் பயம்.

"என்னடா திரும்பிப் பார்க்கிறே? மோட்டார் வருது, மோதிக்காதே; வேகமாகப் போ" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்ன சாமி, நீங்க என்ன மனுசப்பெறவியா அல்லது பிசாசுங்களா? வண்டியிலே ஆளே இல்லாத மாதிரி காத்தாட்டம் இருக்கு" என்றான் ரிக்ஷாக்காரன்.

"வாடகையும் காத்தாட்டமே தோணும்படி குடுக்கிறோம்; நீ வண்டிய இஸ்துக்கினு போ" என்று அதட்டினார் கந்தசாமிப் பிள்ளை.

"தவிரவும் நான் வைத்தியத் தொழிலும் நடத்திவருகிறேன்; சித்த முறைதான் அநுஷ்டானம். வைத்தியத்திலே வருவது பத்திரிக்கைக்கும், குடும்பத்துக்கும் கொஞ்சம் குறையப் போதும். இந்த இதழிலே ரசக்கட்டைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கேன்; பாருங்கோ, நமக்கு ஒரு பழைய சுவடி கிடைத்தது; அதிலே பல அபூர்வப் பிரயோகம் எல்லாம் சொல்லியிருக்கு" என்று ஆரம்பித்தார் கந்தசாமிப் பிள்ளை.

'ஏதேது, மகன் ஓய்கிற வழியாய்க் காணமே' என்று நினைத்தார் கடவுள். "தினம் சராசரி எத்தனைப் பேரை வேட்டு வைப்பீர்?" என்று கேட்டார்.

"பெருமையாகச் சொல்லிக்கொள்ளும்படி அவ்வளவு ஒன்றுமில்லை. மேலும் உங்களுக்கு, நான் வைத்தியத்தை ஜீவனோபாயமாக வைத்திருக்கிறேன் என்பது ஞாபகம் இருக்க வேண்டும். வியாதியும் கூடுமானவரையில் அகன்றுவிடக்கூடாது. ஆசாமியும் தீர்ந்துவிடக்கூடாது. அப்பொழுதுதான், சிகிச்சைக்கு வந்தவனிடம் வியாதியை ஒரு வியாபாரமாக வைத்து நடத்த முடியும். ஆள் அல்லது வியாதி என்று முரட்டுத்தனமாகச் சிகிச்சை பண்ணினால், தொழில் நடக்காது. வியாதியும் வேகம் குறைந்து படிப்படியாகக் குணமாக வேண்டும். மருந்தும் வியாதிக்கோ மனுஷனுக்கோ கெடுதல் தந்துவிடக் கூடாது. இதுதான் வியாபார முறை. இல்லாவிட்டால் இந்தப் பதினேழு வருஷங்களாகப் பத்திரிக்கை நடத்திக்கொண்டிருக்க முடியுமா?" என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் விஷயம் புரிந்தவர் போலத் தலையை ஆட்டினார்.

"இப்படி உங்கள் கையைக் காட்டுங்கள், நாடி எப்படி அடிக்கிறது என்று பார்ப்போம்" என்று கடவுளின் வலது கையைப் பிடித்தார் கந்தசாமிப் பிள்ளை.



"ஓடுகிற வண்டியில் இருந்துகொண்டா?" என்று சிரித்தார் கடவுள்.

"அது வைத்தியனுடைய திறமையைப் பொறுத்தது" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

நாடியைச் சில விநாடிகள் கவனமாகப் பார்த்தார். "பித்தும் ஏறி அடிக்கிறது; விஷப் பிரயோகமும் பழக்கம் உண்டோ?" என்று கொஞ்சம் விநயத்துடன் கேட்டார் பிள்ளை.

## 6

"நீ கெட்டிக்காரன்தான்; வேறும் எத்தனையோ உண்டு" என்று சிரித்தார் கடவுள்.

"ஆமாம், நாம் என்னத்தையெல்லாமோ பேசிக்கொண்டிருக்கிறோம்; அதிருக்கட்டும், திருவல்லிக்கேணியில் எங்கே?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"ஏழாம் நம்பர் வீடு, ஆபீஸ் வேங்கடாசல முதலி சந்து" என்றார் கடவுள்.

"அடெடே! அது நம்ம விலாசமாச்சே; அங்கே யாரைப் பார்க்க வேண்டும்?"

"கந்தசாமிப் பிள்ளையை!"

"சரியாய்ப் போச்சு, போங்க; நான்தான் அது. தெய்வந்தான் நம்மை அப்படிச் சேர்த்துவைத்திருக்கிறது. தாங்கள் யாரோ? இனம் தெரியவில்லையே?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"நானா? கடவுள்!" என்றார் சாவகாசமாக, மெதுவாக. அவர் வானத்தைப் பார்த்துக்கொண்டு தாடியை நெருடினார்.

கந்தசாமிப் பிள்ளை திடுக்கிட்டார். கடவுளாவது, வருவதாவது!

"பூலோகத்தைப் பார்க்க வந்தேன்; நான் இன்னும் சில நாட்களுக்கு உம்முடைய அதிதி."

கந்தசாமிப் பிள்ளை பதற்றத்துடன் பேசினார். "எத்தனை நாள் வேண்டுமானாலும் இரும்; அதற்கு ஆட்சேபம் இல்லை. நீர் மட்டும் உம்மைக் கடவுள் என்று தயவுசெய்து வெளியில் சொல்லிக்கொள்ள வேண்டாம்; உம்மைப் பைத்தியக்காரன் என்று நினைத்தாலும் பரவாயில்லை. என்னை என் வீட்டுக்காரி அப்படி நினைத்துவிடக்கூடாது" என்றார்.

"அந்த விளக்குப் பக்கத்தில் நிறுத்துடா" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

வண்டி நின்றது. இருவரும் இறங்கினார்கள்.

கடவுள் அந்த ரிக்ஷாக்காரனுக்குப் பளபளப்பான ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

"நல்லா இருக்கணும் சாமீ" என்று உள்ளம் குளிரச் சொன்னான் ரிக்ஷாக்காரன்.

கடவுளை ஆசீர்வாதம் பண்ணுவதாவது!

"என்னடா, பெரியவரைப் பாத்து நீ ஆசீர்வாதம் பண்ணுவது?" என்று அதட்டினார் கந்தசாமிப் பிள்ளை.

"அப்படிச் சொல்லடா அப்பா; இத்தனை நாளா, காது குளிர மனசு குளிர இந்த மாதிரி ஒரு வார்த்தை கேட்டதில்லை. அவன் சொன்னால் என்ன?" என்றார் கடவுள்.

"அவன்கிட்ட இரண்டணாக் கொறச்சுக் குடுத்துப் பார்த்தால் அப்போ தெரியும்!" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"எசமான், நான் நாயத்துக்குக் கட்டுப்பட்டவன், அநியாயத்துக்குக் கட்டுப்பட்டவனில்லெ, சாமி! நான் எப்பவும் அன்னா அந்த லெக்கிலேதான் குந்திக்கிட்டு இருப்பேன்; வந்தாக் கண் பாக்கணும்" என்று ஏர்க்காலை உயர்த்தினான் ரிக்ஷாக்காரன்.

"மகா நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன்தான்! தெரியும் போடா; கள்ளுத் தண்ணிக்குக் கட்டுப்பட்டவன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"வாடகை வண்டியெ இஸ்துகிட்டு நாள் முச்சூடும் வெயிலிலே ஓடினாத் தெரியும். உன்னை என்ன சொல்ல? கடவுளுக்குக் கண்ணில்லெ; உன்னியே சொல்ல வச்சான், என்னியே கேக்க வச்சான்" என்று சொல்லிக்கொண்டே வண்டியை இழுத்துச் சென்றான்.

## 7

கடவுள் வாய்விட்டு உரக்கச் சிரித்தார். விழுந்து விழுந்து சிரித்தார். மனசிலே மகிழ்ச்சி, குளிர்ச்சி.

"இதுதான் பூலோகம்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இவ்வளவுதானா!" என்றார் கடவுள்.

இருவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

வீட்டுக்கு எதிரில் உள்ள லாந்தல் கம்பத்தின் பக்கத்தில் வந்ததும் கடவுள் நின்றார்.

கந்தசாமிப் பிள்ளையும் காத்து நின்றார்.

"பக்தா!" என்றார் கடவுள்.

எதிரில் கிழவனார் நிற்கவில்லை.

புலித் தோலாடையும், சடா முடியும், மானும், மழுவும், பிறையுமாகக் கடவுள் காட்சியளித்தார். கண்ணிலே மகிழ்ச்சி வெறி துள்ளியது. உதட்டிலே புன்சிரிப்பு.

"பக்தா!" என்றார் மறுபடியும்.

கந்தசாமிப் பிள்ளைக்கு விஷயம் புரிந்துவிட்டது.

"ஓய் கடவுளே, இந்தா பிடி வரத்தை என்கிற வித்தை எல்லாம் எங்கிட்டச் செல்லாது. நீர் வரத்தைக் கொடுத்துவிட்டு உம்பாட்டுக்குப் போவீர்; இன்னொரு தெய்வம் வரும், தலையைக் கொடு என்று கேட்கும். உம்மிடம் வரத்தை வாங்கிக்கொண்டு பிறகு தலைக்கு ஆபத்தைத் தேடிக்கொள்ளும் ஏமாந்த சோணகிரி நான் அல்ல. ஏதோ பூலோகத்தைப் பார்க்க வந்தீர்; நம்முடைய அதிதியாக இருக்க ஆசைப்பட்டீர்; அதற்கு ஆட்சேபம் எதுவும் இல்லை. என்னுடன் பழக வேண்டுமானால் மனுஷனைப் போல, என்னைப் போல நடந்துகொள்ள வேண்டும்; மனுஷ அத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்; நான் முந்திச் சொன்னதை மறக்காமல் வீட்டுக்கு ஒழுங்காக வாரும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் மௌனமாகப் பின் தொடர்ந்தார். கந்தசாமிப் பிள்ளையின் வாதம் சரி என்று பட்டது. இதுவரையில் பூலோகத்தில் வரம் வாங்கி உருப்பட்ட மனுஷன் யார் என்ற கேள்விக்குப் பதிலே கிடையாது என்றுதான் அவருக்குப் பட்டது.

கந்தசாமிப் பிள்ளை வாசலருகில் சற்று நின்றார். "சாமி, உங்களுக்குப் பரமசிவம் என்று பேர் கொடுக்கவா? அம்மையப்பப் பிள்ளை என்று கூப்பிடவா?" என்றார்.

"பரமசிவந்தான் சரி; பழைய பரமசிவம்."

"அப்போ, உங்களை அப்பா என்று உறவுமுறை வைத்துக் கூப்பிடுவேன்; உடன்பட வேணும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"அப்பா என்று வேண்டாமப்பா; பெரியப்பா என்று கூப்பிடும். அப்போதுதான் என் சொத்துக்கு ஆபத்தில்லை" என்று சிரித்தார் கடவுள். பூலோக வளமுறைப்படி நடப்பது என்று தீர்மானித்தபடி சற்று ஜாக்கிரதையாக இருந்துகொள்ள வேண்டும் என்று பட்டது கடவுளுக்கு.

"அப்படி உங்கள் சொத்து என்னவோ?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இந்தப் பிரபஞ்சம் முழுவதுந்தான்" என்றார் கடவுள்.

"பயப்பட வேண்டாம்; அவ்வளவு பேராசை நமக்கு இல்லை" என்று கூறிக்கொண்டே நடைப்படியில் காலை வைத்தார் கந்தசாமிப் பிள்ளை.

**8**

**வீ**ட்டு முன் கூடத்தில் ஒரு தகர விளக்கு அவ்விடத்தைக் கோவிலின் கர்ப்பக் கிருகமாக்கியது. அதற்கு அந்தப் புறத்தில் நீண்டு இருண்டு கிடக்கும் பட்டகசாலை. அதற்கப்புறம் என்னவோ? ஒரு குழந்தை, அதற்கு நாலு வயசு இருக்கும். மனசிலே இன்பம் பாய்ச்சும் அழகு. கண்ணிலே எப்பொழுது பார்த்தாலும் காரணமற்ற சந்தோஷம். பழைய காலத்து ஆசாரப்படி உச்சியில் குறுக்காக வகிடு எடுத்து முன்னும் பின்னுமாகப் பின்னிய எலிவால் சடை வாலை வளைத்துக்கொண்டு நின்றது. முன்புறம் சடையைக் கட்டிய வாழைநார், கடமையில் வழுவித் தொங்கி, குழந்தை குனியும்போதெல்லாம் அதன் கண்ணில் விழுந்து தொந்தரவு கொடுத்தது. குழந்தையின் கையில் ஒரு கரித்துண்டும், ஓர் ஓட்டுத் துண்டும் இருந்தன. இடையில் முழங்காலைக் கட்டிக்கொண்டிருக்கும் கிழிசல் சிற்றாடை. குனிந்து தரையில் கோடு போட முயன்று, வாழைநார் கண்ணில் விழுந்ததனால் நிமிர்ந்து நின்றுகொண்டு, இரண்டு கைகளாலும் வாழை நாரைப் பிடித்துப் பலங்கொண்ட மட்டும் இழுத்தது. அதன் முயற்சி பலிக்கவில்லை. வலித்தது. அழுவோமா அல்லது இன்னும் ஒரு தடவை இழுத்துப் பார்ப்போமா என்று அது தர்க்கித்துக்கொண்டிருக்கும்போது அப்பா உள்ளே நுழைந்தார்.

"அப்பா!" என்ற கூச்சலுடன் கந்தசாமிப் பிள்ளையின் காலைக் கட்டிக்கொண்டது. அண்ணாந்து பார்த்து, "எனக்கு என்னா கொண்டாந்தே?" என்று கேட்டது.

"என்னைத்தான் கொண்டாந்தேன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னப்பா, தினந்தினம் உன்னியேத்தானே கொண்டாரே; பொரி கடலையாவது கொண்டாரப்படாது?" என்று சிணுங்கியது குழந்தை.

"பொரி கடலை உடம்புக்காகாது; இதோ பார். உனக்கு ஒரு தாத்தாவைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இதுதான் உம்முடைய குழந்தையோ?" என்று கேட்டார் கடவுள். குழந்தையின் பேரில் விழுந்த கண்களை மாற்ற முடியவில்லை அவருக்கு.

கந்தசாமிப் பிள்ளை சற்றுத் தயங்கினார்.



"சும்மா சொல்லும்; இப்பொவெல்லாம் நான் சுத்த சைவன்; மண்பானைச் சமையல்தான் பிடிக்கும். பால், தயிர்கூடச் சேர்த்துக்கொள்ளுவதில்லை" என்று சிரித்தார் கடவுள்.

"ஆசைக்கு என்று காலம் தப்பிப் பிறந்த கருவேப்பிலைக் கொழுந்து" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இப்படி உட்காருங்கள்; இப்பொ குழாயிலே தண்ணீர் வராது; குடத்திலே எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று உள்ளே இருட்டில் மறைந்தார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் துண்டை உதறிப் போட்டுவிட்டுக் கூடத்தில் உட்கார்ந்தார்.

மனசிலே ஒரு துறுதுறுப்பும் எல்லையற்ற நிம்மதியும் இருந்தன.

"வாடியம்மா கருவேப்பிலைக் கொழுந்தே!" என்று கைகளை நீட்டினார் கடவுள்.

ஒரே குதியில் அவருடைய மடியில் வந்து ஏறிக்கொண்டது குழந்தை.

"எம்பேரு கருகப்பிலைக் கொளுந்தில்லெ; வள்ளி. அப்பா மாத்திரம் என்னெக் கறுப்பி கறுப்பின்னு கூப்பிடுதா; நான் என்ன அப்பிடியா?" என்று கேட்டது.

அது பதிலை எதிர்பார்க்கவில்லை. அதன் கண்களுக்குத் தாத்தாவின் கண்டத்தில் இருந்த கறுப்பு மறு தென்பட்டது.

## 9

"அதென்ன தாத்தா, கன்னங்கறேலுன்னு நவ்வாப் பழம் மாதிரி களுத்திலே இருக்கு? அதைக் கடிச்சுத் திங்கணும் போலே இருக்கு" என்று கண்களைச் சிமிட்டிப் பேசிக்கொண்டு மடியில் எழுந்து நின்று, கழுத்தில் பூப்போன்ற உதடுகளை வைத்து அழுத்தியது. இளம் பல் கழுத்தில் கிளுகிளுத்தது. கடவுள் உடலே குளுகுளுத்தது.

"கூச்சமா இருக்கு" என்று உடம்பை நெளித்தார் கடவுள்.

"ஏன் தாத்தா, களுத்திலே நெருப்பு கிருப்புப் பட்டுப் பொத்துப்போச்சா? எனக்கும் இந்தா பாரு" என்று தன் விரல் நுனியில் கன்றிக் கறுத்துப்போன கொப்புளத்தைக் காட்டியது.

"பாப்பா, அது நாகப்பளந்தாண்டி யம்மா; முந்தி ஒருதரம் எல்லாரும் கொடுத்தாளேன்னு வாங்கி வாயிலே போட்டுக்கொண்டேன். எனக்குப் பங்கில்லியான்னு களுத்தெப் புடிச்சுப்புட்டாங்க. அதிலெ இருந்து அது அங்கியே சிக்கிக்கிச்சு; அது கெடக்கட்டும். உனக்கு விளையாடத் தோழிப் பிள்ளைகள் இல்லியா?" என்று கேட்டார் கடவுள்.

"வட்டும் கரித்துண்டும் இருக்கே; நீ வட்டாட வருதியா?" என்று கூப்பிட்டது.

குழந்தையும் கடவுளும் வட்டு விளையாட ஆரம்பித்தார்கள்.

ஒற்றைக் காலை மடக்கிக்கொண்டே நொண்டியடித்து ஒரு தாவுத் தாவினார் கடவுள்.

"தாத்தா, தோத்துப் போனியே" என்று கை கொட்டிச் சிரித்தது குழந்தை.

"ஏன்?" என்று கேட்டார் கடவுள்.

கால் கரிக்கோட்டில் பட்டுவிட்டதாம்.

"முந்தியே சொல்லப்படாதா?" என்றார் கடவுள்.

"ஆட்டம் தெரியாமே ஆட வரலாமா?" என்று கையை மடக்கிக்கொண்டு கேட்டது குழந்தை.

அந்தச் சமயத்தில் ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளை முன்னே வர, ஸ்ரீமதி பின்னே குடமும் இடுப்புமாக இருட்டிலிருந்து வெளிப்பட்டார்கள்.

"இவுங்கதான் கைலாசவரத்துப் பெரியப்பா, கரிசங்கொளத்துப் பொண்ணை இவுங்களுக்கு ஒன்னுவிட்ட அண்ணாச்சி மகனுக்குத்தான் கொடுத்திருக்கு. தெரியாதா?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னமோ தேசாந்திரியாகப் போயிட்டதாகச் சொல்லுவார்களே, அந்த மாமாவா? வாருங்க மாமா, சேவிக்கிறேன்" என்று குடத்தை இறக்கி வைத்துவிட்டு விழுந்து நமஸ்கரித்தாள். காது நிறைந்த பழங்காலப் பாம்படம் கன்னத்தில் இடிபட்டது.

"பத்தும் பெருக்கமுமாகச் சுகமாக வாழவேணும்" என்று ஆசீர்வதித்தார் கடவுள்.

காந்திமதி அம்மையாருக்கு (அதுதான் கந்தசாமிப் பிள்ளை மனைவியின் பெயர்) என்றும் அநுபவித்திராத உள்ள நிறைவு ஏற்பட்டது. மனமும் குளிர்ந்தது. கண்ணும் நனைந்தது.

"வாசலில் இருக்கற அரிசி மூட்டையை அப்படியே போட்டு வச்சிருந்தா?" என்று ஞாபகமூட்டினார் கடவுள்.

"இவுகளுக்கு மறதிதான் சொல்லி முடியாது. அரிசி வாங்கியாச்சான்னு இப்பந்தான் கேட்டேன். இல்லைன்னு சொன்னாக. ஊருக்கெல்லாம் மருந்து கொடுக்காக; இவுக மறதிக்குத்தான் மருந்தைக் காங்கலெ. படெச்ச கடவுள்தான் பக்கத்திலே நின்னு பார்க்கணும்" என்றாள் காந்திமதி அம்மாள்.

– தொடரும் ■

சென்றேன் வென்றேன்

மாணவர் பக்கம்

• பூ.இரவிக்குமார்
கல்வியியல் இரண்டாமாண்டு,
மகாத்மா கல்வியியல் கல்லூரி, துறையூர்.

# தமிழ் கொடுத்த கொடை




நான் இரவிக்குமார். எனது பெற்றோர் இருவரும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். அங்கு நடந்த யுத்தக் கலவரங்களால் இங்கு வந்தனர். எனது தாத்தா இலங்கையில் தமிழ் ஆசானாகவும் சிலம்பு ஆசிரியராகவும் இருந்தார். ஒருவேளை இந்தப் பூர்வாங்கத் தமிழ் உணர்வுதான் இன்று என்னுள்ளும் நிறைந்திருக்கிறதோ என்று எண்ணுகிறேன்.

வறுமையின் விளிம்பில் அன்றாடக் கூலி வேலை செய்யும் குடும்பத்தில் பிறந்த நான் பள்ளிப்படிப்பு முதல் முதுகலைக் கல்லூரிப் படிப்பு வரை அரசு நிறுவனங்களிலேயே படித்தேன். முதன்முதலாக எனக்குள் இருந்த தமிழ் ஆர்வத்தை எனக்கு அடையாளம் காட்டியவர் எனக்கு மேல்நிலைத் தமிழ் வகுப்பெடுத்த திரு.பாண்டியன் ஆசிரியர் அவர்கள். அவரது தூய தமிழ்ப்பற்று, பிறமொழி கலவாத தனித்தமிழ்ப் பேச்சு என்னுள் தமிழ் ஆர்வத்தை ஏற்படுத்தியது. முதன்முதலாக மேல்நிலைப்பள்ளியில் ஆண்டுவிழாவில் அவர் என்னைப் பேச வைத்தார். அரங்கம் அதிர கனத்த குரலில் அன்று நான் பேசிய பேச்சு பிறரை மட்டுமல்ல என்னையும் வியப்பில் ஆழ்த்தியது. என்னால் பேச முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. அந்த ஆண்டுவிழாவில்தான் எனக்குத் தமிழ்தாசன் என்கின்ற பட்டத்தை கொடுத்தனர். அதன் பிறகு கல்லூரியில் இளநிலைத் தமிழ் படிக்க ஆர்வம் கொண்டேன். தமிழ் படித்தால் வேலை கிடைக்காது என்று என் குடும்பத்தாரும் என் உறவினர்களும் கூறி எனது தமிழ்ப் படிப்பிற்குத் தடைபோட நினைத்தனர். ஆனால் எனது நிலைப்பாட்டை நான் மாற்றிக்கொள்ளாமல் பெரம்பலூர் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் இளங்கலைத் தமிழ் சேர்ந்தேன். என்னை, மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டிக்கு முதன்முதலில் அனுப்பி வைத்தனர். 2000 நபர்கள் அமர்ந்திருந்த அந்த அரங்கில் பேச எனக்குள் சற்றே தயக்கம் ஏற்பட்டு இருந்தபோது என்னைத் தட்டிக் கொடுத்துத் தைரியம் சொல்லி மேடையேற்றி அழகு பார்த்தவர் எனது தோழர் ஆனந்தச்செல்வன். அரங்கத்திலிருந்த அனைவரது பாராட்டையும் முதல் பரிசையும் பெற்றபொழுது சமூகம் என் பேச்சை அங்கீகரிப்பதையும் எதிர்பார்ப்பதையும் உணர்ந்தேன்.

என்னைத் தெளிவுபடுத்திக்கொள்ள நிறைய விடயங்களை அறிந்துகொள்ள புத்தகப்புழுவாக மாறினேன். பல சான்றோர்களின் பேச்சைக் கேட்டேன். பல அறிஞர்களோடு உறவு பழகினேன். சமூகப் புரிதல் உணர்வும் இலக்கிய நாட்டமும் எனக்குள் துளிர்விட்டது. பிறகு நிறைய மேடைகள் களம் கண்டேன். மாவட்ட மாநில அளவிலான பரிசுகள் பல பெற்றேன். குறிப்பாகத் தமிழ் வளர்ச்சித்துறை ஆண்டுதோறும் நடத்தும் போட்டிகளில் தொடர்ந்து ஆறு ஆண்டுகளாய்ப் பரிசு பெற்று வருவதோடு இளந்தமிழர் பயிற்சிப்பட்டறையில் பயிற்சி பெற்றும் வருகிறேன்.

இதுவரை 500க்கும் மேற்பட்ட மேடைகளில் களம் கண்டுள்ளேன். பட்டிமன்றப் பேச்சாளர், நடுவர், இலக்கியச் சொற்பொழிவாளர், தன்னம்பிக்கைப் பேச்சாளர் எனப் பேச்சின் பல நிலைகளில் என்னை நிலைநிறுத்திக் கொண்டேன்.

மேடைகளில் மட்டும் தமிழ் வாழ்க என்று முழங்கிவிட்டு வெளியே வந்து கலப்பு மொழியில் பேசிக் கபடநாடகம் புரியாமல் என் பேச்சு, எழுத்து அனைத்தும் தூய தமிழ் என அமைத்துக்கொண்டு பயணிக்கிறேன். இந்நிலையைச் சிலர் ஏளனம் செய்தாலும் பலரும் விரும்புகின்றனர்.

எனக்குப் பின்னும் தமிழைக் காக்க மொழி உணர்வாளரை உருவாக்க என் பேச்சை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துகிறேன். எவ்வளவு பெரிய இடமாக இருந்தாலும் என் கொள்கையோடு ஒத்துப்போகும் இடங்களில் மட்டுமே பேசுகிறேன். எதிர்காலத்தில் ஒரு தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி மொழிப்பற்றும், குமுகாயப்பற்றும் நிறைந்த மாணவர்களை உருவாக்கிட உறுதி பூண்டுள்ளேன்.■

• கவி : கண்டராதித்தன்
சித்திரம் : அன்பழகன்



எனது பக்கங்களில்
விளையும் கவிதைகளைச்
சூனியக்காரக் கிழவியிடமிருந்தும்
கூடுவிட்டுக் கூடுபாயும்
குலப்பெண்ணிடமிருந்தும்
திருடித்தருவதாக ஒற்றைக்கண்
சிறுமிவந்து சொல்லும்வரை
ஓரோர் இரவும் ஓசைப்படாமல்
நீ வந்து எழுதிப் போவதாகவே
எண்ணியிருந்தேன் நித்யா. ■

நோபல்
இலக்கியங்கள் அறிமுகம்

தொடர் - 8

இலக்கியத்தின் தோரண வாயில்

• தா. ஜோ. ஜூலியஸ்




# தாமஸ் கோஸ்டா ட்ரான்ஸ்ட்ரோமெர்



ஊர் மெச்சினாலும் மெச்சாவிட்டாலும், பார் புகழ் தன்னை வந்து சேர்ந்தாலும் சேராவிட்டாலும் தன் தொழில் படைப்பதே என்றுதான் அனைத்துப் படைப்புக் கலைஞர்களும் இயங்கிவருகின்றனர். இந்த வரிசையில் 2011ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசை வென்ற தாமஸ் கோஸ்டா ட்ரான்ஸ்ட்ரோமெர் ஆரம்ப வரிசையில் இருக்கின்றார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தாமஸ் கோஸ்டா ட்ரான்ஸ்ட்ரோமெர் ஸ்வீடன் நாட்டுக் கவிஞர் ஆவார். ஸ்வீடன் நாட்டின் நெடுநல்வாடையைத் தம் கவிதைகளில் அடுக்கிப் பிடித்துப் பருவ மாற்றங்களையும் இயற்கையின் அழகினையும் முடுக்கிப் படம் பிடித்துக் காட்டும் வகையில் கவிதைகளைப் படைத்தவர். இவரது படைப்புகளில் மறைபொருளாயும் அன்றாட வாழ்வின் தத்துவங்கள் பலவும் படிம உருவில் பொதிந்து காணப்படுகின்றன என்பதாலேயும் இவர் ஒரு கிறிஸ்துவக் கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிறந்த கவிஞர்களில் இவர் முக்கியமானவர் எனக் கருதப்படுகிறார். ஏனெனில் கவிதை என்ற பெயரில், கட்டுப்பாடுகள் நிறைந்த, இலக்கண மரபுகளை அல்லாமல் சாதாரண எளிய நடையில் பாமரனும் புரிந்துகொள்ளும் வகையில் இவரது கவிதைகளும் மொழி ஆக்கங்களும் இருந்தன. இதனால் இவர் 1990இல் நியூஸ்டாட் பன்னாட்டு விருதும், 2011இல் நோபல் விருதும் பெற்றார்.

1931ஆம் ஆண்டில் ஸ்டாக்ஹோமில் பிறந்த இவர், விவாகரத்து பெற்ற பள்ளி ஆசிரியையாகிய தனது தாய் ஹெல்மியால் வளர்க்கப்பட்டு வந்தார். சோட்ரா லத்தீன் அரங்கத்தில் படிப்பை முடித்த இவர் அப்பொழுதே எழுத்துப் பணியில் இறங்கினார். 17 கவிதைகள் எனும் அவரது முதல் படைப்பு 1954இல் வெளியிடப்பட்டது. அவர் ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகத்தில் படிப்பைத் தொடர்ந்து 1956இல் மனோதத்து வத்தில் பட்டப் படிப்பும் முடித்தார். அதனுடன் வரலாறு, சமயம், இலக்கியம் ஆகியவை பற்றியும் படித்து வந்தார். அதன் பின் ஆறு ஆண்டு களுக்கு மனோதத்துவ நிபுணராக, குழந்தைகள் குற்றவாளிகளுக்குப் பணிபுரிவதும், எழுதுவது மாகக் காலத்தைக் கழித்தார்.

60 மொழிகளுக்கும் மேலாக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள இவரது கவிதைகளால் இவர் உலகம் முழுவதும் விரும்பிப் படிக்கும் கவிஞர் என்ற பட்டம் பெற்றார். இவரது “புதிய கவிதைகள்,” “மிகப்பெரிய பேதம்” எனும் கவிதை நூல்கள் மற்றும் “நினைவுகள் என்னைப் பார்க்கின்றன” எனும் சுய சரிதை நூல் இவரை அமெரிக்க வாசகர்கள் மத்தியில் மிகப் பிரபலம் அடைய வைத்தன.

இவரது ஸ்வீடிஷ் மொழி படைப்புகளை மொழியாக்கம் செய்த ராபர்ட் ப்ளை என்பவருடன் இவருக்கு மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இவர்கள் அன்றாடம் எழுதிக் கொண்ட கடிதங்கள்.. இவர்களது படைப்புகள், மன நிலை, இருப்புச் சூழல் போன்ற விபரங்களைப் பிரதிபலிப்பதாக இருந்ததால் அவையே ஒரு நூலாக அமெரிக்காவில் வெளியிடப்பட்டன. இவரது சிரியா நாட்டு நண்பர் அடுனிஸ் அரேபிய உலகில் தாமசின்

புகழை அவரோடு சேர்ந்து பயணித்து வாசித்துப் பரப்பினார்.

இவர், வெளி உலகைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை என்ற குற்றச்சாட்டினை உணர்ந்து தமது மனித நேயம், உணர்வுகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில், நவீன, சர்ரியலிசக் கவிதைகள் படைத்தார்.

இந்தியாவில் போபாலில் விஷ வாயு தாக்கிப் பேரிடர் ஏற்பட்டதை அறிந்து போபாலுக்கு விரைந்த இவர், அந்த வாயுக் கிடங்கின் வெளியில் நடந்த கவிதை வாசிக்கும் நிகழ்வில் சச்சிதானந்தம் எனும் இந்தியக் கவிஞரோடு சேர்ந்து கவிதையும் வாசித்தார்.

கவிஞர் என்பதோடு இவர் மென்மனம் படைத்தவர் என்பதற்குச் சான்றாக இவரது பியானோ வாசிக்கும் திறம் விளங்கியது. பாரிச வாயு வந்து இவர் செயல் இழந்து கிடந்தபோதும் ஒற்றைக் கையில் இக்கருவியை வாசிக்கக் கற்றுக் கொண்டார். இவரது கவிதைகள் அடங்கிய பாடல்களைக் கொண்ட டாக்ஸ்மெஜா எனும் பெயர் கொண்ட ஆல்பத்தை இவரது பாடகி மகள் பாடி வந்தார். இவரது கவிதைகள் பெரும்பாலும் பாடல் வடிவில் இருந்தன என்பதால் நிறைய இசை அமைப்பாளர்களும் இவரது கவிதைகளுக்கு இசை வடிவம் கொடுக்க முனைந்தனர்.

இவரது படைப்புகள் எனப் பார்த்தால் 17 கவிதைகள், வழியில் ரகசியங்கள், பாதி முடிந்த சொர்க்கம், மணிகளும் பாதச்சுவடுகளும், இருட்டில் பார்ப்பது, பாதைகள், பால்டிக்குகள், உண்மைதாங்கி, காட்டுச் சந்தை சதுக்கம், இருப்போர் மற்றும் இறந்தோருக்காக, சிறை, மிகப்பெரிய பேதம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

நினைவுகள் என்னைப் பார்க்கின்றன எனும் சுய சரிதை, வான் அஞ்சல், அரங்கத்தான் ஆகியவை மிகப் பரவலாகப் பேசப்படும் நூல்கள் ஆகும்.

இவர் செய்த மொழியாக்கங்களில் 20 கவிதைகள், இரவுப் பார்வை, சன்னல்களும் கற்களும், தேர்ந்த கவிதைகள், பால்டிக்குகள் உலக சந்தை சதுக்கம், சோகப் படகு போன்ற பலவும் அடங்கும்.

ஒரு கவிஞரை அவரது படைப்புகளைச் சுவைத்தால் அன்றி நாம் அவரது இயல்பினைப் புரிந்துகொள்ள இயலாது.

“இரு உண்மைகள் ஒன்றை ஒன்று நெருங்கின. ஒன்று உள்ளிருந்து மற்றது வெளியில் இருந்து, அவை சந்திக்கும் புள்ளியில் நமக்கு நம்மை நாமே பார்க்கும் வாய்ப்பு உள்ளது’’ என்பது முன்னுரைகள் என்ற தலைப்பிட்ட கவிதை நூலில் உள்ள கவிதை ஆகும்.

இவரது கவிதைகளை வாசிக்கச் சிறந்த நேரம் அமைதியான தனிமை நிறைந்த இரவு நேரம் மட்டுமே. அது படுக்கையில் இருந்து நம்மை எழச் செய்து நம் வீடு நம்மிடம் என்ன சொல்கிறது, வெளியில் வீசும் காற்று எதை ஊதிவிட்டும் கோதிவிட்டும் போகிறது என்பதைப் புரிய வைப்பவை. ஒவ்வொரு வாசகரும் தனது சொந்த ரகசியங்களை இவரது கவிதைகளில் அடையாளம் கண்டு ரசிக்கலாம்.

இவரது கவிதைகள், சப்பானியக் கவிதை மரபின் தாக்கம் கொண்டவை. ஏனெனில் ஆரம்பத்தில் இவர் ஹைக்கூ கவிதைகளையே எழுதி வந்தார்.

**ஒரு மயக்க நிலையில் வெளியில் நீந்துகிறேன்.**
**பளபளக்கும் இருட்டு நீரினில்**
**மோட்டார் படகு வரும் தடையற்ற ஓசை வருகிறது**
**அது ஒரு நண்பனின் குரல்**
**உனது கல்லறையை நீ**
**எடுத்துக்கொண்டு நட**

என்பது இரு நகரங்கள் எனும் கவிதை நூலில் காணப்படும் கவிதை ஆகும்.

இவரது கவிதைகள், நாம் இருப்பதும் இல்லாததும் வாழ்வதும் - ஒருவித மாறுபட்ட கோணத்தில் என்பதைப் புரிய வைக்கும். உடல் ஒரு பொருளாகவும், மனம் மிதப்பதாகவும், பொருட்களுக்கு உயிர் இருப்பதாகவும், கருதுகோள்கள்கூட உயிரோடு இருப்பவை போல் தோற்றமளிக்கும். இவரது கவிதைகளில் அள்ள அள்ளக் குறையாத கனவுகள், படிமங்கள் துள்ளி விளையாடும்.

சோகப் படகு எனும் கவிதையில்,

**சமையலறை மேசையில் ஒரு**
**பியானோ விசைப்பலகையை**
**நான் வரைந்ததாய்க் கனவு கண்டேன்.**



ஓசையின்றி நான் அதனை வாசித்தேன்.
அண்டை வீட்டார் வந்திருந்து
கேட்டனர் அந்த இசையினை.

*படிமக் கவிஞர் என்பதற்குச் ஒரு சிறு உதாரணம்.*

என் நிழல்
என்னை எடுத்துச் செல்கிறது
கருப்புப் பெட்டியில்
ஒரு வயலினைப் போல்.

*ரகசியங்களும் மறைபொருள்களும் பொதிந்த பொக்கிஷமாய் விளங்கும் இவரது கவிதைகளில் ஒன்று:*

முதல் கதவினை நான் திறக்கிறேன்
அது பரந்த சூரிய ஒளி நிறைந்த அறை
ஒரு கன ரக மோட்டார் வண்டி
கடந்து செல்கிறது
சைனா களிமண் பாண்டங்கள் நடுங்கிட
நான் இரண்டாம் கதவினைத் திறக்கிறேன்.
நண்பர்களே, நீங்கள் கொஞ்சம்
இருட்டினைக் குடித்துவிட்டுத்
தெரிய ஆரம்பித்தீர்கள்.
மூன்றாம் எண் கதவு
ஒரு குறுகிய ஓட்டல் அறை
வரும் வழி தெரிகிறது
தார்ச்சாலையில் ஒரு
விளக்குக் கம்பம் ஒளிர்கிறது
அனுபவி, அது அழகிய
எரிமலைக் குழம்பின் இறுகிய
சாம்பற்கட்டி.!.

*மற்றுமொரு கனவுக் கவிதை,*

நாங்கள் தயாராகி
எங்கள் வீட்டைக் காட்டினோம்
விருந்தாளி எண்ணினார்
நாங்கள் நன்றாக வாழ்வதாய்.
உங்களுக்குள்தான் சேரி இருக்க வேண்டும்
தூக்கத்தில் நடக்கும் நிக்கொதேமுஸ் அந்த
முகவரி நோக்கி வந்துகொண்டு இருக்கிறார்.
யாரிடம் முகவரி உள்ளது.
தெரியாது
ஆனால் அங்குதான்
நாங்கள் சென்றுகொண்டு இருக்கிறோம்.


*இப்படிக் கனவுகள், படிமங்கள், தெருக்கள், வானங்கள், சொர்க்கம் எனப் பலவகை உலகைப் படைத்து நம்மை நினைவு உலகிலிருந்து எங்கோ கூட்டிச் செல்லும் இவரது கவிதைகளைத் தமிழில் கூட சிலர் பொன்னே போல் பொதிந்து மொழியாக்கம் செய்து தங்கள் கவிதையாகச் சொந்தம் கொண்டாடி மகாகவி பட்டங்கள் பெற எத்தனிக்கின்றனர் என்றால் அவை இவரது கவிதைகளின் மாட்சியையே எடுத்துக் காட்டும்.* ■

படைப்பு

# தகவு


கலை இலக்கிய மின்னிதழ்

**படைப்பு 'தகவு' கலை இலக்கிய மின்னிதழ் உங்கள் பெரு ஆதரவினால் பன்னிரண்டு இதழ்களுடன் வெற்றிகரமாக ஒரு வருடத்தைக் கடந்துவிட்டது.**





































**ஆதரவளித்துவரும் அனைத்து வாசிப்பாளர் அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்**